KALKI 14.8.94
ரூ. 3.00

# கல்கி

## மு.க. மாநாடும் வை.கோ. நடைப் பயணமும்...



# நம்பிக்கை, சாதனை, வெற்றி ஆகியவை வாழ்வில் இடம் பெற... வழிகாட்டுகிறது எல்டிசி.



## ஃபிக்சட் டெபாசிட் & குமுலேடிவ் டெபாசிட் சேமிப்புக்குப் பாதுகாப்பான வாய்ப்புகள்

வாழ்க்கையில் எத்தனையோ சவால்கள் உங்களை எதிர்நோக்குகின்றன. அவற்றை நீங்கள் சந்திக்கும் அதே நேரத்தில் உங்கள் பணத்தை நிர்வகிக்கும் பொறுப்பை எல்டிசி யிடம் விட்டு விடுங்கள். உங்கள் பணத்தின் வளர்ச்சிக்கும், உங்கள் முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக விளங்கும் இரண்டு டெபாசிட் திட்டங்களை எல்டிசி உங்களுக்கு அளிக்கிறது.

நீங்கள் வாழ்வில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எல்டிசி தரும் பாதுகாப்பு உங்களை ஊக்குவிக்கிறது. எனவே, நீங்கள் நம்பிக்கையோடு முன்னேற முடியும்.

**எல்டிசி.** உங்கள் வெற்றிக்கு உறுதுணை.

உங்கள் வளமைக்கு வழிகாட்டும் ஐந்து வெவ்வேறு டெபாசிட் திட்டங்களை லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட் உங்களுக்கு அளிக்கிறது: ஃபிக்சட் டெபாசிட், குமுலேடிவ் டெபாசிட், ரொக்க சர்ட்டிஃபிகேட், ரெக்கரிங் டெபாசிட், பென்ஷனர் பெனிஃபிட் திட்டம். இவற்றின் மூலம் ஒவ்வொரு டெபாசிட்தாரரும் அடைபவை: சிறப்பான பலன்கள், தனிப்பட்ட சேவைகள்.

**1993-94**ல் எல்டிசியின் டெபாசிட்டுகள் ஒரே ஆண்டில் 100% வளர்ச்சியைப் பெற்றுள்ளதற்கு இவைதான் காரணம். இந்த வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு எல்டிசி மற்றுமொரு லட்சியத்தை நோக்கி முன்னேறுகிறது: 31 மார்ச் 1995 அன்று அடையத் திட்டமிட்டுள்ள டெபாசிட் இலக்கு ரூ.25 கோடி.

**பி.ஜி. சரண்யன்**
சேர்மன்

டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன!

**LTC லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்**

**கார்ப்பொரேட் அலுவலகம்:**
37/1, கதீட்ரல் சாலை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி எதிரில்
சென்னை 600 086.
தொ.பே: 8281826/8281930

**கிளைகள்:** சென்னை • அம்பத்தூர், போன்: 681860 • அண்ணா நகர், போன்: 6212047 • குரோம்பேட்டை, போன்: 401267 • கே.கே. நகர், போன்: 4833917 • மடிப்பாக்கம், போன்: 2346586 • நங்கநல்லூர், போன்: 2348593 & 2346066 • விருகம்பாக்கம், போன்: 4830846 • மேற்கு மாம்பலம், போன்: 4830150 • திருச்சி, போன்: 25323 • மதுரை, போன்: 30626 • கோயம்புத்தூர், போன்: 43576 • திருநெல்வேலி, போன்: 322073 • காரைக்குடி, போன்: 2023 • வேலூர், போன்: 21902 • பாண்டிச்சேரி, போன்: 31859 • பெங்களூர், போன்: 366433.

***எல்டிசி: உங்கள் வாழ்வின் வளமைக்கு பொன்னான பாதை.***

10.3.94 தேதியிட்ட ஜூனியர் விகடன் இதழில் வெளியான 25.10.93 தேதியிட்ட சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி.

ADWAVE/LTC/4728 TAM A

# குங்குமத்துக்கு வருகிறார் சாவி!

● கவிஞர் கண்ணதாசன் மறைந்து விட்டாலும், தி. நகரில் உள்ள அவரது வீட்டில் கண்ணதாசன், அரசவைக் கவிஞர் என்ற பெயர்ப் பலகையை அப்படியே இன்னும் வைத்திருக்கிறார்கள்.

● வெங்கட்நாராயணா ரோடில் உள்ள குமரி அனந்தனின் அலுவலகத்தில் சனிக் கிழமைதோறும் மாலை ஆறு மணிக்கு தமிழறிஞர்களைக் கொண்டு, இலக்கிய நிகழ்ச்சிகளை அவர் நடத்தி வருகிறார்.

● இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நிரந்தர தியேட்டர்களும், சினிமா கொட்டகைகளுமாய் 13,335 இருந்தன. இப்போது 12,985 ஆகக் குறைந்துவிட்டன. நம் நாட்டில் அதிக சினிமா தியேட்டர்கள் உள்ள மாநிலம் ஆந்திரா. அடுத்து தமிழகம். எம்.ஜி.ஆரும், என்.டி.ஆரும் ஏன் முதல்வர் ஆனார்கள் என்று புரிகிறதல்லவா?

● கீழே உள்ள தாகூர் சித்திரத்தை வரைந்த வரும் புகழ் பெற்ற ஒரு வங்காளிதான். அவர் யாராக இருக்கும்?

ஜோதிபாசு? மிருணாள் சென்? கஷ்மிதா சென்? மூவருமில்லை. சத்யஜித் ரே!

● மாணவப் பருவத்தின் போது 'நீங்களும் சினிமாவும்' என்ற பெயரில் சினிமா பத்திரிகை நடத்தினார் ஒரு தொழிலதிபர். 4000 பிரதிகள் விற்பனையான அந்தப் பத்திரிகையில் அப்போது சென்னையில் வெளியான ஆங்கிலப் படங்களைப் பற்றிய விவரங்கள் இடம்பெற்றன. விலை: ஆறணா. அந்தத் தொழிலதிபர் : டி.டி. வாசு!

● என்ன விலை நிர்ணயித்தாலும், திருப்பதி லட்டு வாங்குவதை யாரும் நிறுத்தப் போவதில்லை என்பது ஒருபுறம் இருக்க, இப்போதெல்லாம், சென்னையிலேயே ஒரிஜினல் திருப்பதி லட்டு விற்பனை செய்யப்படுகிறது. எங்கே? சென்னை, வெங்கட்நாராயணா சாலையில் உள்ள திருமலை - திருப்பதி தேவஸ்தான தகவல் மையத்தில்! ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று திருப்பதியிலிருந்து லட்டு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.



● சன் டீ.வி. 'ஜோடிப் பொருத்தம்' புகழ் எம். ஜெ. ரேகோ சின்னத் திரையிலிருந்து பெரியத் திரைக்கு வருகிறார். நடிகர் தியாகராஜன் தயாரிக்கும் 'ஆணழகன்' படத்தில் நடிக்கிறார்.



● 'தமிழ் வாழ்க' என்று முழங்குகிறது சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடம். ஆனால் மேற்கு சைதாப்பேட்டையில் ஒரு தெருவுக்கு 'பாரதிதாசன் தெரு' என்று இருந்த பெயரை 'கார்ப்பரேஷன் தெரு' என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறது. இது எந்த வகைத் தமிழ்த் தொண்டோ?




• சாவி

● குங்குமம் பத்திரிகைக்கு, சாவி மீண்டும் ஆசிரியர் பொறுப் பேற்கப் போகிறார். கலைஞரே பர்சனலாய்க் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த ஏற்பாடாம். அப்படியென்றால் சாவி பத்திரிகை? அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது!

- ஜூலி




அப்பாடா எழுதி முடிச்சுட்டேன்... படிச்சுட்டு சந்தோஷப் படப்போறாங்க...
டமார்...
பாதிக்கு பத்து ஊழல் நடந்ததற்கு அவனும்தான் காரணம்... அவனுக்கு மட்டும் செல்லம் கொடுக்கிற... மடியை விட்டு இறக்கிவிடு...
எதிர்க் கட்சிகள்
காங்கிரஸ்
என்னை மக்கு மடையன்னு திட்டிட்டு இருந்திங்கன்னா வீட்டைவிட்டு ஓடிடுவேன்...
என் மரத்தை அடிபோடவா வெட்டிச் சாய்க்கப் பார்க்கிறீங்க...? அதான் நடக்காது... கொஞ்சம் கொஞ்சமா நானே தான் வெட்டிடுவேன்...
அ.இ.அ.தி.மு.க ஆட்சி
ஊழல்கள்
பா.ம.க.
போராட்டங்கள்



# கல்கி




1994
ஆகஸ்ட் 14
பவ
ஆடி 29
மலர் : 53
இதழ் : 2


தமிழ்த்திரு நாடு
தன்னைப்பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. -பாரதியார்.

## ஹர்ஷத் மேத்தாவின் ஹஹஹ்ஹஹா!

கடந்த ஏழெட்டு நாட்களாக நாடாளுமன்றத்தில் நமது பிரதிநிதிகள் நடந்து கொள்ளும் போக்கு நாட்டுக்கு நல்லதல்ல. ஒரு வேலையும் நடைபெறாமல் மக்களின் வரிப்பணம்தான் லட்சக்கணக்கில் விரயமாகிக் கொண்டிருக்கிறது.

பங்கு பத்திர ஊழல் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக் குழு தந்த முடிவுகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கையை அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. துரதிர்ஷ்டவசமாக இதில் சில சொற்கள் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் முடிவுகளை அலட்சியம் செய்வது போலவும் குறை கூறுவது போலவும் அமைந்துவிட, எதிர்க்கட்சியினருக்குத் தார்மீகக் கோபம் உண்டானது இயல்பே. ஆனால் அரசுத் தரப்பில் ஆட்சேபகரமான அந்த வாசகங்களை நீக்கிவிடலாம் என்பதாகச் சொல்லி வருத்தம் தெரிவித்த பிறகும் பிடிவாதமாக அறிக்கையையே வாபஸ் பெற வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தின் இந்தத் தொடரைப் புறக்கணிப்பதாகவும், எல்லா நாடாளுமன்றக் குழுக்களிலிருந்தும் ராஜினாமா செய்வதாகவும் எதிர்க்கட்சிகள் முரண்டு பிடிப்பது பரபரப்பு அரசியலே தவிர, நாட்டு நலனில் அக்கறை கொண்ட காரியமல்ல. ஜனநாயகம் என்பது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டு போகும் போதுதான் தழைக்கும்; வீண் பிடிவாதம் ஜனநாயகத்தை அழிக்கும்.

விசாரணை கமிஷன் என்று அமைக்கப்பட்டால் அதன் முடிவுகளை அரசு கவனமுடன் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்பது மெய்தான்; ஆனால் கமிஷனின் முடிவுகளையோ சிபாரிசுகளையோ வரிக்கு வரி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இங்கும் அப்படித்தான், சிலவற்றை நிராகரித்தாலும் பலவற்றை ஏற்று, என்னென்ன நடவடிக்கைகள் அதன்மீது எடுக்கப்பட்டுள்ளன என்று அரசின் அறிக்கை பட்டியலிடுகிறது.

நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் அறிக்கையே இரண்டு மூன்று தடவை பலரது கருத்துக்களை அனுசரித்துத் திருத்தி எழுதப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. பங்கு பத்திர ஊழலில் பணம் என்ன ஆயிற்று என்பதை அதனாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. நடந்திருக்கும் அநீதிகளுக்குக் காரணம், பல ஆண்டுகளாக இருந்து வரும் நடைமுறைகளிலும் விதி முறைகளிலும் உள்ள ஓட்டைகளே என்று கூறுகிறது. இந்த ஓட்டைகளை அடைப்பதுடன் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகத்தான் அரசும் தனது நடவடிக்கை அறிக்கையில் தெரியப்படுத்தியுள்ளது.

பிரச்னை என்னவென்றால் நடந்திருக்கும் ஊழலுக்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்று இரண்டு மூன்று தலைகளாவது உருள வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் எண்ணுகின்றனர். அதில் அரசியல் ஆதாயம் நிறையவே கிடைக்கும் என்று கணக்குப் போடுகின்றனர். காங்கிரஸுக்குள்ளேயும் கூட ஓரிரு தலைகள் உருண்டால் நல்லது; காங்கிரஸின் மதிப்பு உயரும் என்ற கருத்து நிலவுகிறது! உட்கட்சிப் பூசல் இதற்குத் துணை நிற்கிறது. ராவும் ஓரிரு மந்திரிகளைத் துறக்கத் தயாராக இருக்கலாம். ஆனால் மன்மோகன்சிங்கை விட்டுவிட அவருக்கு மனமில்லை. நிதி அமைச்சரைக் காபந்து செய்து சங்கரானந்த் போன்ற ஓரிருவரை வெட்டிவிடத் துணிவு இல்லை. தார்மீகப் பொறுப்பு என்றால் நிதி அமைச்சர்தானே முதல் பலிகடா ஆகவேண்டும்! மன்மோகன்சிங் காரணமாகத்தான் பிறரும் தப்புகிறார்கள் என்று நம்ப இடமிருக்கிறது.

மந்திரிகள் விஷயம் இப்படியெனில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஓய்வு பெற்று வீட்டுக்குப் போய்விட்டார்கள், அதனால் அவர்கள் மீது நடவடிக்கை இல்லை என்பதை ஒப்புக் கொள்வதானால், 'நடந்ததை மறந்து விடுங்கள்; இனி நடக்காது என்று உறுதி கூறுகிறேன்' என்று அரசு போலவே ஹர்ஷத் மேத்தாவும் கூற, அவரையும் மன்னித்து விட்டுவிடலாமே!

மந்திரிகள் தலைகள் உருளுகிறதோ இல்லையோ, உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மக்களும் எதிர்க்கட்சிகளும் நம்பும்படி அரசு நடந்து கொள்ளட்டும்; எதிர்க்கட்சிகளும் இறங்கி வந்து நாடாளுமன்றம் நன்கு இயங்க வழிவகுக்கட்டும்.



**மதுரை தி.மு.க. மாநாட்டைப் பார்க்கப் போன நிருபரும் வைகோ. நெடும்பயணத்தைக் கவனிக்கச் சென்ற நிருபரும், போய் வந்த பின் ஆபீஸில் அரட்டை அரங்கம் நடத்தினார்கள். அது அப்படியே இங்கு அரங்கேறுகிறது.**

# மு.க. மாநாடும்

"என்னய்யா, வை. கோ. நடைப் பயணத்தை சும்மா பார்க்கத்தானே போய் வந்தே. என்னமோ நீயே நூறு மைல் நடந்தா மாதிரி முனகிட்டு வர்றே?"

"அட போப்பா. அவரோட அரை நாள் - அஞ்சாறு கிலோ மீட்டர் நடக்கறதுக்குள்ளே நம்ம தாவு தீந்து போச்சு. அவரு சும்மா ஜம்முன்னு கேன்வாஸ் ஷூவெல்லாம் மாட்டிக்கினு 'டாக் டாக்'குனு அரேபிய குதிரை கணக்கா நடக்கறாரு. நம்மளைச் சொல்லு! வை.கோ. முகத்துல களைப்பிருந்தாலும் பேச்சு சும்மா குத்தாலம் அருவி கணக்கா ஜோரா வருது. படு பயங்கர உற்சாகத்துல இருக்காரு மனுஷன். போகட்டும். உன் விஷயம் என்ன ஆச்சு? கலைஞர் அசத்திட்டாரா?"

"பின்னே? கும்பல்னா கும்பல் மகாமகம் கெட்டுது வாத்யாரே! மண்டல மாநாடுன்னு பேர்தான். தமிழ்நாட்டுல இருக்கற அத்தனை திமுக அனுதாபிகளும் பிரஸெண்ட் ஆயிட்டாங்கன்னா பாத்துக்க. சத்தியமா கலைஞரே எதிர்பார்த்திருக்க மாட்டாரு. ஹோட்டல், தெரு ஓர வண்டிக் கடைங்க, ஒயின்ஷாப், லாட் ஜுக்காரங்க காட்டுல மழை. இதான் சாக்குன்னு எல்லாத்தையும் டபுள் ரேட் ஆக்கிட் டாங்க. சோடா கெட்ட கேட்டுக்கு நாலரை ரூபான்னா பாத்துக்க. போகட்டும், வை.கோ. ஒரு நாளைக்கு எத்தினி மைல் நடக்கறாரு?"

• கட் அவுட் புரட்சி : ஜெக்குப் போட்டி?





• உற்சாக ....



... ஊர்வலம்



• கலைஞருக்காகக் காத்திருக்கும் மகளிர் அணி

"குறைஞ்சது இருவது கிலோ மீட்டர். டெய்லி டாக்டர் செக் பண்றாரு. நான் பார்த்த அன்னிக்குக் கொஞ்சம் ப்ளெட் ப்ரெஷர் ஏறி இருந்தது. கால்ல லேசா கொப்புளம்... ஆனா மனுஷன் எதைப் பத்தியும் கவலைப்படறதா தெரியலை. சரி, அதை விடு. முன்னெல்லாம் தி.மு.க. மாநாட்டுக்கு கலைஞர் குடும்பத்தோட வருவாரே. இப்பவும் அப்படித்தானா?"


"பின்னே? ஒய்ஃபு, பொண்ணு எல்லாம் மொத ரோல முழு மீட்டிங்குக்கும் உட்கார்ந்திருந் தாங்க வாத்யாரே! கட்சிக் கொடி கட்றது, ஸ்பீக்கர் பல்ப் விவகாரமெல்லாம் அழகிரியே முன்னநின்னு செஞ்சாருன்னா பாத்துக்க. ஸ்டாலின் வழக்கம் போல டை கட்டிக்கினு இளைஞர் அணி ஊர்வலத் தலைமையோட சரி. ஆனா ஒண்ணுப்பா... கூச்சல், குழப்பம், கசமுசா இல்லாம இத்தனாம் பெரிய கும்பலை வெச்சி சமாளிச்சிருந்தாங்களே, அதைச் சொல்லணும். பொதுக் குழுக்காரங்க அத்தனை பேருக்கும் பிரியாணி போட்டாங்களாம் நைனா. நம்மளை உள்ள விடல... அதான் படிச்சிருப்



# வை.கோ. நடைப் பயணமும்...

பியே பேப்பால. வை.கோ. ஊர்வலத்துல கூட, நடக்கறவங்களுக்கு பிஸ்லேரி வாட்டர் சப்ளை யாமே? பயங்கரமா முன்னேறிட்டாங்கப்பா."

"கண்ட தண்ணி குடிச்சா ஒண்ணு கெடக்க ஒண்ணு



• தோழமைக் கட்சியினர் புடைசூழ : திருநாவுக்கரசு பேசுகிறார்

ஆயிடுமில்ல? ஆயிரத்தை நூறு பேரு நடந்து வர்றாங்க. அம்பது லேடீஸ் வேற. பெரிசா ஒரு ஸின்டெக்ஸ் தொட்டில தண்ணி வெச்சி, ஒரு வண்டியே கொண்டாந்துடறாங்க. அது கிடக்கட்டும். தி.மு.க. மாநாட்டுல காளிமுத்து பேசறாருன்னு போட்டு, கரெக்டா மீட்டிங் அன்னிக்கு அண்ணன் கட்சி மாறிட்டாரு? வை. கோ. குருப்ல இது பத்தி செமை கிண்டல்."

"ஆனா தி.மு.க. பெரும் புள்ளிங்க இதை முன்னாடியே எதிர்பார்த்த மாதிரிதான் பேசிக்கிறாங்க. இன்ன தேதில காளிமுத்து, அம்மாவை அப்ரோச் பண்ணாரு, இன்ன தேதில பேரம் நடந்தது, இன்ன தேதில அஞ்சு லட்ச ரூபாய் நன்கொடை குடுத்தாருன்னு சும்மா, எழுதி வெச்சாப்பல சொல்றாங்கப்பா. அந்தாள் இருந்தாலும் ஒண்ணுதான், இல்லாட்டாலும் ஒண்ணுதான்ற மாதிரிதான் எல்லாரும் பேசினாங்க. கலைஞர் இதை ஒண்ணும் ஸீரியஸா எடுத்துக்கிட்டதாத் தெரியலை. அவரு வழக்கம் போல தமாஷாத் தான் பேசிட்டுப் போயிட்டாரு. தொண்டருங்க தான்... கச்சா முச்சான்னு கெட்ட வார்த்தை சொல்லி திட்டறாங்க. சரி, வை.கோ. வெறும நடக்கற தோட சரியா? ஏதாவது மீட்டிங் பேச றாரா?"

"மாவட்டத்துக்கு ஒரு இடத்துல மீட்டிங். அது தவிர, போற வழியெல்லாம் கொடி யேற்றம். அவ்ளோதான். நைட்ல எதனா கல்யாண மண்டபத்துல தங்கறாரு. திருநெல்வேலில நான் பார்த்தப்ப, ஜங்ஷன் பாலத்துக்கு அடில, ஒரு மண்டபத்துல தங்கியிருந்தாரு. அந்த மண்டபத்துல வ.உ.சி., பாரதியாரெல்லாம் முன்ன பேசியிருக்காங்களாம். காலைல ஆத்துல நீச்சலடிக்கறாருங்க! அப்புறம் தொண்டர்களோட - அவங்க சாப்பிடற அதே சாப்பாடு. அது சரி, மாநாட்டுல வை.கோ.வை நார்நாரா கிழிச்சுட்டாங்களாமே?"

"பின்னே? பேச்சாளர்களுக்கு அது ஒரு சூடான சப்ஜெக்ட் இல்லியா? வெற்றி கொண்டான்னு ஒத்தர் பேசினார் வாத்தியாரே! 'வை.கோ.வை, கலைஞர் ஏன் போர்வாள்னு கூப்ட்டார் தெரியுமா? வாள் என்னதான் கூர்மையா இருந்தாலும் தானா இயங்காது. இயக்கறவன் திறமை பொறுத்துதான் வாளுக்கு மரியாதை'ன்னாரு பாரு, காது பிஞ்சிக்கிறாப்பல விஸிலு! பொம்பளைங்க விஸிலடிக்கறாங்க பிரதர்! வை.கோவுக்கு லேடீஸ் ஆதரவு எப்படி இருக்கு?"

"செம ஆச்சர்யம்யா. பொம்பளைங்க ரோட்ல நின்னு அவர் போவ சொல்ல கையாட்டறாங்க! வயல் வேலையை விட்டுட்டு ஓடி வர்றாங்க. நெல்லையப்பர் கோவிலாண்ட ஒரு லேடிகிட்ட பேச்சு குடுத்தேன். 'வை.கோ. ஒரு ஒழுக்கமான அரசியல்வாதி. லேடீஸைப் பார்த்து வழியறதில்லை'ன்னாங்க பாரு, அசந்துட்டேன். நல்ல அப்ஸர்வேஷன் இருக்குப்பா, மக்கள்கிட்ட. மதுரைல எப்படி? லேடீஸ் ஜாஸ்தியா?"

"கொறவுதான். பெரும்பாலும் கறுப்பு - சிவப்பு சேலை மாட்டி வந்தவங்கதான். கட்சிக்காரங்க தவிர பப்ளிக் ஸைடிலேர்ந்து லேடீஸ் எத்தனை ஆதரவுன்னு சொல்ல முடியலை. அது தவிர, இருந்த லேடீஸுக்கே மீட்டிங்ல என்ன பேசறாங்கன்னு சரியாப் புரியலை போலருக்கு. வெளில நிறைய பேர் கைரேகை, கம்ப்யூட்டர் ரேகை ஜோசியம்

• [illegible] பரிசோதிக்கிறார்



# மகாநிதி

ஆழ்வார்பெட் பெனிஃபிட் ஃபண்ட் - 3 வருட டெபாசிட்டுகளுக்கு 21% வரை வட்டி வழங்குகிறது. அந்த வட்டியும் மாதம்தோறும் அளிக்கப்படுகிறது. இதை நிலையானதொரு வருமானம் போலவே நீங்கள் பெற்று மகிழலாம். ABFL 10,000-க்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன், நற்பெயரும் நன்மதிப்பும் பெற்ற நல்லதொரு நிதி நிறுவனம் ஆகும். இது மிக மகத்தானதொரு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது - டெபாசிட்டுகளில் 18 மடங்கு உயர்வு... மேலும் மூலதனம் மற்றும் ரிசர்வுகளில் 280% உயர்வு... அதுவும் மிகக் குறுகிய காலத்தில்! வீட்டு வசதிக் கடன்கள், நகைக் கடன்கள், பிக்சட் டெபாசிட், இரட்டைப் பயன் (Double Benefit) டெபாசிட் மற்றும் பென்ஷன் தாரர்களின் பெட் டெபாசிட் திட்டங்கள் போன்ற பலப்பல திட்டங்களை இந்த நிறுவனம் அளிக்கிறது.

**21%**
**வட்டி**

## வீடுகளின் பேரில்
## க ட ன்

- சென்னை நகர எல்லைக்குள் உள்ள ஃபிளாட்டுகள் / வீடுகளுக்கு
- பூர்த்தி செய்ய வேண்டிய படிவங்கள் மிகக் குறைவு
- விரைவாகப் பரிசீலனை செய்து வழங்கப்படும்
- கடனைத் திருப்பிச் செலுத்த இணக்கமான திட்டம்

Insight-4197

நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனம்

**ஆழ்வார்பெட் பெனிஃபிட் ஃபண்ட் லிமிடெட்**

கூட்டாண்மை அலுவலகம் : 43-B, சி.பி. ராமசாமி ரோடு
ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018
தொலைபேசி : 499 4809
உறுப்பினர்களுக்கு மட்டும்

கிளைகள் : ★ அண்ணா நகர் ★ அடையாறு ★ அசோக் நகர் ★ தி. நகர் ★ நங்கநல்லூர் ★ தாம்பரம் ★ ஜார்ஜ் டவுன் ★ பாண்டிச்சேரி ★ கோயம்புத்தூர்



• புறப்படும் நடைப்பயணம்...

பார்த்துட்டிருந்தாங்க. ஒரு பொம்பளை என்னாண்ட கேட்டிச்சி, 'சமூகநீதி, சமூக நீதின்றாங்களே. ஒரு வரில அது என்னன்னு சொல்லு தம்பி' அப்படீன்னு. பேஜாராப் போச்சு. இடஒதுக்கீடுதான் சமூக நீதின்னா, அதான் குடுத்துட்டாங்களேன்றாங்க. அது போதாது, கோர்ட்டுக்குப் போக இடமில்லாம அரசியல் சாசனத்தைத் திருத்தணும். அது வரைக்கும் சமூகநீதிப் போராட்டத்தை விட மாட்டோம்ங்கறாங்க. நம்மை மாதிரி ஒரு பத்திரிகைக்காரர் சொன்னார் : "பேசாம நூறு பர்ஸென்ட்டே குடுத்துட்டாலும் கூட, அப்புறமும் ஏதாவது கேப்பாங்க" அப்படீன்னு. கும்பல் கூட்டின வரைக்கும் ஓக்கேன்னுதான் சொல்லணும். ஆனா யாருக்கும் என்ன பேசறதுன்றதுல தெளிவான கெய்டன்ஸ் இல்லைன்னு தோணுது. சமூகநீதி பத்தி பேசி, அவங்களுக்கே போரடிச்சிடுச்சின்னா சட்டுன்னு வை.கோவின் அநீதி, ஜெயலலிதா அராஜகம்னு ஆரம்பிச்சிடறாங்க. அது சரி, வை.கோ. என்னதான் பேசறார்?"

"முதல்ல கலைஞரை ஒரு பிடி பிடிக்கறாரு. அப்புறம் ஜெ. அரசு பத்தி கடுமையா விமர்சனம்... அப்புறம் பத்திரிகைக்காரங்க அவரைக் கிண்டல் பண்றது பத்தி வருத்தமா நாலு வரி... நம்மைப் பத்திக் கூட சொன்னாரு. வீட்ல இந்த வாரு வார்றீங்களேன்னாரு. ஒரு விஷயம் சொல்லணும்மா... நடைபயணத்தும் போது போக்குவரத்து பாதிக்காம பாத்துக்கறதுல ரொம்ப கவனமா இருக்காரு... கேக்க மறந்துட்டனே, தி.மு.க. பேரணி எப்படி இருந்துது? மூணு மணி நேரம் பேரணின்னாங்களே?"

"யார் சொன்னது? ஈவினிங் ஆறு மணிலேர்ந்து நைட் பன்னெண்டு தாண்டிப் போச்சய்யா. அதுக்கு மேலயும் இருந்திருக்குமோ என்னவோ. நம்மால முடியல. கும்பல்ல நிக்கறதுக்குள்ள தாவு தீந்து போயிடுச்சு. ஆனா, கலைஞர் என்னடான்னா ஒரு சோர்வு இல்லாம, மூஞ்சி சுளிக்காம... கையாட்டிக்கிட்டே நின்னாரு. கோரிப்பாளையம் ரவுண்டானாவாண்ட சிம்பிளா ஒரு மேடை போட்டு, கலைஞர், அன்பழகன், மனோகரன், வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன் இன்னும் ஒண்ணு ரெண்டு பேர் நின்னுக்கிட்டே இருந்தாங்க. மக்களுக்கு நிக்கக் கூட இடம் இல்லாம எதிர இருந்த தேவர் சிலை தலைல கூட ஏறி நின்னுட்டிருந்தாங்க. உற்சாகத்துல ஒருத்தன் 'தலைவா'ன்னு ரோட்ல வுழுந்து கும்பிடறான், ஒருத்தன் மேடைக்கு ஃபிளையிங் கிஸ் அனுப்பறான்... 'குஜால்'தான்! திடீர்னு ஒரு அம்மா நாலு வயசுக் குழந்தையைத் தூக்கி, பேர் வைங்கன்றாங்க. கலைஞர் மறிவாணன்னு பேர் வெச்சார். இருக்கட்டும், இவ்ளோதூரம் நடைப்பயணம் போய், அரசியல்ரீதியா என்னதான் நடக்கும்னு நினைக்கறார் வை.கோ?"

"அவர்கிட்டேயே கேட்டேனே. தேர்தல் சமயத்துல 'ஸ்டண்ட்' மாதிரி இப்படி நடைபயணமெல்லாம் அங்கங்கே நடக்கும்; சம்பந்தமில்லாம இப்ப நடந்து என்ன பிரயோஜனம் சார்?' அப்படீன்னேன். அவரு என்ன சொல்றார் தெரியுமா? எனக்கு ஆதாயம் முக்கியமில்லை. ஜெயலலிதாவோட ஊழல் ஆட்சியை எதிர்த்துக்

கலைஞர் குடும்பத்தார் : முதல் வரிசையில்



தான் இப்பயணம் அப்பமுங்கறாரு."

"மெட்ராஸுக்கு எப்ப வராராம்?"

"செப்டெம்பர் 15ஆம் தேதி. அண்ணா பிறந்த நாளன்னிக்கு ஒரு பேரணி யோட உள்ளே நுழைவாராம். சௌத் ஸைடுல வை.கோவுக்கு ஆதரவு கொஞ்சம் நிறையவே தெரியுது. இருந்தாலும் மெட்ராஸைப் பத்திச் சொல்ல முடியாது. வழக்கமா அண்ணா பிறந்த நாள் சமயம், திமுக. முப்பெரும் விழா கொண்டாடுவாங்க. அதோட இவர் பேரணியும் சேர்ந்து என்ன கலக்கப் போவுதோ? போகட்டும். கடைசியா ஒரு கேள்வி. மதுரை மாநாட்டுக்கப்புறம் திமுக தொண்டர்களுக்கு ஏதாவது புது உற்சாகம் கிடைச்ச மாதிரி தெரியுதா?"

"உற்சாகம் கிடைக்கிறது இருக்கட்டும். திரும்பி வர டிக்கெட் கிடைக்கறதுக்குள்ள உயிரே போயிடுச்சி. கலைஞருக்கு, நம்ம பலம் என்னன்னு சென்ஸஸ் பார்க்கத்தான் இந்த மாநாடு. தொண்டர்களுக்கோ, ஏதாவது புதுசா அறிவிப்பு வருமா, காரசாரமா விஷயம் ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கற ஆவல். 'விரைவில் மாபெரும் போராட்டம் வரும்'னு சிலர் பேசினாங்க. எதுக்கு, எங்க, எப்ப, எப்படின்னு ஒண்ணும் விளக்கமா சொல்லாததால புஸ்ஸுன்னு போயிடிச்சி. தவிர, பொதுக் குழுல வீரபாண்டி ஆறுமுகம் ஏதோ எதிர்த்துக் கேள்வி கேட்டாருன்ற நியூஸ் வர, தொண்டர்கள் பயங்கரமா அப்ஸெட் ஆயிட்டாங்க. வை.கோவோட சேர்ந்துடுவாருன்னெல்லாம் அவங்க கலவரமா பேசிக் கிட்டது பார்க்கப் பாவமா இருந்தது. அப்பப்ப, பழனிவேல் ராஜன், ஆறுமுகத்தோட தனியா பேசிக் கிட்டது வேற நேர்ல பார்க்கறவங்களுக்கு விபரீத கற்பனையெல்லாம் கொடுத்தது. இன்ஃபாக்ட், இந்த மாநாட்டுக்கு மூல காரணமே பி.டி.ஆர்.பி. தான்னாலும் மக்கள் ரொம்ப மிரண்டிருக்கிறது நல்லாத் தெரியுதுப்பா. நடுவுல வேற, யாரோ ஒரு பேச்சாளர்



• வீரபாண்டி • பழனிவேல்ராஜன் : நெருக்கமே நெருக்கம்

கலைஞருக்குப் பின்னால்... அப்படின்னு ஆரம்பிக்க, அனைத்துக் கட்சிக் கூட்டத்துல லத்தீஃப், கலை ஞருக்கு வயசாயிடுச்சின்ற ரீதில பேசப் போக, பயங்கரமா கடுப்பாயிட்டாங்க. 'கலைஞருக்குப் பிறகு'ன்னு நினைச்சிப் பார்க்க பெரும்பாலும் யாருக்கும் தைரியம் இல்லை. லோக்கல் பிரிண்டர் ஒருத்தர் சொன்னாரு... 'எதுக்கு இந்த மாநாடுன்னே புரியலைங்க. 'தலைவரே அதைரியப்படாதீங்க'; 'கவலைப்படாதீங்க'ன்னு இவங்களே அவரை சோர்வாக்கிடறாங்க. அவரை பயமுறுத்தவா மூணு நாள் மாநாடு?' அப்படின்னு."

"ஸ்டாலின் ஆதரவு எப்படி இருக்குது?"

"பேரைச் சொன்னா, பத்து பதினைஞ்சு விஸில். வேறென்ன?"

"ரைட். ரொம்ப நேரமாயிடுச்சி. கிளம்பட்டா?"

"போய் அயோடெக்ஸ் தேய்ச்சிட்டுப் படு. அஞ்சு கிலோ மீட்டர் நடந்ததற்கு அயோடெக்ஸ் கேட்ட மாவீரனேன்னு வரவேற்பு பேனரோட ஒய்ஃப் காத்துட்டிருப்பாங்க."

— ப்ரியன், கிச்சா.

அட்டை வண்ணப்படங்கள் : மு.க.- யோகா, வை.கோ- நன்றி: போர்வாள்

மதுரை மாநாடு : 'தேர்ட்ஜ'

வை.கோ. பயணம் : ராஜன்.

---

"மன்னா! தங்களது 'புஜபல'பராக்கிரமத்துக்கு என்ன காரணம்?"

"ஹி! ஹி! மாறு வேடத்தில் போய் காசு இல்லாமல் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு மாவாட்டி விட்டு வருவது தான் காரணம்னு நினைக்கிறேன்."

- சரவணகுமார்.






# கப்ஸா கலக்காத கனவு!

**— போட்டி முடிவு**

**ரூ. 250/- பரிசு பெறும் கனவு :**

**சா**ரலுடன் கூடிய சுகமான மாலை வேளை. என் அப்பாவுடன் ஒரு காட்டுப் பாதையில் கைகோர்த்து நடந்து கொண்டிருக்கிறேன். நடந்தபடியே அவர் ஜே. கிருஷ்ணமூர்த்தியை விளக்கிக் கொண்டிருக்கிறார். தூரத்தில் சன்னமான புல்லாங்குழல் ஓசை. கிட்டே போய்ப் பார்த்தால் மாலி! ஏகாந்தமாக ஒரு மதகில் அமர்ந்து நாட்டைக் குறிஞ்சி பொழிந்து கொண்டிருக்கிறார். சட்டென்று நிறுத்தி - எழுந்து வந்து எங்கள் கையைப் பிடிக்கிறார்... ஏனோ எங்கள் கண்ணில் நீர் சுரக்கிறது. அப்பா மட்டும் அங்கேயே தங்கி விட, நான் மட்டும் கனத்த மனத்துடன் திரும்புகிறேன். கனவு கலைகிறது...

இருபது வருடங்களுக்கு முன் இறந்து விட்ட என் அப்பா இப்போது இருந்தால் அவரோடு எத்தனையோ உயர்ந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளலாமே என்ற ஏக்கத்தில் மனம் கனக்கிறது...

*- ராஜா, சென்னை - 16.*

**ஆறுதல் பரிசு தலா ரூ. 25/- பெறும் கனவுகள்**

● கல்லூரிக் கலை விழா. பாட்டுப் போட்டியில் நான் முதல் பரிசு. பரிசளிப்பவர் தமிழக முதல்வர்! அவரிடம் பரிசு வாங்க மேடை ஏறுகையில் அவர் சொல்கிறார் : "என் பெயரில் பின் பாதி, உன் பெயர். எனவே நீ என் தோழி. என்ன வேண்டும் உனக்கு?"

விடுவேனா?

"ஒரே ஒரு மெடிகல் காலேஜ் ஸீட்..."

"அதற்கென்ன!"

அழைத்துப் போகிறார்.

"சசி, இவளும் என் ஃபிரெண்ட். இவளுக்கு ஒரு ஸீட் கொடு."

"அடடா! 69 ஸீட் நிரம்பி விட்டதே."

"அதனாலென்ன! இன்னொன்னு அலாட் பண்ணு. நான் அதற்கொரு 'பந்த்'க்கு ஏற்பாடு பண்ணுகிறேன்."

"சரி."

ஸீட் வந்தது. மகிழ்ச்சியோடு நான் உட்கார,

"என்னடி, படுத்திட்டிருந்தவ எழுந்து உட்கார்ந்தபடி தூங்கற?" என்றாள் அம்மா!

*- வெ. லலிதா, திருச்சி - 21.*

● நான் இறந்து விட்டேன். என்னைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள்.

"குலுக்காம போங்கடா, முதுகு வலிக்குது" என்று நான் கத்த,

"சும்மா கிட! செத்தவனுக்கு வலி ஒரு கேடு!" என்று திட்டியபடி நறுக்கென்று என் தலையில் ஒரு குட்டு வேறு. நான் ஓவென்று அலறி கண் விழிக்க - சே, கனவு!

அப்புறம் என் அம்மா சொன்னாள், சாகிற மாதிரி கனவு வந்தால் தீர்க்காயுசாம்!

*- ஏ. எஸ். நாகராஜன், சென்னை - 5.*

● என் மகன் ரத்னபாரதி (வயது 3½) கடந்த ஆண்டு இறந்து விட்டான். அவன் இறந்த சில நாட்களில் ஒரு கனவு...

நள்ளிரவில் சட்டென்று விழித்து வெளியே வருகிறேன். பிரளயம் மாதிரி தெருவெல்லாம் தண்ணீர். ஊரே மூழ்கிக் கொண்டிருக்கிறது. தண்ணீரின் நடுவே இரண்டு கைகள் மட்டும் மேலே தெரிய, "அப்பா... அப்பா..." என்றொரு சப்தம். நான் நீந்திச் சென்று தூக்கிப் பார்க்க, என் மகன்! வாரி அணைத்து தூக்கிக் கொஞ்சிக் கூத்தாட, கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் வடிகிறது. கூடவே என் மகன் உருவமும்... அழுதபடி நான் திரும்ப, கனவு கலைந்து நெஞ்சைப் பிசைகிறது...

*- கி. இலக்குவன், வேப்பங்குளம்.*

**MAXIMA - A UNIQUE GROUP OF COMPANIES**

MAXIMA

***THANK YOU***

***DEAR DEPOSITORS.***

**FOR MAKING OUR BRANCH OFFICE INAUGURATION**

***A GRAND SUCCESS.***

**MAXIMA INVESTMENT & FINANCE COMPANY**

**REGD OFFICE : 1, VEDANTHA DESIKAR STREET,**
**R.K.MUTT ROAD, MYLAPORE,**
**MADRAS - 600 004, PHONE : 4941849.**
**FAX : 044-4347655, GRAMS : MAXFIN.**

**BRANCH OFFICE : 146, ELDAMS ROAD, MADRAS - 600 018.**
**PHONE : 456950.**

**MAXIMA - MAXIMUM DEPENDABILITY**

# Kalki Shopping Page


## NATIONAL PEST CONTROL

* PRE & POST CONSTRUCTION TERMITE CONTROL
* HOUSE HOLD DISINFESTATION SERVICES
* FLY CONTROL
* SPIDER CONTROL
* RODENT CONTROL
* GARDEN PEST CONTROL



**FREE INSPECTION**

CALL : 8280729, 8255697

NPC

53, Usman Road,
T. Nagar, Opp. ARR Complex,
Madras - 600 017.





## சோ எழுதிய

| | | |
|---|---|---|
| 1. | கூவம் நதிக்கரையினிலே | ரூ. 70.00 |
| 2. | சர்க்கார் புகுந்த வீடு | ரூ. 50.00 |
| 3. | வாஷிங்டனில் நல்லதம்பி | ரூ. 40.00 |
| 4. | துக்ளக் படமெடுக்கிறார் | ரூ. 20.00 |
| 5. | ஒண்ணரை பக்க நாளேடு I & II | ரூ. 30.00 |
| 6. | எங்கே பிராமணன்? | ரூ. 65.00 |
| 7. | வந்தேமாதரம் | ரூ. 48.00 |
| 8. | முகமது பின் துக்ளக் | ரூ. 15.00 |
| 9. | யாருக்கும் வெட்கமில்லை | ரூ. 16.00 |
| 10. | என்று தணியும் இந்த சுதந்திர தாகம் | ரூ. 17.00 |
| 11. | எங்கே போகிறாய்? | ரூ. 18.00 |
| 12. | இந்தியா எங்கே போகிறது? | ரூ. 10.00 |
| 13. | காமராஜனை சந்தித்தேன் | ரூ. 22.00 |
| 14. | இறைவன் இறந்துவிட்டானா? | ரூ. 15.00 |
| 15. | துக்ளக் - கேள்வி - பதில் | ரூ. 15.00 |

## அல்லயன்ஸ் கம்பெனி

தமிழ்ப் பதிப்பக உலகில் நூற்றாண்டை நெருங்கும் முதல் நிறுவனம்

த.பெ.எண்: 617, 244, ராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.

போன் : 4941314



## மூலிகைப் பொடிகள் மற்றும் காந்த சிகிச்சைக் கருவிகள்

உயிருள்ள, தெய்வீக, பின்விளைவற்ற இயற்கை மூலிகைகளான அருகம்புல், வல்லாரை, தூதுவளை, துளசி, சிரியாநங்கை, சிறுகுறிஞ்சான், கடுக்காய், மகாவில்வம், ஒரிதழ் தாமரை, இன்னும் பல மூலிகைகளைக் கொண்டு - சர்க்கரை, அலர்ஜி, சளி, மூட்டுவலி, மாணவர்கள் ஞாபக சக்திக் குறைவு, அல்சர், ஆ.டா., இருதயவலி, கல் அடைப்பு, தோல் வியாதிகள், பூச்சிக்கடிகள், தலைமுடி கொட்டுதல், கர்ப்பப்பைக் குறைகள், உடல் பருமன், கிட்னி இயக்கம் செய்யாமை, கண் கோளாறுகள் போன்ற எல்லா வியாதிகளுக்கும் நேரில் அணுகவும்.

காந்த சிகிச்சைக் கருவிகளான உயர் சக்தி, மத்திய சக்தி, குறைந்த சக்தி காந்தங்கள் வயிறு குறைப்பு, கழுத்து, மூட்டு வலி, தலைவலி, இடுப்புவலி, காந்த பட்டைகள், காந்தக் கண்ணாடி முதலியவை கிடைக்கும்.

**SAKTHI NATURE CURE RESEARCH AND SERVICE CENTRE,**
1, YMCA Building, Royapettah,
Madras - 600 014.
Phone : 831141.



**MAXIMA** — A Unique Group of Companies

## MAXIMA

FOR HIGHEST INTEREST
and
HIGHEST SAFETY

**FOR SPECIAL OFFER**

**See Page No. 11**

**Maxima** — Maximum Dependability

# Kalki Shopping Page

வீட்டின் பேரில் கடன் விரைவில் வழங்கப்படும்!



நகைக் கடன்
தாமதமின்றிக் கிடைக்கும்



மாத வட்டி
ரூ. 1.95 மட்டும்
விவரங்களுக்கு:

KALPATHARU

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

134, ராசப்ப செட்டி தெரு,
கந்தகோட்டம் அருகில்,
பார்க் டவுன், சென்னை - 3
Ph : 583241

(பங்குதாரராகிப் பயன் பெறுவீர்!)

---

படித்து விட்டீர்களா?



## கோபுர தரிசனம்

ஆன்மிக மாத இதழ்.
ஆகஸ்ட் '94 விலை ரூ. 6.00
ஸ்ரீ ஆதிசங்கரரின் சௌந்தர்ய லஹரிக்கு
ஸ்ரீ வே. எழுதும் அற்புத தமிழ் நடை,
பகவான் பாபா, ஸ்ரீ ராமபக்த ஹனுமான்
தொடர், மற்றும் பல பகுதிகள்.
ஆண்டு சந்தா ரூ. 72/- ஆயுள் சந்தா ரூ. 500/-
வெளிநாடுகளுக்கு ஆண்டு சந்தா ரூ. 500/-
முந்தைய இதழ்கள் அனைத்தும் பெற
ரூ. 75/- மட்டும் M. O. செய்யலாம்.

ஏஜென்ஸி இல்லாத இடங்களில்
ஏஜென்ஸி விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன.

**கோபுர தரிசனம்**

ஆன்மிக மாத இதழ்,
M - 138, ஏழாவது குறுக்குத் தெரு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 41. Phone : 419330

---

## ஸ்ரீ சாயி ஃபர்னிசர்

வீட்டு மற்றும் அலுவலக உபயோகத்துக்கு நல்ல தரத்தில், நேர்த்தியான மர ஃபர்னிச்சர் எங்களிடம் கிடைக்கும்.

மற்றும்

| | |
|---|---|
| சோபா செட்கள் | சிங்கிள், |
| டைனிங் செட்கள் | டபுள் கட்டில்கள் |
| டிரெஸ்ஸிங் டேபிள்கள் | டீவி அலமாரி/ |
| ஸ்பேஸ் கவர் டைனிங் | டிராலிகள் |
| டேபிள்கள் | ஷெல்ப் பிரோக்கள் |

சுப்ரீம் மோல்டட் சேர்கள்,
டியூரோஃப்ளெக்ஸ்,
ரெஸ்டோலக்ஸ் மெத்தைகள்,
தலையணைகள் மற்றும் தடுப்புச் சுவர்
அமைப்புகளுக்கு நாங்கள் டீலர்கள்.

**ஸ்ரீ சாயி ஃபர்னிசர்**

18, ராயப்பேட்டை ஹைரோடு,
பைலட் தியேட்டர் எதிரில்
சென்னை - 600 014.
போன் : 8262931/8261630

---

புத்தம் புதிய டிசைன்களில்
உயர்ரக மதுரை சுங்குடி
புடைவைகளுக்கு

## RAMACHANDRA SAREES,



(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop :
West Mambalam, Madras - 33.
Bus Route : 11R; 11J; 11E; 11D; 12G; 49J; 49;51; J13; 9A

வழங்குவோர் : ராமசந்திரா சாரீஸ்,
20 - B பழைய குயவர்பாளையம்
ரோடு, மதுரை - 9

எங்களிடம் இப்பொழுது தரமான
Pathik மற்றும் பெங்கால்
காட்டன்
புடைவைகளும் கிடைக்கும்.

# வட்ட மேஜை

♦ 69 சதவீத ஒதுக்கீட்டில் உமது பதில் யதார்த்தமாக இருந்தாலும் விஜயன், அனந்த கிருஷ்ணன் நிலை, உமக்கு ஏற்படாமல் இருக்க எதற்கும் 'ஜாக்கிரதை' யாகவே இரும்.

பவித்திரமாணிக்கம்,
ஆரூர் அரசு.

♦ வைர வரிகளாய், கல்கியின் தலையங்கம் வார்க்கப்பட்டிருந்தது. உளுத்துப் போனவர்களை உரித்துக் காட்டும் உன்னதப் படைப்பு. உணர்வு பூர்வமாக நினைத்துப் பார்க்க வேண்டியவைகளை சுட்டிக்காட்டியுள்ளது கண்டு பூரிக்கிறேன்.

அரியூர்,
செ. சு. மலரடியான்.

♦ ஒரு பிற்படுத்தப்பட்டவன், கல்வி, சமுதாயம், பொருளாதாரம் ஆகிய மூந்நிலையிலும் தன்னிறைவு அடைந்தால்தான் முன்னேறியதாகப் பொருள். பொருளாதார அளவு கோலைப் புகுத்த வேண்டி ஏன் முதலைக் கண்ணீர் வடிக்கிறீர்? அண்ணல் அம்பேத்கார் கூட, தேர்தலில் தொகுதி ஒதுக்கீட்டிற்குத் தான் காலவரையறை வேண்டுமென்றார்களே தவிர, கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்கல்ல.

கரிக்கலாம்பாடி,
சுப. தமிழ்நேசன்.

♦ பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் குவைத்தில் பணத்தில் மிதக்கிறார்களா? பொறாமையாக இருக்கிறது! கெட்டும் பட்டணம் போ என்பதை விட கெட்டும் குவைத் போ என சொல்லலாம் போலிருக்கிறது!

சேலம்,
எம். கே. வேங்கவேல்.

♦ இந்த மண்ணின் நெகிழ்வு, மணம், யதார்த்தம், பண்பு, வாழ்க்கைகளை விட்டுப் பிரிந்தவர்களுக்கு மட்டுமே இதன் தன்மைகளை உய்த்துணர முடியும் என்பதைத் தெள்ளெனக் காட்டியது ஒரு கவிதையும், இரண்டு கதைகளும், ஏராளமான கட்டுரைகளும். இது பிரமிக்கத்தக்க சிறப்பிதழ்!

கோவை - 16,
கா.சு.வே. ரோஹிணி.

♦ இந்த இதழை ஈராக் அதிபர் சதாம் உசைன் படித்தார் என்றால் மீண்டும் ஒரு தடவை குவைத் மீது அவசியம் படையெடுப்பார்.

திருச்சுழி,
சுந்தர் அழகேசன்.

♦ குவைத்தில் கொசு கிடையாதா? அடேங்கப்பா!

சேத்துப்பட்டு, பா. குணா.

♦ குவைத்துக்கே போய்ச் சம்பாதித்தாலும் சுமைகள் சுத்தமாய் இறங்கி விடாது என்ற கருத்தொலிக்க எழுதப்பட்ட 'சுமைகள்' சிறுகதை அருமை.

கருமத்தம்பட்டி,
அ. இராஜப்பன்.

♦ 'குவைத் போகலாம் வாரீகளா' என்ற இரண்டு பக்க தமாசு வெகு ஜோர்!

மதுரை - 16,
ஆர். கார்த்திகேயன்.

♦ ஒரு வெளி நாட்டுச் சிறப்பிதழில் (குவைத்) வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகிறவர்களைப் பற்றிய சமுதாயக் கண்ணோட்டத்தைக் கவிதையிலே சரியாக வடித்துக் காட்டி விட்டார் கவிஞர் குமரி அமுதன்.

சென்னை - 91,
ஐயாறு வாசுதேவன்.

♦ குவைத்திலிருக்கும் நமது தமிழ்த் திருமதிகள் குவைத் வாழ்க்கையைப் பற்றி அக்குவேறு, ஆணிவேராகத் தங்கள் கலந்துரையாடலில் அலசியிருந்தது சிறப்பு.

மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.

♦ குவைத் சிறப்பிதழில் (பக்.2) குவைத்திற்கு வருமுன் பாஸ்போர்டில் மெடிக்கல்டெஸ்ட் முடிந்து என்ட்ரி போட பாம்பே எம்பஸியில் ரூ. 10000 கட்ட வேண்டும் என்று வெளியாகியுள்ளது. ரூ. 1000 கட்டினால் போதும். பத்தாயிரம் இல்லை. குவைத் வரவிரும்புபவர்கள் பத்தாயிரத்தைப் பார்த்து பயந்து விடப் போகிறார்கள்.

குவைத், பா. இளமாறன்

♦ 'மனசு ரெண்டும் புதுசு' படவிமர்சனத்தில் நான் மனசில் நினைத்தவைகளையே சொல்லியிருந்த விதம் கனக்கச்சிதம்...!

திருச்சி - 20,
ஆர். உமா.

## பிரமிக்கத்தக்க சிறப்பிதழ்!

# 2

**It is pardonable if a right thing is done in a wrong way; but definitely not a wrong thing done in a right way.**

**— PALKHIVALA**

# நினைவலைகள்

**கே.பாலசந்தர்**

**1972** மார்ச் மாதம்...

வெல்லிங்டன் நர்சிங்ஹோம்....

அதிலிருந்து ஒரு சின்ன FLASH FORWARD! நிகழ் காலம்!

வீடியோவில் ஒரு கார்ட்டூன் படம் பார்க்க வேண்டுமென்று எனது பேத்தி ஜனனி சொன்னாள்.

"கார்ட்டூன் படம் கையில் இல்லை; நான் எடுத்த ஒரு சினிமாவைப் போட்டுக் காட்டுகிறேன்; அதைப் பார்" என்று சொன்னேன்.

சரி என்றாள்.

வீடியோ படத்தைப் போட்டேன்.

திருவள்ளுவர் சிலை திரும்புகிறது...

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு."

'போதும்' என்றாள் ஜனனி.

'ஏன்' என்றேன்.

'இந்தப் படம் நான் பார்த்தாகி விட்டது' என்றாள்.

உறுமுகின்ற MGM சிங்கம் 'ஜோக்' நினைவுக்கு வந்தது எனக்கு.

"இல்லேம்மா! இந்த திருவள்ளுவர் சிலை என்னுடைய எல்லாப் படங்களிலும் ஆரம்பத்தில் வரும்; ஆனால் நீ பார்க்கப் போகின்ற படம் 'புன்னகை' என்றேன்.

"பிளாக் அண்ட் ஒயிட் படம் வேண்டாம். கலர் படமாக இருந்தால் போடுங்கள் தாத்தா" என்றாள்.

நான் 'தாத்தா' என்று என் நினைவுக்கு வந்தது. 'GENERATION GAP' என்கிற பதத்தின் முழு அர்த்தமும் அன்று தான் விளங்கியது.

குழந்தைகளும் பார்த்து ரசிக்கக் கூடிய ஒரு படமாகத் தேடிப் பிடித்து நான் தயாரித்த 'வேலைக்காரன்' வீடியோ காஸட்டைப் போட்டேன்...



(படம் : கோபிநாத்)

ஜனனி நிமிர்ந்து உட்கார்ந்து பார்க்க ஆரம்பித்தாள்.

கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த அந்த 'பால்கிவாலா'வின் மேற்கோளை எண்ணிப் பார்க்கிறேன்.

பம்பாய் உதவி மேயர் 'கைர்நார்' விவகாரத்தில் அவரை ஆதரித்து எழுதிய ஒரு கட்டுரையில் இப்படி குறிப்பிட்டிருந்தார்.

"ஒரு நல்ல காரியத்தைத் தவறான முறையில் செய்வதைக் கூட மன்னித்து விடலாம். நல்ல வழியிலே செய்யப்படுகின்ற ஒரு தவறான காரியத்தைத்தான் மன்னிக்க முடியாது."

இந்த தத்துவம் சினிமாவுக்கு எவ்வளவு பொருந்துகிறது? இதைப் போன்று ஆயிரமாயிரம் சிந்தனைகளையெல்லாம் எண்ணி எண்ணி அசை போட்டுப் பார்க்கின்ற ஒரு நல்ல அவகாசத்தைத்தான் அந்த 1972 எனக்கு கட்டாயமாக ஏற்படுத்திக் கொடுத்தது.

எப்படி?...

FLASH BACK TO 1972 வெல்லிங்டன் நர்சிங்ஹோம்!

எனக்கு நினைவு திரும்பிவிட்டது என்றாலும் அடுத்து ஒரு வாரத்திற்கு 'இன்டென்சிவ் கார்டியக் கேர்' அறையில் வைத்து கண்காணிக்கப்பட்டேன்.

அப்பொழுதெல்லாம் 'ஹார்ட் அட்டாக்' என்றால் கடுமையான கெடுபிடியில் இருப்பார்கள். நோயாளியைப் பார்க்க யாரையும் அனுமதிக்க மாட்டார்கள். நெருங்கிய உறவினர்களைக்கூட விடமாட்டார்கள் - மனைவி ஒருத்தியைத் தவிர. பார்க்க வரும் நண்பர்கள், உறவினர்கள், அபிமானிகள், நடிக நடிகையர், திரைத் துறையைச் சார்ந்த பிரமுகர்கள் அத்தனை பேரையும் 'விசிட்டர்ஸ் புக்'கில் எழுதிவிட்டுப் போகச் சொல்வார்கள். கெடுபிடியாக இருந்த அத்தனை நர்ஸ்களையும் 'மாட்ரன்'களையும் ஏமாற்றிவிட்டு என்னை



• அரங்கேற்றம் (படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

அருகில் வந்து இரண்டாவது நானே பார்த் தவர் எனது 'வெள்ளி விழா' படத்தில் நடித்துக் கொண்டிருந்த ஜெமினி கணேசன் அவர்கள்தான். இதற்குக்கூட ஒரு 'Hero Image' வேண்டியிருக்கிறது. அப்பொழுது அவர் ஒரு பாப்புலர் ஹீரோ.

நான் கண்களைத் திறந்தேன்...

ஜெமினியின் கண்கள் பனித்திருந்தன.

"நீங்கள் பிழைத்துக் கொண்டு விட்டீர் கள்! "God Is Great" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார் ஜெமினி கணேசன்.

ஒரு வாரம் I.C.C. அறை.

மூன்று வாரங்கள் ஆஸ்பத்திரி தனி அறைவாசம்.

நான்கு வாரங்கள் நான் வானத்தை ஜன்னல் வழியாகப் பார்த்ததுதான்.

'நான் இறப்பதற்கு எந்த டாக்டருடைய உதவியும் தேவையில்லை' என்று ஒரு மாமூல் ஹாஸ்யம் உண்டு.

ஆனால் 1972ம் ஆண்டில் என்னைக் காப்பாற்றி எழுந்து உட்கார வைத்து 1994ம் ஆண்டு எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள உதவியவர்கள் மூன்று பேர்.

1. இறைவன்
2. டாக்டர் ஜகதீசன்
3. டாக்டர் ஆர்.எஸ்.ராஜகோபால்.

எனது யூனிட்டைச் சேர்ந்த எனது உதவியாளர்கள், தயாரிப்பாளர்கள், டெக் னீஷியன்கள் அத்தனை பேரும் நான் I.C.C அறையில் இருந்த போதே என்னை நேரில் வந்து ஆஸ்பத்திரியில் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஜகதீசன் அவர்களிட மும் கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்திருக் கிறார்கள். டாக்டர் ஜகதீசன் ஒரு ஐடியா செய்தார். நான் ஆஸ்பத்திரியில் admit ஆன நான்காவது நாள் I.C.C.யில் அவர் என்னைப் பார்த்த போது கையில் ஒரு சின்ன டேப் ரிக்கார்டருடன் வந்திருந்தார்.

நான்கே வார்த்தைகள் என் னைப் பேசச் சொல்லி அதை டேப் பில் பதிவு செய்து கொண்டு போய் எனது யூனிட் அங்கத்தினர்கள், நடிக நடிகையர் அனைவருக்கும் அதைப் போட்டுக் காட்டி, அவர்களைத் திருப்திப்படுத்தினார்.

நர்சிங்ஹோமிலிருந்து டிஸ் சார்ஜ் ஆன பின்பும் மூன்று மாதங் களுக்கு முழுமையாய் ஓய்வு எடுக்க வேண்டுமென்று கண்டிப்பாய் கூறியிருந்தார்கள் டாக்டர்கள்..ஓய்வு வேளையில் நான் படிக்கக் கூடாது; யாருடனும் பேசக் கூடாது; படி ஏறக் கூடாது; அதிகம் சிந்திக்கக் கூடாது; உணர்ச்சி வசப்படக் கூடாது. 'நோய்வாய்ப்பட்ட இரு தயத்திற்கு கொஞ்சம் கூட சுமை கொடுக்கக் கூடாது' என்பது அந்தக் காலத்து மருத்துவ முறை! இப்பொழுதெல்லாம் 'ஹார்ட் அட் டாக்' என்பது ஏதோ தலைவலி வந்த மாதிரி! நாலைந்து நாட்களுக்குள் வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள்; அந்த அளவுக்கு விஞ்ஞானமும் வளர்ந்திருக்கிறது; 'ஹார்ட் அட்டாக்' நோயாளிகளும் Q வில் நிற்கி றார்கள், அந்த அறையில் இடம் பிடிக்க!

வீட்டிற்கு வந்த பிறகு ஒரு மூட்டை கடி தங்களும் தந்திகளும் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவற்றையெல்லாம் படித் துப் பார்ப்பதற்கு என் மனைவி அனுமதிக்க வில்லை. ஒரே ஒரு ரசிகனின் கடிதத்தை மட்டும் கொடுத்தாள். நான் சந்தித்திராத ஒரு பழனி ரசிகர்; எனது படங்களை மட்டும் சந்தித்தவர்...

"நீங்கள் ஒரு PHOENIX பறவையாக மீண்டும் எழுந்து வருவீர்கள். பழனி முருகன் என் கனவில் சொன்னார்" என்று எழுதி யிருந்தார்;

ஃபீனிக்ஸ் பறவையென்றால் சரியான அர்த்தம் என்னவென்று தெரிந்து கொள்ள என் மனைவியின் ஒப்புதலோடு 'என்சைக் ளோபீடியாவை' refer செய்து பார்த்தேன்.

"கிரேக்க புராண மரபுப்படி பல நூற் றாண்டுகள் வாழ்ந்து தன்னை எரித்த சாம்பலி லிருந்து மீண்டும் புத்துயிர் பெறுவதாகக் கருதப்பட்ட ஒரு பாலைவனப் பறவை"

கிரேக்க புராணம் பழனி முருகனுக்குத் தெரிந்திருக்கிறது!

எனது வாழ்க்கையில் ஆண்டவன் இப்படி ஒரு பேராபத்திற்குப் பின் இரண்டா வது பகுதி வாழ்க்கையை எனக்கு அளித்ததை உருப்படியாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியெல்லாம் சிந்திக்கின்ற ஓய்வு இது.

இதன் பயனாக சில முக்கியமான விஷ

யங்களை தீர்மானித்துக் கொண்டேன்.

THREE COMMANDMENTS—

1. ஏற்கெனவே டாக்டரிடம் வாக்களித்த படி இனி சிகரெட்டைத் தொடுவதில்லை.

2. இனி நான் இயக்கும் படங்களில் இந்த சமுதாயத்திற்கு ஏதாவது ஒரு மெசேஜை... ஒரு நல்ல கருத்தை வலியுறுத்திச் சொல்ல வேண்டும்.

3. படப்பிடிப்பின் போது டென்ஷன் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் அதிகப் படங்களில் நடிக்கும் 'பிஸி'யான நடிக நடிகையர்களுடைய கால்ஷீட்! குறிப்பிட்ட தேதிக்குள் அவர்கள் சம்மந்தப்பட்ட காட்சிகளை முடித்து விட வேண்டுமென்கிற அளவுக்கதிகமான பரபரப்பின் காரணமாக ஏற்படும் மனோநிலை.

எனவே இனிமேல் நான் எடுக்கின்ற படங்களில் மிகவும் பிஸியான நடிகர்களையோ, ஒத்துழைக்க இயலாதவர்களையோ நடிக்க வைப்பதில்லை.

**சா**ர்லி சாப்லின் ஒருமுறை சொன்னார்.

"ALL I NEED
TO MAKE A COMEDY
IS A PARK, A POLICEMAN
AND A PRETTY GIRL

"ஒரு நல்ல படம் எடுப்பதற்கு எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு பூந்தோட்டம், ஒரு போலீஸ்காரன், ஒரு அழகான பெண் அவ்வளவுதான்"

நியான் வெளிச்சத்துடன் கொட்டை எழுத்துக்களில் இந்த சாப்லின் வாக்கியங்களை, பத்து இடங்களிலாவது கோடம்பாக்கத்தில் அமைக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

அன்றைக்கு என் நெற்றிப் பொட்டில் அறைந்தது இதே வார்த்தைகள்தான்...

ஆண்டு 1973. 'அரங்கேற்றம்' படம் எடுத்தேன்.

ஃபீனிக்ஸ் பறவையாகத்தான் வெளியே வந்தேன்.

FLASH FORWARD :

1974ம் ஆண்டு..மே மாதம்.

'டூயட்' படத்தோடு எனது கவிதாலயா நிறுவனம் மூடப்படவிருப்பதாகவும் பாலசந்தர் இத்தோடு 'குளோஸ்' என்கிற பாணியிலும் ஒரு பத்திரிகை குதூகலித்து 'அரட்டை' அடித்திருக்கிறது.

வாழ்க அவர்கள் கொற்றம்!

திரையுலகத்தில் இருந்த இடமே தெரியாமல் அழிந்துபோன ஸ்தாபனங்கள் எத்தனையோ உண்டு! ஆனால் கவிதாலயா நிறுவனம் புதுப் பொலிவுடன் எழும்பவிருக்கிறது!

அலைகள் ஓய்வதில்லை.-

(தொடரும்)



ஒரு கருத்தைச் சொல்வதற்கு ஒரே யொரு சொல் போதும் என்றிருக்கும் போது இரண்டு சொற்களைச் செலவு செய்யாதே... எவ்வளவு சொன்னாலும் அதனால் எந்தவொரு பயனும் விளையாது என்று தெரிய வருமேயானால் அந்த ஒரு சொல்லையும் விரயம் செய்யாதே.

- சிங்செள

தகவல் : வயலூரான்



"தலைவர் ஏன் உர்ருன்னு இருக்காரு?"


"வழக்கமா அவர் எந்த அறிக்கை விட்டாலும் அதுக்கு 'நன்றி'ன்னு நோட்டீஸ் அடிச்சு ஒட்டற அவரோட ஜால்ராங்க, அவர் கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்யறேன்னு ஒரு பேச்சுக்குச் சொன்னதுக்கு, நன்றின்னு போஸ்டர் அடிச்சு ஒட்டிட்டாங்களாம்."

- டி. என். கிருஷ்ணன்

"அவர் கலர் டீ.வி. வாங்கினார்; ஸ்கூட்டர் வாங்கினார்; பிரிட்ஜ் வாங்கினார்; கார் வாங்கினார்; பங்களா வாங்கினார்; எஸ்டேட் வாங்கினார்... அவர் முதலில் வாங்கியது என்ன...?"

" 'லஞ்சம்' சார்!"

- பி. கே. வள்ளல்



ORKAY குலாப் ஜாமூன்

# அதிசயம் ஆனால் உண்மை

## மலாய் கோஃப்த்தா ஆர்கே குலாப் ஜாமூன் மிக்ஸில் செய்தது?

100 கிராம் ஆர்கே குலாப் ஜாமூன் மிக்ஸ், 3 கிராம் ஆர்கே கரம் மசாலா, நன்கு துண்டாக் கப்பட்ட (அரை) வெங்காயம், கொத்தமல்லி, சுவைக்கு தேவையான உப்பு, 25 மி. லிட்டர் தண்ணீர் இவைகளை நன்கு பிசைந்து கொள்ளவும். கோஃப்த்தாவை ஏதாவது ஒரு வடிவத்தில் தட்டிக் கொண்டு, மிதமான தீயில் பொன் நிறத்திற்கு பொரித்து பிறகு எண்ணையிலிருந்து எடுத்து, எண்ணையை வடித்து, சூடான கிரேவியில் ஐந்து நிமிடங்களுக்கு ஊறவைக்கவும். முந்திரிப்பருப்பு, கிரீம், கொத்தமல்லி இலை இவைகளால் அலங்கரித்து சூடாக பரிமாறவும்.

**கிரேவி :** 5 கிராம் இஞ்சி, தேவையான அளவு பூண்டு இரண்டையும் அரைத்துக் கொள்ளவும். 100 கிராம் எண்ணையை மிதமாக சூடேற்றி அதில் லவங்கப்பட்டை, கிராம்பு, 2 கிராம் மஞ்சள் பொடி, இவைகளை இஞ்சி, பூண்டு அரைத்த கலவையுடன் போடவும். தக்காளி, வெங்காயம் (ஒவ்வொன்றும் 1/4 கிலோ) இரண்டையும் அரைத்து மேற்கண்ட கலவையுடன் சேர்க்கவும். கிரேவியை இரண்டு நிமிடங்கள் கடைந்த பிறகு முந்திரிப் பருப்பு, கசகசா, எள் (ஒவ்வொன்றும் 25 கிராம்) இவைகளை அரைத்து கிரேவியுடன் கலக்கவும். ஆர்கே தனியாப் பொடி (1 கிராம்), கரம் மசாலா (1 கிராம்) இவைகளுடன் உப்பையும் சுவைக்கு கலந்து, கரண்டியால் எண்ணை பிரியும் வரை கிரேவியை கிளறிய பின் அடுப்பிலிருந்து இறக்கி ஒரு சிட்டிக்கை சர்க்கரையை சுவைக்கு போடவும்.

## காரட் ஹல்வா ஆர்கே குலாப் ஜாமூன் மிக்ஸில் செய்தது?

அரைக்கிலோ காரட்டைத் தோலைச்சீவி, கொப்பரைத்துருவியால் துருவிக்கொண்டு பிரஷர் குக்கரில் போடவும். 1/4 கிலோ சர்க்கரையை, 40 கிராம் ஆர்கே குலாப் ஜாமூன் மிக்ஸுடன் நன்கு கலந்து தனிப்பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். காரட் துருவலுடன் இதையும் நன்கு கலந்து 350 மி. லிட்டர் பாலையும் சரிவரக்கலந்து பிரஷர் குக்கரில் 10 நிமிடங்கள் வேக வைக்கவும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி, இரண்டு டேபிள் ஸ்பூன் நெய் சேர்த்து, குறைந்த தீயில் (ஸிம்மில்) வைத்து, விரும்பிய அளவு கெட்டியான பக்குவம் வரும் வரை மிதமாகக் கிளரவும். அத்துடன் வறுத்த திராட்சை, முந்திரிப்பருப்பு, ஏலக்காய், குங்குமப்பூவையும் சேர்க்கவும். உங்கள் சுவைமிக்க இனிப்பு இப்பொழுது. சூடாகவோ குளுமையாகவோ பரிமாறத் தயார்.

## முந்திரிப் பருப்பு பர்ஃபி ஆர்கே குலாப் ஜாமுன் மிக்ஸில் செய்தது?

1/4 கிலோ முந்திரிப்பருப்பைப் பொடி செய்து 1/4 கிலோ சர்க்கரையுடனும், 100 கிராம் ஆர்கே குலாப் ஜாமுன் மிக்ஸுடனும் சேர்த்து, அதை 150 மி. லிட்டர் பாலுடன் கலந்து வாணலியில் கொட்டவும். அடுப்பில் அதிக தீயில், முதல் கொதி வரும் வரை வைத்து, பிறகு குறைந்த தீயில், கெட்டியாகும் வரை வைத்திருக்கவும். (அடி பிடிக்காமல் இருக்க கிளறிக் கொண்டே இருக்க வேண்டும்) பிறகு நெய்யை விட்டுக்கிளறி அடுப்பிலிருந்து இறக்கவும். நெய்தடவிய தட்டில் கலவையைக் கொட்டி, வேண்டிய கனத்துக்கு குழவியால் பரப்பவும். குளிர்ந்த பிறகு விரும்பிய அளவுக்கு கத்தியால் துண்டுகளாக வெட்டி பரிமாறவும்.

## சாஹி பக்கோடா ஆர்கே குலாப் ஜாமுன் மிக்ஸில் செய்தது ?

மிகவும் மெல்லியதாக வெட்டிய கொத்தமல்லி இலைகளுடன், 150 கிராம் வெங்காயம் (சுமார் 1 செமி நீள துண்டுகளாக வெட்டவும்), 3 பச்சை மிளகாய்களை சிறு துண்டுகளாக வெட்டி சுவைக்குத் தேவையான அளவு உப்பை சேர்த்து நன்கு கலக்கவும். இத்துடன் 100 கிராம் ஆர்கே குலாப் ஜாமுன் மிக்ஸ், 15 கிராம் கடலை மாவு, 10 கிராம் அரிசிமாவு இவைகளைச் சேர்த்து, 15 கிராம் தண்ணீருடன் நன்கு பிசைந்து கொள்ளவும் (ஜாமுன் மாவை பக்குவத்துக்கு பிசைந்து கொள்ளவும்) விரும்பிய எண்ணெயை உபயோகித்து நன்கு பொன் நிறத்துக்கு வறுக்கவும். அதிக எண்ணெயை வடித்து, சூடாக சட்னி அல்லது தக்காளி சாசுடன் பரிமாறவும்.

**புதினா சாஹி பக்கோடா**

நன்கு துண்டாக்கப்பட்ட புதினா இலைகளை பக்கோடா மாவுடன் கலந்து மேற்குறிப்பிட்ட அதே முறையில் தயாரித்து பரிமாறவும்.




AN ORKAY PRODUCT

பரபரப்பான மேலும் அநேக பிரமிக்கத்தக்க விஷயங்களை எதிர்பாருங்கள்

R K SWAMY/BBDO 6829 TAM C2

பூச்சன் இறந்து போனார். மூன்று மாதம் படுக்கையில் கிடந்து, மூன்று வாரமாய்ப் பேச்சில்லாமல் கிடந்து, மூன்று நாட்களாய் மூச்சுத் திணறி, ஒரு விடியலில் கண்ணை மூடினார். வெயில் ஏறுவதற்குள் ஊர்முழுவதும் தெரிந்துவிட்டது. வாயளவில் வருத்தப்பட்டதோடு சரி. வழக்கம் போல் இயங்கியது.

நாட்டாண்மை வீட்டு வாசலில் வள்ளி வந்து அழுதாள். அவள் பூச்சனின் பேத்தி.

நாட்டாண்மை ஐந்து ரூபாயை அவள் முகத்தில் வீசி எறிந்தார்.

"ஊர்ல போய்க் கேளு புள்ள... வீட்டுக்கு ரெண்டு, மூணு தருவாங்க... வசூல் பண்ணி நாலு பயகள வச்சு, பிரேதத்தை எடுத்துப் போடு... போ..."

வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். இதே நாட்டாண்மை அந்த ஊரில் கொஞ்சம் உயர்ந்த ஜாதி வீட்டில் ஒருவர் இறந்திருந்தால் அந்த வீட்டு முன்னால் உட்கார்ந்து, குப்பத்துக்காரர்கள் அத்தனை பேரையும் வரச் சொல்லி, கட்டு விரல் அசைவில் வேலை வாங்கிக் கொண்டிருப்பார். இன்று... தன் பாட்டனின் மரணத்தை ஒரு பல்லியின் மரணமாய் எண்ணிச் சர்வ சாதாரணமாக வேலைக்குக் கிளம்புகிறார்.

இந்தப் பாழாய்ப் போன ஜாதிக்கு எவ்வளவு பெரிய வலிமை...

வள்ளி கண்ணீர் விட்டாள். போன வாரம்தான் நல்லையா செட்டியாரின் பேரன் இறந்திருந்தான். நாலே வயதுதான். ஊரே வேலைக்குப் போகவில்லை.

பழனி, உறவினர்கள் உள்ள கிராமத்திற்கு இழவு சொல்ல ஓடினான்.



## ரூ. 1,000/- பரிசு பெறும் இரண்டாம் பரிசுக் கதை

# புதிய நெருப்பு





கருப்பனும், கப்பனும் சிதை அடுக்க மயானத்திற்கு ஓடினார்கள்.

காளி தெருவைத் துப்புரவு செய்தான். வேளான், மண் சட்டியில் நெருப்பு அள்ளி புகைய விட்டுக் கொண்டிருந்தான்.

சலவைத் தொழிலாளி குடும்பம் ஒன்று வீட்டிலிருந்து தெரு வழியே மயானம்வரை சேலை விரித்துச் சென்றது. சவரத் தொழிலாளி சங்கு வைத்துக் கொண்டு காத்திருந்தார். ஊரே வீட்டு முன்னால் வந்து உட்கார்ந்தது. ஒரு நாலு வயதுப் பையனின் மரணத்திற்கு இவ்வளவு ஊர் மரியாதை...

அந்த ஊரில் ஒவ்வொரு மரணத்திற்கும் ஓடியாடி வியர்வை சிந்தியவர் பூச்சன். பத்து வயதிலிருந்தே ஊர்த் தெருவைக் கூட்டிப் பழகியவர். எழுபது வருஷங்களாய் எத்தனை மரணங்களுக்கு முன்னால் நின்றிருப்பார்! எத்தனை பிணங்களை மயானத்தில் எரித்திருப்பார்! அதில் தப்பும் தவறும் ஏற்பட்டால் தள்ளாத வயதிலும்கூட எத்தனை அடி வாங்கியிருப்பார்?


அந்தத் தொண்ணூறு வயது பூச்சனின் மரணம் இன்று ஒரு புழுவின் மரணம் போல ஆனது. அவருடைய தொண்ணூறு வயதுக்கோ, எண்பது வருட ஊழியத்திற்கோ ஊரில் மதிப்பே இல்லாமல் போனது. காரணம், அவர் ஒரு கீழ்ச் சாதியில் பிறந்தது மட்டுமே...

— பூச்சனின் பேத்திக்கு அழுவதா, சிரிப்பதா எனத் தெரியவில்லை. கடைசியில் சிரிக்கத்தான் செய்தாள்.

"என்னட்டீ... கிழவன் செத்துட்டான்னு சொல்றே? சிரிச்சுக்கிட்டு நிக்கிற...?"

நாட்டாண்மையின் மனைவி கேட்டாள். "இல்ல நாச்சியாரே.. நெனச்சுப் பார்த்தேன்.. எங்க கிழவனுக்கு தொண்ணூறு வயசுதானே... தவிர ஒரு கீழ்ச்சாதிப்பயதானே... உங்களைப் பொறுத்தமட்டல ஒரு கிழட்டு நாயி செத்துப் போச்சு! அம்புட்டுத்தான! அதுசரி, நாட்டாண்மை அப்பச்சீ... பொணத்தை மயானத்துக்குக் கொண்டு போக வழி இல்ல... ஊர்ல தெக்குத் தெரு வழியா கொண்டு போயிரலாமா...?"

**வே. குருநாதன்**



"என்ன குடும்பம் நடத்துறா! உப்பு, புளி, மிளகாய் கூட சரியா வைச்சிக் காம?"

"யாரு?"

"எதிர்த்த வீட்டுக்காரிதான். எப்ப போய் எதைக் கேட்டாலும் இல்லேன்னே சொல்றா!"

- ராமநாதன்

---

நாட்டாண்மை செருப்பைக் கழற்றினார். அந்தச் செருப்பும் வள்ளி தன் கையால் அவருக்குத் தைத்துக் கொடுத்ததுதான்... அந்தத் தையல் கூலியைக் கூட அவளுக்குத் தர மறந்து போன நாட்டாண்மை அவள் ஜாதியை மட்டும் மறக்காததால்தானோ என்னவோ சட்டென்று கோபம்வர செருப்பைக் கழற்றினார்.

"...மகளே... என்ன திமிர் இருந்தா எங்க ஆளுக இருக்கிற தெக்குத் தெரு வழியா ஒரு கீழ்சாதிப்பய பிணத்தைக் கொண்டு போகட்டுமான்னு கேப்ப...?"

"கால்ல போடுங்க மாமா... கழுதை அவ கூர் இல்லாமக் கேட்டுட்டா..."

நாட்டாண்மையின் மனைவி தடுத்து, தன் கணவனைச் சைக்கிள் ஏறச் சொல்லி வேலைக்கு அனுப்பி வைத்தாள்.

பூச்சனின் பேத்தி வீட்டிற்குத் திரும்பினாள். தெருவே வெறிச்சோடிக் கிடந்தது. எல்லா வீடுகளும் அடைத்துக் கிடந்தன. நடவுக் காலம். பக்கத்து ஊர் முதலாளியின் காடுகளுக்கு டக்கர் நிறைய ஏறிச் சென்று விட்டார்கள்.

'நன்றி விசுவாசம் இல்லாத ஊரு... எத்தனை வீட்டுச் சாவுக்கு என் தாத்தா ஓடியாடி உழச்சது... இப்போ, அதோட சாவுக்கு ஒரு வீடு வரலியே... இவங்க பிணத்துக்கு மட்டும் நாங்க அத்தனை பேரும் வந்து ஊழியம் பாத்துட்டுப் போகணும்... எங்கள்ள ஒரு பிணம் விழுந்தா... அதை நாங்களே தலையில சுமந்துட்டு போகக் கூட சம்மதிச்சு ஒரு தெரு விட மாட்டாங்க...'

புலம்பிக் கொண்டே வடக்குத் தெருவைக் கடந்தாள்.

"பொழுதடையப் போகுது வள்ளி. நாட்டாண்மை அப்பச்சி என்ன சொன்னாங்க...?"

உள்ளூர் குருவன் கேட்டான். வடகரை, கீழப்பாளையாபுரம், மேலப்பாளையாபுரம், சுண்டங்குளம், ராஜாப்பட்டி, சல்லிப்பட்டி, கோடங்கிப்பட்டியிலிருந்தெல்லாம் அவள் உறவு முறைக்காரர்கள் வந்திருந்தனர்.

''நம்ம ஜாதியைப் பத்தி ரொம்ப இழிவாய்ப் பேசி... அவங்க தெரு வழியே கொண்டு போகக் கூடாதுன்னு சொல்லிட்டார்... அதோட நான் கேட்டதுக்கே கோபம் வந்து, கால்ல கெடந்த செருப்பைக் கழட்டிட்டார்...''

- இப்படியே அவள் சொல்லியிருக்கலாம்... ராஜாப்பட்டியிலிருந்து வந்த பரதன் ஒரு ஆள் போதும்... தன் ஜாதிப் பிரச்னை குறித்து ஒரு காலம் ஜெகஜீவன்ராமுக்கே டிரங்கால் போட்டு, கலெக்டரைப் பதற வைத்த கொம்பன்...

இப்பொழுது விட்டா தருவான்... மீறி பிணம் தூக்கிக் கொண்டு தெற்குத் தெருவில் இறங்குவார்கள். அடி... தடி.... வெட்டு... குத்து...

தன் பாட்டனின் பிணம் மயானம் போய்ச் சேருகிறதோ இல்லையோ, பத்து இருபது பிணம் தெருவில் விழும்... தேவையா...?

வள்ளி நாட்டாண்மையின் சொற்களை மாற்றினாள்.

"ஊர்ல அநேகம் பேர் அய்யப்பனுக்கும் முருகனுக்கும் மாலை போட்டுருக்காங்களாம்... சில வீட்ல மாரித் தாயி விளையாடருக்காளாம்... அதனால, பிணம் போனா தெய்வ குத்தம் ஆயிருமோன்னு பயமாயிருக்கு வள்ளி... இந்த ஒரு தடவை கண்மாய்ல இறங்கி, கரைமேல ஏறி சுத்திப் போகச் சொல்லு... தப்பா நெனைக்க வேண்டாம்னு ரொம்ப இறங்கிச் சொன்னாரு."

உறவினர்கள் சிரித்தார்கள். "அப்படி மீறி தெற்குத் தெரு வழியாப் போனா... மகளே உன்ன வகுந்திருவேன்னு... செருப்பைக் கழட்டிருப்பாரே..."

பரதன் கேட்டதுமே அவனுக்குப் பகீரென்றது.

''நேத்து பிறந்த கழுதை... எங்கள ஏமாத்தப் பாக்குறியாக்கும்... நமக்குன்னு இருந்த மயானப் பாதையையும் சேத்துப் பாட்டாப் போட்டு ஒருத்தனுக்கு வாங்கிக்

கொடுத்துட்டு கண்ணு மூடிட்டாக... கணாப்பிள்ள சாமியவுக... இப்ப நாம் பிணஞ் சுமக்கிறதுக்கு வழி இருக்கு... நம்ம பிணம் போக வழி இல்ல... போனா நம்ம குடிசைகள்ளாம் எரியும்... தெரியும் வள்ளி... பூசி மொழுகாத! ஏய்... என்னடா வேடிக்கை? தூக்குங்கடா... தெக்குத் தெரு வழியா இறங்கித்தான் பாப்போம்... கலகம் பிறந்தாத்தான் நீதி பிறக்கும்னு வாத்யாரே சொல்லீருக்காரு..."

கள்ளச் சாராய நெடி குப்பென்று அடித்தது. பிணத்தைத் தூக்கத் தயார் ஆனார்கள்.

ஆனால் அதற்குள் பூச்சனின் குடிசையைப் பற்றிக் கொண்டு அதிஆவேசமாய் எழுந்தது ஒரு ராட்சஸத் தீ...

"**தீ...** தீ..." என்று கத்தினார்கள். பரதன் திகைத்துப் போய் நின்றான். குப்பத்து மனுஷர்கள் அத்தனை பேரும் அரண்டு மிரண்டு போய் அசைய மறந்து போய் நின்றார்கள்.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் ஊரே அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு ஆண்டாள் கோயில் கோபுரமாய் அந்த காலனியில் நெருப்பு மட்டுமே நிமிர்ந்து நின்றது. குனிந்தே பழகிய அந்தக் காலனிக்கு இப்படித்தான் நிமிர்வது என்று நெருப்பு கற்றுக் கொடுப்பது போலவும் இருந்தது.

ஊர் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தது.

"என்னடா... என்ன பண்ணுனீக? ஏன் பூச்சன் குடிசை எரியுது...?"

நாட்டாண்மை விளங்காமல் கேட்டார். வள்ளிதான் முன்னால் வந்து நின்றான்.

"வேற ஒண்ணுமில்ல அப்பச்சி... உங்க பூச்சன் கிழவன்தான் குடிசையோட எரியுதான் பாவம். தெக்குத் தெரு வழியாக் கொண்டு போனா எங்க எல்லாக் குடிசையும் எரியுமே... இப்ப அவன் குடிசை மட்டும் தானே எரியுது...? ஆனா, பூச்சன் மட்டுமே எரியல... ஆமா சாமீ... எவ்வளவு காலம்தான் நெருப்புல பொணத்தை மட்டுமே ஒத்தையில எரிக்கிறது... இந்த நெருப்பு நீங்க எங்க வயித்துக்கு வச்ச நெருப்பு பாத்தீகளா... அதனால... அந்த நெருப்புலயே எங்களோட அடிமைத்தனம்... அறியாமைத்தனம்... கோழைத்தனம், குனிஞ்சு குழையுற நாய்த்தனம் எல்லாத்தையும் எரிய விட்டுட்டோம். இனிமே உங்க பிணங்களை நீங்க கொளுத்துவீங்களோ... புதைப்பீங்களோ... எங்களைக் கூப்பிடாதீங்க...." கம்பீரமாய்ச் சொல்லிவிட்டு, குப்பத்து மக்கள் பின்தொடர திரும்பி நடந்தாள் வள்ளி.




# பட்டம் சூட்டுங்கள் பரிசு ரூ. 250/-

'ஆதி பராசக்தி'யிலிருந்து 'தன்மானத் தலைவர்' வரை அரசியல்வாதிகளுக்குப் பட்டம் கொடுப்பது என்பது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. உங்களுக்குப் (பிடித்த?) பிடிக்காத தலைவருக்குத் தமாஷாகப் பட்டம் சூட்டி மகிழலாமே! வேடிக்கையான சிறந்த பத்து பட்டங்களுக்கு ரூ. 250/- பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

முடிவு தேதி : 20.8.94.

உறை மீது "பட்டம் பெறும் தலைவர்" என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

தலைவர் : ..................................

பட்டம் : ..................................

..................................

என் பெயர் : ..................................

விலாசம் : ..................................

..................................

# சினிமாவுக்குப் போறீங்களா..?

## வியட்நாம் காலனி

ஏற்கெனவே தமிழில் இது போலொரு படம் வந்திருக்கிறது. ஞாபகம் சரியென்றால் அதுவும் மலையாள ரீமேக்.

ஒரு காலனியை காலி செய்ய வரும் கம்பெனி ஆள் இறுதியில் காலனிவாசிகளின் நலனுக்காகப் போர்க்கொடி தூக்கி, ஜெயிப்பது கதை.

தமிழ் சினிமாவின் நகைச்சுவைப் பஞ்சத்தைப் போக்க வந்திருக்கும் படம் என்ற அளவில் தாராளமாகப் பாராட்டலாம். பாராட்டுக்களுக்கு 'To' அட்ரஸ்: கிரேஸி மோகன். நிமிஷத்துக்கு ஒரு காமெடி என்ற கணக்கில் இன்டர்வெல் வரை வயிற்றைப் பதம் பார்க்கிறார் மனுஷர்.

பிரபுவின் சிப்ப சிரிப்பு சிறப்புகளுக்கு இந்தப் படம் ஒரு ஆயின்ட்மென்ட்.

[illegible] வீட்டு 'கவுச்சு' நாற்றம் தாங்காமல் தவிக்கும் வெங்கடகிருஷ்ண அய்யர்:

"நாத்தமாய்யா இது! வாசனை! தேவாமிருதம்!" என்று நாக்கு தொங்க அலையும் அஸிஸ்டென்ட் கவுண்டமணி;

இந்த இருவர் சேர்ந்து அடிக்கும் லூட்டியில் பனோரமா உள்ளிட்ட ஒரு நட்சத்திரப் பட்டாளமே காணாமல் போகிறது.

வழக்கம் போல் வந்து போகிறார் வினிதா. மாறாக, ஒரு காட்சியில் வந்தாலும் ஓட்டிக் கொள்கிறார் நாசர். கதைப்படி இந்த மனிதருக்கு, எந்த ரோலும் பொருந்துகிறது? அந்தக் கண்கள் மட்டும் எப்படி ஆயிரம் பக்க வசனம் பேசுகின்றன?

வெறும் வசனத்தை நம்பி எடுத்திருக்கிறார்கள். டெக்னிகலாக ஜாலம் ஏதும் வேண்டாம் என்ற முடிவு போலும். அதனாலேயே இளையராஜாவின் இசை கூடக் கொஞ்சம் சுருதி குறைந்தாற்போலத் தெரிகிறது.

ஜாலியாகப் பொழுதுபோக்க விரும்புபவர்கள் இன்டர்வெலோடு எழுந்து வந்து விடலாம். மூக்கு சிந்தியே தீருவதென்றால் முடிவு வரை இருந்து வரலாம்.

• வியட்நாம் காலனி



## ரசிகன்



• ராது

**வா**லிபர்களே! வாலிபிகளே! வயோதிகர்களே! நடுவாந்தரங்களே! உங்கள் நலனில் அக்கறை கொண்டு படாத துன்பப்பட்டு, படம் பார்த்துப் புலம்ப வந்திருக்கும் இந்த எளியோனைக் கொஞ்சம் செவிமடுப்பீர்களாக.

ஐயா, காதலென்றால் என்ன? பாலகுமாரனைக் கேளுங்கள். மதித்தல், பாஸ்பாம் விட்டுக்கொடுத்துப் புரிந்து கொள்ளுதல் என்பார். ஷெல்லி யைக் கேளுங்கள் : ஒரு லில்லிப் பூவால் முகத்தை வருடுவது போன்றதொரு உணர்வு என்பார். இவ்வளவு ஏன், பக்கத்து வீட்டுக் காலேஜ் பையனைக் கேளுங்கள்...

பஸ்ஸெல்லாம் மிஸ் பண்ணி விட்டுக் கண்களால் பேசிக் கொள்ளுதல் என்பார்.

ஆனால்... அண்ணன் எஸ். ஏ. சந்திரசேகரன் சொல்வதென்ன தெரியுமா? வக்ரமே காதல்; காதலே வக்கிரம்!' ஆமய்யா, படத்தைப் பார்த்தவங்க அந்த முடிவுக்கு வரதுல பர்சன்டேஜ் பிரச்னையே இருக்காது!

எஸ். ஏ. சியின் உன்னத சிந்தனை யாருக்கு வரும்? ஆஸ்காரில் அரை வீசை கொடுத்தாலொழிய அன்னாரின் கலைச் சேவையைப் பாராட்டியதாகாது.



• ரசிகன்

காதல் என்றிருந்தால் வில்லன் வேண்டாமா? இந்தப் படத்தில் ஏரான வில்லன்கள். கதாநாயகன் விஜய், கநாயகி சங்கவியின் அப்பா விஜயகுமார் மற்றும் இயக்குநர்.

அதென்னய்யா, பூரணக் கொழுக்கட்டை மாதிரி, ஒரு பாவம் காட்ட முடியாத முகம் அந்தப் பையனுக்கு? பாவம், சும்மா காதலித்துப் போக விட்டிருக்கக் கூடாதோ? 'தேமே'ன்னு இருக்கிறவரைப் பிடித்து ஒரு வில்லன் குரூப்பில் சிக்க விட்டு, அவர் தையா தக்காவென்று காக்கை வலிப்பு வந்தாற்போல ஒரு சண்டை போட்டு, வீர சபதமெல்லாம் எடுத்து, க. நாயகியைக் காப்பாற்றப் போய்...

விஜய்யை விட, ஒரு சீனில் அவர் பைக்கிற்குப் பஞ்சர் பார்க்கும் அந்தக் கடைக்காரரே பெட்டர்.

கவர்ச்சிக்கு விசித்ரா, முதல் நாலு சீனில் வீட்டு வேலை செய்பவர், ப்ரமோஷனில் மெட்ராஸ் வந்து அரை நிஜார் ஆட்டோ டிரைவராகி, டிரைவர் சங்கத் தலைவராகி, காடு, மேடு, ரோடு, வீடெல்லாம் ஆடி, ஆடி—

அந்த வரிகளைச் சொல்லுங்கள்! சென்ஸார் அதிகாரிகளுக்கெல்



**காந்தி சொன்ன காப்பி!**

**காப்பி விலை எக்கச்சக்கமாக ஏறியுள்ள நிலையில் காந்தியடிகள் காப்பிக் கொட்டைக்குப் பதிலாகக் கோதுமையைப் பயன்படுத்தலா மென்று கூறியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்ளலாமே!**

**சம்பா கோதுமையை நன்றாகக் கருக வறுத்துப் பொடியாக்கிக் காப்பி தயாரித்துப் பருகலாம். நீரிழிவு நோய்க்காரருக்கும் ஏற்றது என்பதுடன் வேறு பல ரோகங்களுக்கும் நல்லது.**

**நல்ல மணம் வேண்டுவோர் இந்தப் பொடியைத் தயாரித்து, அதில் கொஞ்சம் கொத்துமல்லி விதைப் பொடியையும், பயன்படுத்தலாம். ஏலக்காயும் மல்லியும் சேரும்போது இதயத்துக்கும் நல்லது.**

**- எம். வெங்கடேசன் -**

லாம் ஹியரிங் எய்ட் வாங்கித் தரக் கூடாதா, நம் மாண்புமிகு அரசு? பச்சை என்று சொன்னால் அந்த நிறத்துக்கு அவமானம். காதல் புரட்சியாளர் எஸ். ஏ. சந்திரசேகரன் வாழ்க! வேறென்ன, கலிங்கத்துப் பரணியா பாட முடியும்?

இது தவிர, டேஞ்சர் லைட் விடுதி, நீச்சல் குளம், போலீஸ் லாக் அப் என்று கிடைத்த சகலமான இடங்களிலும் ஆபாச நடனக் காட்சி அமைத்திருப்பது இந்த யுகத்தின் மாபெரும் புரட்சி. ('இந்து'வெல்லாம் எந்த மூலைக்குங்க?) லாவிபப் சாப்பிட்டுக் கொண்டு இதையெல்லாம் சென்ஸார் ரசித்து, அனுமதித்திருப்பது அதனினும் புரட்சி.

படத்தில் ஒரு பாடல். 'தம்பி கொஞ்சம் நில்லப்பா, தப்பிருந்தா சொல்லப்பா'.

- இப்படி ஒரு வக்கிரப் படம் எடுத்திருப்பதை விட வேறொரு தப்பு இருக்க முடியும் என்று தோன்றவில்லை.

## சாது

**வா**சுவுக்கு ஒரு வார்த்தை. படத்துக்குப் படம் தாய் வணக்கம் என்ற பெயரில் நாலைந்து நெஞ்சைப் பிழியும் காட்சிகளையும் ஒரு போற்றிப் பாடலையும் விடாது சேர்த்து விடுவது ஒரு கட்டத்தில் தமிழகத் தாய்மார்கள் பொங்கி எழ நேரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியது. மாற்ற முயன்றால் சரி.

கதை பற்றிச் சொல்ல வேண்டாம். சாது மிரண்டால் என்ன ஆகும் என்பதைச் சொல்ல, இன்டர்வலில் மிரள வைத்து, பிற்பகுதியில் பலத்த ரகளை. இரண்டு ரவுடி கோஷ்டி, அரசியல் தொடர்பு, தேர்தல், கலாட்டா என்று கிட்டத்தட்ட தெலுங்கு மார்க்கெட்டையும் எய்ம் பண்ணி எடுத்திருக்கிறார்கள்.

அர்ஜுனுக்குச் சண்டையை விடவும் இப்போது நடிப்பு பிரமாதமாக வருகிறது. கீழ்க்குரலில் ஒரு மாதிரி பேஸ் கிடார் தொனியில் உறுமுவதெல்லாம் வெகு ரசிக்கிறது. சாது, மி.மு., மி.பி. என்று இரு பாகங்களாகப் பிரித்துக் கொண்டு முற்றிலும் மாறுபட்ட இருவித பாவம் காட்டுகிறார்.

ஹீரோயின், பம்பாய் இறக்குமதி. ரவீனா தண்டம். ஸாரி.. தண்டன். டைரக்டரின் புத்திசாலித்தனத்தை - அம்மணியை உபயோகித்திருக்கும் விதத்திலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலும் லாங்-ஷாட்.

படத்தில் ரசிக்கக்கூடிய ஒரு விஷயம் போலீஸ் அதிகாரியாக வரும் ராஜீவின் கேரக்டர். தன்னால்தான் ஒரு சாது, ரவுடியாகியிருக்கிறார் என்பது தெரிந்து, அவர் வேலையை ரிஸைன் பண்ணும் இடம் வெகு நேர்த்தி. 'இதைப் பார்த்த பின்னாவது முன்னாள் சாது மீண்டும் சாதுவாக மாட்டாரோ?' என்றால் 'மிச்சம் மீதி பாக்கியிருக்கிற கொலைகளை யாரையா பண்ணுவார்கள்?' என்கிறார் வாசு.

கடைசி ஷாட் வரை சும்மா கசாப்புக் கடை மாதிரி கத்தி, ரத்தம் என்று கடை பரப்பி விட்டு, படம் முடிகையில் "வன்முறையை ஒழிப்போம்" என்று ஸ்லைடு காட்டுவதற்குப் பெயர் பம்மாத்து வேலை.

**- ஆர்.பி.ஆர்.**

**"என்ன சார், போன மாசம் என் சேவிங்ஸ் கணக்குல ஐயாயிரம் இருந்தது. பணமே எடுக்காத போது இன்னிக்கி எப்படி இரண்டாயிரம்தான் இருக்குங்கறீங்க?"**

**"ஒரு மாசமா உங்க பணத்தை வங்கி பாதுகாப்பா வெச்சுண்டதுக்காக மூவாயிரம் ரூபா 'சர்வீஸ் சார்ஜா' எடுத்துண்டுட்டோம்!"**

**- டி. என். மகாலிங்கம்**



# அஸ்வினி மஸில் ஆயில்

## மூட்டு வலி, சுளுக்கு மற்றும் இதர வலிகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது.




அஸ்வினி மஸில் ஆயில்

**அஸ்வினிக்கு நன்றி!**

சமூக சேவையில் ஓடி. ஆடி. வேலை செய்து அலுவலகம்
திரும்பும் போது வலி — உடம்பெல்லாம். உடம்பில் ஏறி
யாராவது நடக்கமாட்டார்களா என்று ஏங்கும் அளவுக்கு வலி !
எத்தனை தைலங்கள் ... எத்தனை மாத்திரைகள் ...
எத்தனை வலி நிவாரணிகள் ...? !
கடைசியில் கண்ணில் பட்டது அஸ்வினி மஸில் ஆயில் !
உழைத்து வந்தவுடன் அலுப்பு இல்லை. உழைக்க போகும்
முன் சலிப்பு இல்லை. வாழ்க அஸ்வினி குடும்பத்தார் !
என்றும் மாறா அன்புடன்.
டி. ஜி. ஜெ. ஜெபராஜ், எம். எஸ். டபிள்யூ.
சமூக விஞ்ஞானி, 12, கே. ஏ. கோயில் தெரு.
இராமநாதபுரம் 623 501.

இல்லந்தோறும் இருக்கவேண்டிய வலி நிவாரணி

விற்பனையாளர்கள் :
அஸ்வினி ஹோமியோ & ஆயுர்வேதிக்
பிராடக்ட்ஸ் லிமிடெட்
5-283, எச். பி. ரோடு, மூஸாபெட், ஐதராபாத் 500 018

---

கேட்டறியுங்கள் உங்கள் புதிய

# ஜாதகபலன் ஜோதிட போன்


இந்த வாரபலன்கள்

**0011 222 222 0+□□**

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் குரிய ராசிக்குக் கொடுத்துள்ள இரண்டு எண்களையும் டயல் செய்யவும்.

| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |
|---|---|---|---|---|---|
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி |
| 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |

## மன ஜோதிடம்



உங்கள் வருங்கால ரகசியங்களை அறிந்திடுங்கள்

☎ **0011 222 222 030**

## பொருத்தம்



உங்கள் துணையும் நீங்களும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்களா? என்று தெரிந்து கொள்ளுங்கள்

**0011 222 222 043**

## பட்சி சாஸ்திரம்



ஒரு பண்டைய ஆருட முறை. உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.

☎ **0011 222 222 025**

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ. யு.எஸ்.ஏ.

# இந்திரா பார்த்தசாரதி 7

# வேதபுரத்து வியாபாரிகள்

'நாற்காலியை திட ரூபத்தில் கண்டால் நாற்காலியாகத் தெரியும். அதைச் சக்தி (Energy) வடிவமாகக் காண வேண்டுமென்றால், நாமே பரமாணுவாக மாற வேண்டும். நாற்காலிதான் நம் தெய்வம். அதை வணங்குவோம்...'

('விஞ்ஞானமும், அரசியலும்' - பேராசிரியர் மூத்து கிருஷ்ணன். பக். 136)

**வா**சல் மணி ஒலித்தது.

வனிதா கதவு துவாரம் வழியாகப் பார்த்து விட்டு, சோபாவில் உட்கார்ந்திருந்த அபூர்வாவிடம் சொன்னாள் : "யார்னு தெரியலே..."

"கேளு" என்று புத்தகத்தினின்றும் பார்வையை விலக்காமலேயே அபூர்வா சொன்னாள்.

சங்கிலியை விலக்காமல், கதவைச் சிறிது திறந்து, வனிதா கேட்டாள் : "யார் வேணும்?"

"மிஸ். அபூர்வா..."

"நீங்க யாரு?"

"மிஸ். அபூர்வாவைப் பார்க்கணும்..."

"சரிதான்யா, நீங்க யாரு?"

வந்தவருக்கு ஐம்பத்தைந்து வயதிருக்கலாம். படித்தவர் மாதிரி தெரிந்தது.

"மிஸ்டர் நஞ்சுண்டனிடமிருந்து வரேன்."

"கதவைத் திற" என்றாள் வனிதா.

வனிதா கதவைத் திறந்தாள்.

தலையில் வெள்ளி மயிர் சிலிர்த்துக் கொண்டு நின்றது. முடியின் நிறந்தான் வயதை அறிவித்தது.

பேராசிரியராக இருக்கலாமென்று அபூர்வாவுக்குத் தோன்றிற்று.

கையில் ஒரு தோல் பை இருந்தது. கனமான தோல் பை.

"என் பேர் உதயன். டாக்டர்... மிஸ்டர் நஞ்சுண்டன் உங்களைச் சந்திக்கும்படி இன்று காலை ஃபோன் செய்தார்."

"டாக்டர் நஞ்சுண்டனா?"

"இல்லை. மிஸ்டர் நஞ்சுண்டன்."

"டாக்டர் என்றீர்களே?"

"உட்காரலாமா?"

"மன்னிக்கவும்... உட்காருங்கள். உங்கள் நாட்டு மொழியிலேயே பேசலாமே... எனக்கு நல்லா பேச வரும்."

அவர் புன்னகை செய்தவாறே உட்கார்ந்தார்.

"நஞ்சுண்டன் என்னுடைய 'ஸ்டூடன்டா' இருந்தார். இன்னிக்கு நல்லாருக்கேன்... எனக்கு ரொம்ப சந்தோஷம்..."

"அப்படியானால்....?"

"சொல்லுங்கள்..."

"நான் அம்பத்துஞ்சுன்னு நினைச்சதும் தப்பு..."

"அவர் சிரித்துக் கொண்டே சொன்னார் : "பத்தைக் கூட்டிக் கொள்ளுங்கள்."

"உங்கள் இளமையின் ரகசியம் என்ன?" என்றாள் அபூர்வா புன்னகையுடன்.

"அழகிய பெண்களிடம் என் பழைய மாணவன் சார்பாக..."

"சொல்லுங்கள்."

"முக்கிய விஷயங்களைப் பற்றி விவாதிக்கப் போதல்..."

இருவரும் சிரித்தனர்.

"பேச்சு திசை மாறிப் போய், நான்



கேட்ட கேள்வி, விடையை மறந்து ஒளிந்து கொண்டு விட்டது..."

"என்ன கேள்வி?"

"டாக்டர் நஞ்சுண்டன் என்று சொல்லி விட்டு, உடனேயே மிஸ்டர் நஞ்சுண்டன் என்று மாற்றிச் சொன்னீர்களே?"

"எங்க மொழியிலேயே பேசலாமா?"

"பேசுங்க. நஞ்சுண்டனுக்கு நீங்கள் எங்க மொழியைக் கத்துத் தந்திருக்கணும். உங்க உச்சரிப்பு அவ்வளவு நல்லாருக்குது."

"உங்களுக்கு யார் எங்க மொழியைக் கத்துக் கொடுத்தது? யாரைப் பாராட்டணும்?"

"மறுபடியும் திசை மாற்றம்... சொல்லுங்க, நஞ்சுண்டன் டாக்டர் பட்டம் வாங்கினவர் தானே?"

"வாங்கியிருக்கலாம். ஆனா எங்க நாட்டிலே ஒரு டாக்டர்தான் இருக்க முடியும்."

"யாரு?"

"எங்க தலைவர். அதனாலே மத்தவங்க போட்டுக்கிறதில்லே..."

"போட்டுக்கிறதில்லையா, போட்டுக்கக் கூடாதுன்னு சட்டமா?"

"சட்டம்னு எங்க நாட்டிலே எதுவும் கிடையாது..."

"புரியலே."

"ஒரு புத்தகமிருக்கு. பெரிய புத்தகம். எங்க தலைவர் எல்லாத்தையும் பத்திச் சொல்லியிருக்கிற அபிப்பிராயங்கள். அது தான் எங்களுடைய அரசியல் சட்டம். பள்ளிக்கூடத்திலிருந்து படிச்சு, படிச்சு அநேகமா எல்லாருக்கும் மனப்பாடம். எந்தச் சமயத்திலே எப்படி நடந்துக்கணும்னு எங்க எல்லாருக்கும் அத்துப்படி."

"அதிலே தலைவர், தன்னைத் தவிர மத்தவங்க டாக்டர் பட்டம் போட்டுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காரா?"

"என்னங்க கேள்வி இது? அவர் எதுவும் சொல்லலே. அவரைத் தவிர மத்தவங்களுக்கு அந்தப் பட்டம் பொருந்தாதுன்னு ஜனங்களே பிரியப்பட்டு ஏற்றுக் கொண்ட முடிவு..."

"டாக்டர் பட்டம் அவ்வளவு முக்கிய மான விஷயமா?"

"நல்ல கேள்வி" என்று அவர் சொல்லும் போது, குரல் மாறியிருந்தது. கீழ்க் குரலில் சொன்னார். அவர் பார்வை ஜன்னலுக்கு வெளியே, வானத்தில் லயித்தது. ஓர் ஒற்றைப் பறவை, ஒரு புள்ளியாய் பறந்து கொண்டிருந் ததை, அவர் பார்ப்பது போலிருந்தது.

"நஞ்சுண்டன் எதுக்காக என்னைப் பாக்கச் சொன்னார்?" என்று கேட்டாள் அபூர்வா.

"இந்தப் பையிலிருக்கிற புத்தகங்களைக் கொடுத்தனுப்பினார். எல்லாம் எங்க நாட் டைப் பத்தி, எங்கள் தலைவரைப் பத்தி..."

"எல்லாம் அவர் எழுதினதா?"

"அவர், மத்தவங்க, இப்பொ இந்த நாட்டி லேருக்கிற எல்லா முக்கியமான புள்ளிங்க... எல்லாரும்."

"நான் தலைவரைப் பாக்கணுமே."

"பல கோணங்கள்லே எழுதப்பட்டிருக் கிற புத்தகம்... அரசியல்வாதி, இலக்கிய விற் பன்னர், பொருளாதார மாமேதை, தத்துவ ஞானி, விஞ்ஞானி..."

"பொருளாதார மாமேதைங்கிறீங்க... ஆனா எப்படி இத்தனை ஏழைங்க உங்க நாட்டிலே இருக்காங்க?"

"கொஞ்சம் குடிக்கத் தண்ணி வேணும்!"

"மன்னிக்கவும்... காப்பி...?"

"முதல்லே தண்ணி கொடுங்க."

அபூர்வா எழுந்து உள்ளே சென்றாள். வனிதா சமையலில் ஆழ்ந்திருந்தாள்.

"காப்பி போடு...."

"யார் அவரு? நஞ்சுண்டன் அனுப்பிச்சா ராமா?"

"ஆமாம்."

"நஞ்சுண்டனுக்கு எங்கே வாத்தியாரா இருந்தாராம்? நான் எல்லாம் கேட்டுக்கிட்டுத் தானிருந்தேன். நஞ்சுண்டன் இந்த ஊர்லே படிக்கலே..."

"உனக்கு நஞ்சுண்டனைப் பத்தி இவ் வளவு விவரங்க எப்படித் தெரியும்?"

"என் தொழில்லே... அதான் என் மாஜி தொழில்லே எல்லாரையும் பத்தித் தெரிஞ் சுக்க வேணாமா? கவியன் வீட்லேருந்தேன். அவர் வீட்டுக்கு எத்தனை அரசியல்வாதிகள் வருவாங்க...?"

"நீ பொய் சொல்றே."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"நஞ்சுண்டன் உன் தொழில்லே நீ தெரிஞ் சுக்கிற ஆள் இல்லே. நீ ஏதோ மறைக்கிறே..."

"வந்தவரைக் கவனியுங்க... இதைப் பத்தி அப்புறம் பேசுவோம்... நான் காப்பி கொண் டாறேன்."

அபூர்வா ஒரு தட்டில் தண்ணீர் தம்ளரை எடுத்துக் கொண்டு சென்றாள்.

அவர் தண்ணீரைக் குடித்து விட்டு, மிக மிருதுவான குரலில் கேட்டார் : "நான் 'ஸ்மோக்' செய்யலாமா?"

"நோ... ப்ளீஸ்."

"ஐ ஆம் ஸாரி."

அபூர்வா சில விஷயங்களில் கண்டிப் பானவள். வீட்டில் யாரையும் புகைக்க அனு மதிப்பதில்லை. வெளியே எடுத்த சிகரெட் பாக்கெட்டை, அவர் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

"உங்களுடைய வெளிப்படையாகப் பேசும் தன்மை எனக்குப் பிடித்திருக்கிறது" என்றார் உதயன்.

"இது உங்க நாட்டிலே ஒரு அதிசயமான விஷயமில்லையா?"

அவர் பையைத் திறந்து புத்தகங்களைக் காண்பித்தார்:

"ஒரு புத்தகம் கொடுங்க..."

அவர் எடுத்துக் கொடுத்தார். அவள் புரட்டிப் பார்த்தாள். ஆசிரியர் பெயர் 'இன்னப்பன்' என்றிருந்தது.

"இவர் அமைச்சரில்லே?"

"ஆமாம்... முதல்லே நெசவுத் தொழில்லே இருந்தார். புத்தகம் எழுதறதும், நெசவுத் தொழிலும் கிட்டத்தட்ட ஒண்ணுதானே?"

"ஆனா நெசவு எல்லாருக்கும் உபயோகப் படற தொழில் இல்லியா?"


வனிதா காப்பி கொண்டு வந்தாள். அவள் தட்டை உதயனிடம் நீட்டினாள். அவர் அவளை ஒரு கணநேரம் உற்று நோக் கினார்.

"நீங்க நஞ்சுண்டனுக்கு எங்கே ஆசிரியரா இருந்தீங்க?"

அவர் ஊர் பேரைச் சொன்னார்.

"இந்த ஊர்லே இல்லியா?"

"இல்லே."



## செஸ்ஸை கண்டு பிடித்தவர் யார்?

**செஸ் விளையாட்டைக் கண்டு பிடித்தது ராவணனின் மனைவி மண்டோதரி! ராவணனுக்கு இருந்த அறிவை ஒரு பொழுது போக்கில் பயன்படுத்த நினைத்து மண்டோதரி செஸ் விளையாட்டைக் கண்டு பிடித்தாளாம்.**

**— ''இந்தியன் எக்ஸ்பிரஸ்''ஸிலிருந்து : என் பங்கஜம்**

---

வனிதாவின் முகத்தில் நம்பிக்கை தெரிவது போல் அபூர்வாவுக்குப் பட்டது. வனிதாவின் முகத்தில் ஓர் ஆமோதிக்கும் புன்னகை.

வனிதாவும் ஒரு தம்ளரைக் கையில் வைத்துக் கொண்டு அபூர்வா அருகில் உட்கார்ந்தாள்.

"இவங்க...?" என்று இழுத்தார் உதயன்.

"என் தோழி, செகரட்ரி, எல்லாம். வேதபுரியைச் சேர்ந்தவதான்..."

"அப்படியா? சந்தோஷம்..."

"தலைவரின் பொருளாதார மேதைத் தனத்தைப் பத்தி இவர் எழுதியிருக்காரே, ஆனா, அப்பொ நான் கேட்ட கேள்வி... இன்னும் நீங்க பதில் சொல்லலே - உங்க நாட்டிலே இத்தனை ஏழைகள்... அதுவும், பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே இத்தனை பெரிய இடைவெளி... அதைச் சரி செய்ய அவர் ஏன் முயற்சி எடுக்கலே...?"

" 'ஏழையின் இதயத் தெய்வம்'னு அவருக்கு ஒரு பட்டமிருக்கு, அது தெரியுமா உங்களுக்கு...?"

"அந்தப் பட்டம் நிரந்தரமா இருக்கணும்னுதான் அவர் வறுமையை ஒழிக்கறது பத்தி யோசிக்கலியா?"

"கேள்வியைக் கேட்டுட்டு நீங்களே பதிலும் சொல்றீங்க..." என்று அவர் புன்னகையுடன் சொன்னார்.

"இந்தப் புத்தகங்கள் எல்லாத்தையும் படிச்சு முடிக்கவே மூணு மாசம் ஆகும் போலிருக்கே?" என்றாள் அபூர்வா.

"அவசியமில்லே. ஒண்ணைப் படிச்சா, எல்லாத்தையும் படிச்ச மாதிரி. விஷயம் ஒண்ணுதான், சொல்லப்படற விதந்தான் வேற... அடிப்படையிலே பாக்கப் போனா, இதுதானே கலை?"

"சரி... என்னுடைய இன்னொரு கேள்விக்கு பதில்...?"

"என்ன கேள்வி?"

"உங்கள் தலைவரை நான் சந்திக்க வேண்டும்."

"இந்தப் புத்தகங்களை எப்படிப் படிக்கணும்னும் நஞ்சுண்டன் சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன்."

"எப்படிப் படிக்கணும்? அவர் சொல்லலே."

"இதிலே சொல்லப்பட்டதைக் காட்டிலும், சொல்லப்படாத விஷயங்களில்தான், அதாவது, சொல்லப்பட்டதிலிருந்து, யூகித்தறிய வேண்டிய சொல்லப்படாத விஷயங்களில்தான் அர்த்தம் ஊடுருவி, வெளியே பகிரங்கமா புலப்படாமெ, அந்தர்யாமியா இருக்கும். அதைப் புரிஞ்சுக்கணும்."

"உங்க தலைவர் மாதிரி..."

"ஆமாம்... அவரை திடரூபத்திலே பாக்கணும்னா சிலையா, பெரிய பெரிய படமா தெரிவார். சக்தி ரூபத்திலே பாக்கணும்னா, அதாவது, Matter and Energy மாதிரி வச்சுக்கங்களேன், நாமே கண்ணுக்குத் தெரியாத 'நியூட்ரான்', 'ப்ரோட்டான்' மாதிரி பரமாணுவா மாறணும். அகிலாண்ட கோடி சக்தி ஓயாத சுழற்சியிலே இருக்கிற மாதிரி, தலைவரைச் சக்தி வடிவத்திலே உணர முடியும். அந்த மாதிரி உணர்ந்தவங்க ரொம்ப ரொம்ப ரொம்பக் குறைவு...."

"இப்பொவே நீங்க எல்லாருமே இந்த நாட்டிலே பரமாணுவா இருக்கிற மாதிரி தானே எனக்குப் படறது? உங்களை மனுஷங்களா உணர நான் என்ன செய்யணும்?"

உதயன் புன்னகை செய்தார்.

வனிதா காப்பி தம்ளர்களைத் தட்டில் வைத்து உள்ளே எடுத்துக் கொண்டு போனாள்.

"இந்த நாட்டிலே எதிர்க்கட்சிகளே கிடையாதா?" என்று கேட்டாள் அபூர்வா.

"வச்சிருக்காரே?"

"யார் வச்சிருக்காரே?"

"தலைவர். நாலஞ்சு பேரைப் பொறுக்கி எடுத்து நீங்கதான் எதிர்க்கட்சின்னு சொல்லியிருக்காரு... அவங்களுக்குக் கோஷம் போடுதற்குன்னு ஒரு அகராதி பிரசுரமாயிருக்குது. அதைப் பார்த்து கோஷம் போடுவாங்க. சிறப்பு கோஷம் போடறவங்களுக்கு அரசாங்கப் பரிசும் உண்டு. இதுதான் எங்க ஜனநாயகத்தோட வெற்றின்னும் என்னாலே சொல்ல முடியும்..."

"இதைச் சொல்லத்தான் நஞ்சுண்டன் உங்களை அனுப்பினாரா?"

"இந்தப் பையிலே, புத்தகங்களுக்கடியிலே உங்களுக்குத் தேவையான விஷயங்களுமிருக்கு. இது உங்க செக்கரெட்டரிக்குக் கூட தெரிய வேணாம். யாரையும் நம்ப முடியாது. நாங்க இருக்கிற சூழ்நிலையிலே..." என்று மிகச் சன்னமான குரலில் கூறினார் உதயன்.

(தொடரும்)

# 10 லட்ச ரூபாய் பரிசு பெறும் பத்மா!

பத்து லட்ச ரூபாய்! சாதாரண விஷயமல்ல; ஆசிய கலாசாரப் பரிசாக இந்தத் தொகையைப் பெறும் பத்மா சுப்ரமண்யம் அதை என்ன செய்யப் போகிறார்?

பாராட்டுதல்களைத் தெரிவித்து விட்டு, இந்தக் கேள்வியைத் தொடுத்தோம் பத்மா சுப்பிரமணியத்திடம். "இன்னும் முடிவு செய்யவில்லை" என்றார்.

● **இந்தப் பரிசு பற்றிய மற்ற விவரங்களைக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

"கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்பட்டு வருகிறது இந்தப் பரிசு. ஜப்பானில் உள்ள ஃபுகுவோகா நகரமும், யோகடோபியா ஃபவுண்டேஷனும் இணைந்து இதை வழங்குகிறார்கள். இந்தியர்களுள் சிதார் மேதை ரவிசங்கர் மட்டுமே இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார். நான் இரண்டாவது. நாலு பிரிவுகளில், நாலு பேருக்கு இந்தப் பரிசுகள் வருடா வருடம் வழங்கப்படுகின்றன. 'கிராண்ட் பிரைஸ்' மட்டும் ஐம்பது லட்சம் யென். மற்ற மூன்று பரிசுகளும் முப்பது லட்சம் யென்.

"அறுபது நாடுகளிலிருந்து 3200 பரிந்துரைகள் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டவை 200.

" 'ஆசிய கலை - கலாசார முன்னேற்றத்துக்கு உழைத்தவர் என்ற தகுதியின் காரணமாக எனக்கு இந்த வருடம் பரிசு அளிக்கப்படுகிறது' என்று விவரித்தார் அழைப்பிதழைக் கொண்டு வந்த பரிசுக் குழுவின் செயலர் ஒகாடா. செப்டெம்பர் 2ஆம் தேதி ஜப்பானில் பரிசு வழங்கும் விழா.

"இதை, காஞ்சிப் பெரியவரின் ஆசி என்றே நினைக்கிறேன்."



● **புத்தகங்கள் எழுதப் போகிறீர்களாமே?**

"ஆமாம். அதில் ஒன்று காஞ்சிப் பெரியவரைப் பற்றியது. சுமார் பத்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. சதாராவில் நடராஜர் கோயிலில் 108 கரணாக்களை விளக்கும் சிற்பங்கள் வைக்கும் போது, என்னை ஜாவாவுக்குப் போய் அங்குள்ள பிரம்மா - விஷ்ணு - சிவன் மூன்று பேருக்கும் அமைந்துள்ள கோயில்களைப் பார்த்து விட்டு வரச் சொன்னார் பெரியவர். என்னால் அப்போது போக முடியவில்லை. ஒரு இதாலிய பெண்மணி டாக்டர் அலெக் சாண்ட்ரா என்னிடம் வந்து மாணவியாகச் சேர்ந்துள்ளார். அவர், நாட்டிய சாஸ்திரத்துக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டார். என்னை ஜாவாவுக்குப் போய் வரும்படி சொன்ன பெரியவரின் ஆலோசனை நினைவுக்கு வர, அலெக்ஸாண்ட்ராவை அங்கே போய்ப் புகைப்படங்கள் எடுத்து வரச் சொன்னேன். ராமாயணச் சிற்பங்கள் தவிர, 108 கரணங்களும் அங்கே சிற்பங்களாக இருந்தன என்பதுதான் அதிசயம். அவற்றைப் புகைப்படங்களாக அலெக் சாண்ட்ரா எடுத்து வந்ததைப் பார்த்தால் - நான் சதாரா கோயிலில் எப்படி அமைத்திருந்தேனோ அதே போலவே அவை அமைந்திருந்தன! ஒன்பதாம் நூற்றாண்டுச் சிற்பங்களான அவற்றுக்கும் நான் அமைத்தவற்றுக்கும் உள்ள ஒற்றுமை காஞ்சி பெரியவரின் ஆசியால் அமைந்ததுதான்."



('இட் வாஸ் எ மிரகிள்!' என்றார் பேட்டியின் போது உடனிருந்த டாக்டர் அலெக் சாண்ட்ரா.)

● **எதிர்காலத் திட்டங்கள் ஏதானும் வைத்திருக்கிறீர்களா?**

"50-60 வருடங்களுக்கு முன்னால், தமிழ் நாட்டில் உள்ள அத்தனை பெரிய கோயில்களிலும் நாட்டியம் நடந்தது. நாதஸ்வரம் எங்கெங்கும் ஒலித்தது. கோலம் போடும் போது, 'இது காலையில் வாசிக்கிற ராகம்' என்று நாதஸ்வர இசை கேட்டு கிராமத்துப் பெண்கள் சொல்ல முடிந்தது. இன்று இந்தக் கலைகள் எல்லாம் கிராமங்களை விட்டு நக



ரங்களுக்கு வந்து விட்டன. வழுவூர் என்கிறோம், பந்தநல்லூர் என்கிறோம் - இந்த இடங்களில் எல்லாம் நாட்டியாசாரியர்கள் யாருமே இப்போது இல்லை. இந்தப் பாணி எல்லாம் அங்கே உள்ளவர்களுக்கே இப்போது தெரியாது. கல்கரல் பாலிஸியை அறிவிக்கிறோம் என்று சொன்ன மத்திய அரசிடம், இந்தக் கலைகளை எல்லாம் மறுபடி கிராமங்களுக்கே கொண்டு செல்லுங்கள் என்று சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. நானே செய்யத் தீர்மானித்து விட்டேன்."

● **என்ன செய்யப் போகிறீர்கள்?**

"நாகப்பட்டினம்தான் எங்கள் சொந்த ஊர். அங்கே எங்களுக்கு நிலம் இருக்கிறது. அங்கு எனது நாட்டியப் பள்ளியான 'நிருத்தியோதயா'வின் கிளை ஒன்றைத் தொடங்கப் போகிறேன். கலையும், கலாசாரமும், வாழ்க்கை மரபுகளும் அங்கே போதிக்கப்படும்."

● **நீங்கள் படித்தது வழுவூர் பாணி என்கிறீர்கள். ஆனால் உங்கள் நடனம் வழுவூர் பாணியே அல்ல என்று சொல்லுகிறார்களே?**

"எனக்கு அஸ்திவாரம் மட்டுமே வழுவூர் பாணி. நான் கடைப்பிடிப்பது நாட்டிய சாஸ்திரப் பாணி. நான் அனுபவங்களின் குவியல். பல்வேறு முனைகளிலிருந்து நான் கற்ற அனுபவங்கள்; அதை வைத்துக் கொண்டு என்னுடைய எல்லைகளை நான் விரிவுபடுத்திக் கொண்டேன். இந்த மாற்றங்களை நான் செய்கிற போது, அவை பற்றிய உணர்வே எனக்குள் எழுவதில்லை."

● **'என் நடனப் பயிற்சி முறைகளைப் பின்பற்றுங்கள். ஆனால் என் மாதிரியே செய்யாதீர்கள்' என்று பல நடனக் கலைஞர்களும் தங்கள் மாணவிகளிடம் சொல்லுகிறார்கள். ஆனால் உங்கள் மாணவிகளோ அப்பட்டமாக உங்கள் பாணியையே பின்பற்றுகிறார்களே?**

"அதில் என்ன தவறு? என்னை என் மாணவிகள் காப்பி அடிப்பதில் எந்தவிதக் குற்றமும் இல்லை என்பேன். என்னுடைய பாணியில் நான் பல புதுமைகளைப் புகுத்தினேன். மறந்து போன பல விஷயங்களை நான் புதுப்பித்து வந்திருக்கிறேன். என் பாணியைக் குறைசொல்லுபவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. பரிதாபப்படுகிறேன்!"

● **ஆசிய கலாசாரப் பரிசு கிடைத்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

"இந்தப் பரிசை எல்லா நாட்டியக் கலைஞர்களுக்கும் சேர்த்துக் கொடுத்ததாகவே எண்ணிக் கொள்ளுகிறேன்."

o
oo புகுவோகா நகர மேயரும், யோக டோபியா நிறுவனமும் கையெழுத்திட்ட அழைப்பிதழில், பத்மா சுப்பிரமணியத்தின் அசாதாரணத் திறமையையும், நடன அமைப்புகளில் அவர் தம்முடைய பாணியோடு நவீன முறைகளை நாசுக்காக இணைத்திருப்பதையும் வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள்.

"உலகம் முழுக்க பத்மா சுப்பிரமணியத்தின் நடனத் திறமை தெரிந்திருக்கிறது. இந்தியர்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே இந்தப் பரிசை வழங்குகிறோம்!" என்றாராம் அழைப்பிதழை நேரில் வழங்கிய ஒகாடா!

**- சாருகேசி**

வண்ணப்படங்கள் : **யோகா**


---

நடிகர் : கொஞ்ச நாள் எனக்கு மார்க்கெட் இல்லேன்றது நிஜம்தான் அதுக்காக இப்படியா?"

நிருபர் : என்ன ஆச்சு?

நடிகர் : இந்தப் பத்திரிகையைப் பாருங்க. "மறைந்த நடிகர் மாதவன் பற்றி நாலு வார்த்தைகள்"ன்னு என்னைப் பற்றி யாரோ கேள்வி கேட்க, ஆசிரியரும் பதில் சொல்லி இருக்கிறாரே!





*"முப்பது வருஷமா 'வைட் பாயா' இருந்தவர், இப்ப சினிமா பத்திரிகை ஒண்ணு ஆரம்பிச்சிருக்கார்!"*

*"ஏனாம்?"*

*"சினிமா உலகில நடக்கிற அநியாய, அக்கிரமங்களை வெளிச்சம் போட்டுக் காட்டப் போறாராம்!"*

*- வெ. சீதாராமன்*

# ஒரு காலப் பெட்டகம்



வைரவிழா மலர் வாங்கும் வாசகர்களுக்கு
பல பரிசுகள் காத்திருக்கின்றன:

Lalitha வழங்கும் வைர மோதிரம்
வெள்ளி டீ செட்

NEPC AIRLINES வழங்கும்
விமான டிக்கெட்டுகள்

Nalli
வழங்கும்
பட்டுப் புடவைகள்

Sumeet®
வழங்கும் மிக்ஸிகள்

சில்வர் லைன் வழங்கும் நவநாகரிக ஷர்ட்டுகள்

மலரின் விலை ரூ. 50.

* சீனியர் சர்குலேஷன் மானேஜர், இந்தியன் எக்ஸ்பிரஸ், எக்ஸ்பிரஸ் எஸ்டேட்ஸ், கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.

* மானேஜர், இந்தியன் எக்ஸ்பிரஸ், 137, காமராஜர் சாலை, மதுரை-625009.

* மானேஜர், இந்தியன் எக்ஸ்பிரஸ், 152, பங்கஜா மில் ரோடு, கோயமுத்தூர்-641 045.

உங்கள் பிரதிக்குரிய பணத்தை
இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை) லிமிடெட் பெயருக்கு
டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவும்.

அறுபது ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு நாளேடு, 'தினமணி.' இதன் வரலாறு ஒரு நாளேட்டின் வரலாறு மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய வரலாறும் ஆகும்.

தினமணி வைரவிழா ஆண்டு நிறைவையொட்டி கடந்த நாட்களின் காலப் பெட்டகமாகவும், நிகழ்கால அறிஞர்களின் படைப்புகளுடனும், எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களின் கதைகளோடும் ஒரு 'வைரவிழா மலர்' வெளிவரவுள்ளது.

* பழைய தலையங்கங்கள், சட்டமன்ற நிகழ்ச்சிகள், கார்டூன்கள்.

* வண்ணப் படங்கள்.


* அரசியல், விஞ்ஞான, இலக்கியக் கட்டுரைகள்.

* புகழ்பெற்ற இலக்கிய கர்த்தாக்களின் அன்றைய, இன்றைய படைப்புகள்.

400 பக்கங்களுக்கு மேல் எக்காலத்திலும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷம். எதிர்காலச் சந்ததியினருக்குத் தந்திட வேண்டிய பெரும் செல்வம்.

தினமணி

'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்.'



“ரிசப்ஷனுக்குப் போனா போதாதா? கல்யாணத்துக்கும் போகணுமா?”

சமையலறையிலிருந்து கௌசல்யா கேட்டாள். தாமோதரனுக்கு வெடுக்கென ஏதாவது சொல்ல வேண்டும் போல் தோன்றியது. கட்டுப்படுத்திக் கொண்டான். பேப்பரில் மீண்டும் முழுக முயற்சி செய்தான்.

“கேக்கறேன் இல்ல? மனுஷியா தோணலியா?”

“என்ன கேட்ட?”

“ரிசப்ஷனுக்குப் போனா போதாது?”

“போதாது.”

மேலே ஏதும் சொல்லாமல் நிறுத்தினான். இவளுக்கு சுந்தரத்தைப் பிடிக்கவில்லை. பார்வையே சரியில்லை என்பாள். அதற்கு என்ன செய்வது?

தாமோதரனைப் பொறுத்தவரை அவன் நண்பன். உபகாரி. பெரிய அபிப்பிராயமில்லை. ஆனால் பழக எளிமையானவன். வாழ்க்கை அவனை அலைக்கழிக்கிறது. வேறொன்றுமில்லை. ஐந்து வருடத்திற்கு முன் அவன் மனைவி, வேறொருவனோடு போய் விட்டாள்.

“இவனோட எவ வாழ்வா?”

கௌசல்யா ஒருநாள் சட்டெனக் கேட்டு விட்டாள். தாமோதரனுக்குப் பொறுக்கவில்லை.

“அவனுக்கு என்ன கொறைச்சல்?”

“என்ன கொறச்சல் இல்லாம இருக்கு? உங்க ஆபீஸ்ல பேசறாங்கன்னு நீங்களேதான் சொல்றீங்களே. யார பார்த்தாலும்தான் இளிச்சிக்கிட்டு நிக்கறார்ம்பீங்களே.”

பேச்சுவாக்கில் இதையெல்லாம் சொல்லியிருக்கிறான். அது விபரீதமாய் அர்த்தம் ஆகும் என்று நினைத்ததில்லை. ஆனால் சுந்தரம் அவ்வளவு விபரீதமானவனில்லை. நல்ல ஒரு பெண்ணைத் தேடுகிறான் என்று மட்டும் தோன்றும். அவனுடைய செயல்களுக்கெல்லாம் இவன் அப்படித்தான் அர்த்தம் கொண்டான்.

ஆனால் சொல்லும் போது, பேசும் போது, பல விஷயங்கள் ஓரளவுக்கு எடுபடுகின்றன. அதன் மோசமான பகுதிதான் முக்கியத்துவம் பெறுகிறது. இது உணர்ந்தவுடன் தாமோதரன் மிகவும் கவனமாய்ப் பேசத் துவங்கினான். ஆனாலும் கௌசல்யா மனத்தில் விழுந்த விதை வளரத்தான் செய்தது.

தற்செயலாய் ஒரு மழை நாளில் சுந்தரம் வீடு வந்தான். முழுதும் நனைந்திருந்தான். வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்திருக்கிறான்.

“தண்ணி உள்ள போயிடுச்சி. நின்னு சரிபண்ணலாம்னா, எடமே இல்லை. உன் வீடு ஞாபகம் வந்தது. வந்துட்டேன். ஏதும் தொந்தரவு இல்லியே?”

அவன் வந்த போது, இரவு மணி ஒன்பதுக்கு மேல். அப்பொழுதுதான் தாமோதரன் சாப்பிட்டிருந்தான். உள்ளே சமையலறையில் கௌசல்யா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

“சரி, மொதல்ல உள்ள வா. தலையைத் தொடச்சிக்கோ.”

லுங்கியும், டவலும் தர, அவன் ஆடைகளைக் களைந்து, கொடியில் போட்டான். தாமோதரனுக்குச் சாப்பிடச் சொல்லலாமா என்றிருந்தது. சமையலறை நிலைமை என்னவோ? சமையலறைக்குள் நுழைய, கௌசல்யா பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

“ஏதாவது வெச்சிருக்கியா சாப்பிடறதுக்கு?”

“ஒண்ணும் இல்லை.”

“ஏதாவது செய்றியா?”

“என்ன செய்யச் சொல்றீங்க?”

“உப்புமா, ஏதாவது?”

என்னவோ மெதுவாய் முணுமுணுத்தாள். கஷ்டந்தான். பேசாமல் வெளிவந்தான். சுந்தரம் வண்டியோடு போராடிக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அந்த வெராந்தாவே ரணகளமானது. வண்டியை ஓங்கி ஓங்கி உதைப்பதும், அது ஸ்டார்ட் ஆகாமல் முரண்டு பண்ணுவதும், ஸ்டார்ட் ஆனால், வெளியே எக்கச்சக்க புகையைக் கக்குவதுமாய் ஒரே இரைச்சல். உள்ளே அறையில் படுத்திருந்த கோபி எழுந்து வெளியே வந்து விட்டான்.

## ஆர். வெங்கடேஷ்

கண்ணில் தூக்கக் கலக்கம். என்ன செய்வது என்று தெரியாமல், அழவும் துவங்க, தாமோதரன் அவனைத் தோளில் தூக்கிக் கொண்டான்.

வெளியே எட்டிப் பார்த்த கௌசல்யா, கோபியை வந்து வாங்கிக் கொண்டாள். அப்பொழுதும் அவன் அழுகையை நிறுத்தவில்லை. வந்த கோபத்தில், அவன் தொடையைக் கிள்ள, கோபி அலறினான்.

"என்னத்துக்கு அவனைக் கிள்ற?"

தாமோதரன் உடனே கோபியை நெருங்கிப் போக, அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு படுக்கையறை போனாள். வெராந்தாவில் சுந்தரம் வண்டியை உதைத்துக் கொண்டிருந்தான்.

"ஸ்டார்ட் ஆவுது, பிராப்ளம் இல்லை."

புன்னகை செய்தான். தாமோதரனும் வெறுமனே தலையாட்டினான்.

"வரச் சொல்றீங்களா அவரை?"

திரும்பிப் பார்ப்பதற்குள், அவள் சமையலறை நுழைந்தாள். சுந்தரமும், தாமோதரனும் உள்ளே வர, டைனிங்டேபிளில் இலை போட்டிருந்தாள்.

"நீயும் சாப்பிடேன், வா!"

"இல்லை, இப்பத்தான் சாப்பிட்டேன். நீ உட்கார்."

நல்ல பசி. உப்புமாவையும், ஊறுகாயையும் வழித்துச் சாப்பிட்டான். கை கழுவினதோடு, உடனே கிளம்பி விட்டான்.

கௌசல்யா இலையை எதிர்த் தொட்டியில் போட்டுத் திரும்பினாள்.

சுந்தரம் வண்டியை ஸ்டார்ட் செய்தான். திரும்பி, "வரேன் தாமு. வரேங்க. உப்புமா நல்லாயிருந்திச்சி" - மெலிதாய்ச் சிரித்தபடி, கையசைத்து டாட்டா காட்டினான். அவளுக்கு வெறுப்பாய் இருந்தது.

கூடத்து விளக்கையணைத்து விட்டு, உள்ளே வந்தவன், யாருக்கோ சொல்வது போல் பேசத் துவங்கினாள்.

"அடுத்தவங்க வீட்டுல வந்து சாப்டுட்டு, கர்டஸிக்குக் கூட இலையை எடுக்கட்டுமான்னு கேக்கலை!"

தாமோதரன் பொறுமை காத்தான்.

"இதுல டாடா வேற காட்டறாரு. அடுத்தவன் பொண்டாட்டிக்கு... வெட்கங்கெட்ட ஜென்மங்க..."

"ஏய், என்னா பேசற? மரியாதையாப் பேசு."



"மரியாதையா நடந்துக்கிட்டா, மரியாதையாப் பேசுவாங்க. அடுத்த வன் பொண்டாட்டிக்கு டாட்டா காட்டறதிலேர்ந்தே தெரியலியா, எப்படிப்பட்ட ஆளுன்னு?"

"அவன் மரியாதைக்குக் கையாட்டியிருப்பான்டி. நீ ஏன் அதைத் தப்பா எடுத்துக்கற?"

"அது, மரியாதை இல்லை. புத்தி!"

புரிய வைக்க முடியாது. அவளுடைய கலாசாரம் அப்படி. அதில் வந்த பழக்கம் அப்படி. கையசைக்கும் கலாசாரம் அன்னியமானது. ஆனாலும் அன்பின் வெளிப்பாடு. சொன்னால் விளங்காது. விளங்கினாலும் இவள் ஏற்க மாட்டாள்.

"என்னடா இவ்ளோ லேட்?"

சுந்தரத்தின் குரல் சன்னமாகவே கேட்டது. தாமோதரனின் கையை இறுக்கிக் குலுக்கினான். பக்கத்தில் நின்ற நாளைக்கு மனைவி ஆகப் போகிற பாமாவை அறிமுகப்படுத்தினான்.

"என்னடா இப்படி டீல்ல வுட்டிட்டீங்க. நீங்கதானே எடுத்துச் செய்யணும்? என்னமோ கெஸ்ட் மாதிரி மெதுவா வர?"

பதில் சொல்ல முடியாத கேள்வி. எடுத்துப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டியவன்தான். இப்படி ஒரு மனைவியை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? தாமோதரனை விட்டு இரண்டடி பின்னால் தள்ளி நின்றிருந்தாள் கௌசல்யா. அருகே அழைத்தான். பாமா சிரித்தபடி, கைகுலுக்கினாள். கௌசல்யா புன்னகை செய்தாள்.

"கொஞ்சம் நம்ம ஃபிரெண்ட்ஸ் எல்லாம் பாத்துக்கடா. ராஜியும், சாரதியுமாவே திண்டாடறாங்க."

கௌசல்யா கோபியோடு பின்னால் ஒரு சீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"நீ சாரதிய மீட் பண்ணதில்ல இல்லை?"

இல்லையென்பது போல் தலையாட்ட, சாரதியை அழைத்து அறிமுகப்படுத்தினான். சட்டெனக் கலந்து கொண்டான். தெளிவான முகம். சிரிப்பு.

"நீங்க எங்க இருக்கீங்க?"

"கல்கத்தாவில். சுந்தரம் கல்யாணத்துக்காகவே மெட்ராஸ் வந்தோம்."

"அப்படியா?"

"ம். கல்யாணத்த எடுத்துச் செய்யறதுக்கு வேற யார் இருக்காங்க. வீட்டோட, தலைவருக்குத் தகராறு. அதனால, நாங்க ரெண்டு வாரம் லீவு போட்டுட்டு வந்துட்டோம்."

இது தாமோதரனுக்குப் புதுச் செய்தி. சுந்தரம் தனியாக இருக்கிறான் என்பது தெரியும். ஆனால் பெற்றோரோடு தகராறா? சாரதி, ராஜியை அறிமுகப்படுத்தினான். இருவரும் பம்பரம். பெண் வீட்டிலிருந்து, அவளுடைய தங்கை எல்லோரையும் கவனிக்க, இங்கே ராஜி.

தாமோதரன் சாரதியோடு வேலை செய்யத் துவங்கினான். நண்பர்களுக்கெல்லாம் ரஸ்னா வழங்க, நின்று பேச என்று நேரம் பறந்தது.

"சாப்டாச்சின்னா கௌம்பலாமா?"

தாமோதரனைப் பார்த்துக் கேட்டாள் கௌசல்யா. நிலைமை புரியவே புரியாதா?

"டைமிருக்கே, மெதுவா கௌம்பலாம்."

"அப்புறம் பஸ் இருக்காது."

"இப்படி நடுவுல வுட்டுட்டுப் போனா நல்லாயிருக்குமா. யாரோ கல்கத்தாலேர்ந்து, இங்கே வந்து கல்யாணத்துக்கு ஹெல்ப் பண்றாங்க. இங்க தண்டையார்பேட்டையில இருந்துக்கிட்டு அவசரப்பட்டா, நல்லாவா இருக்கும்?"

"நீங்க வேணா, இருந்து முடிச்சுக் கொடுத்துட்டு, வாங்க, நாங்க கௌம்பறோம்."

யதார்த்தமாய்ப் பேசுவது போல் சொன்னாள். தாமோதரனுக்கு ஆத்திரம் கனன்றது. என்ன நெஞ்சழுத்தம்? பிடிக்கவில்லையென்றால், கத்தியால் வெட்டிப் போடக் கூடத் தயங்க மாட்டாள்.

"வந்தது வந்துட்டோம். கொஞ்சம் பொறுமையா இரு. கௌம்பிடலாம்."

கோபமும் இயலாமையும் வெளிப்பட்டது. வெறுப்பு மட்டுமே கூடியது. சிந்தனையை மாற்றிக் கொள்ள, மற்றவர்களோடு போய்ப் பேசத் துவங்கினான். டைனிங் ஹாலில் போய் விசாரிக்கத் துவங்கினான்.

"நைட் இருப்பீங்க இல்ல?" - சாரதி கேட்டான்.

"வீட்டுக்குப் போகணும்."

"வீட்டுக்குப் போறீங்களா? நீங்க கல்யாணம் முழுசும் இருப்பீங்கன்னாரு சுந்தரம்?"

சுந்தரத்தின் எதிர்பார்ப்பு நியாயமாகப்பட்டது. என்ன சொல்வது? அதுவும் கௌசல்யாவை வைத்துக் கொண்டு!

"நாளைக்குக் காலைல வந்துடறேன். நைட் பையன் தூங்க மாட்டான். புது எடம்னா தூக்கம் வராது. போயிட்டு காலையில வந்துடுவேன்."

நான்காவது பாட்சில் கௌசல்யா

---

***மத்தியப் பிரதேசத்தில்தான் இந்தியாவிலேயே மிக அதிக அளவு வாரப் பத்திரிகைகள் வெளியாகின்றன. சுமார் 800 க்கும் மேல். 'ஹிப்ஹிப் ஹுர்ரே', 'நேஷனல் லேடி', 'ஹே, பக்வான்' என்றெல்லாம் விசித்திரப் பெயர்கள். இத்தனை பத்திரிகைகள் வர முக்கிய காரணம் மத்தியப் பிரதேச அரசுதான்! ஒரு வாரப் பத்திரிகை, ஒவ்வொரு வாரமும் பெறும் அரசு விளம்பர மதிப்பு ரூ. 2000/-. பல பத்திரிகைகள் ஐம்பது பிரதிகளுக்கு மேல் அச்சிடுவதில்லை. அதிகபட்சம் ரூ. 500/ செலவு போக லாபம் ரூ. 1500!***

ஆதாரம் : வீக்; தகவல் : எஸ். ஆலன்




**ESTD 1955** **ஸ்ரீ** **PHONE: 24823**

22-நாட்கள் கொண்ட பத்ரிநாத், கேதார்நாத், காசி-கயா, கல்கத்தா, டில்லி, அரித்வார், ரிஷிகேஷ், அலகாபாத், அயோத்யா, ஆக்ரா மற்றும் நிறைந்த நாட்களில் முக்கிய க்ஷேத்ரங்களுடன் கூடிய ஸ்பெஷல்.

22.9.94ம் தேதி சென்னையிலிருந்து ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் ஒரு 3 டயர் ஸ்லீப்பர் கேரேஜ் புறப்படுகிறது. நபருக்கு ரயில் கட்டணம் காலை காபி – டிபன், 2 வேளை போஜனம், மாலை காபி, நகர் சுற்றிப் பார்க்கும் பஸ் கட்டணம் உள்பட ரூ.4975/ ரூ.1500 வீதம் அட்வான்ஸ் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும். பத்ரி-கேதார் யாத்திரைக்கு பஸ் கட்டணம் ரூ.825/தனி.

19- நாட்கள் கொண்ட தீபாவளி கங்காஸ்நானமும், விஸ்வேஸ்வரர் விசாலாட்சி தங்க அன்னபூர்ணாதேவி தரிசனமும் மிட்டாய் திருவிழாவினையும் தரிசிக்கும் ஓர் வாய்ப்பு.

27.10.94ம்தேதி இரவு 10.30 மணிக்கு சென்னையிலிருந்து அவுரா மெயில் மூலம் புறப்படுகிறது. சென்னை, கல்கத்தா, கயா, புத்தகயா, காசி, அயோத்யா, அலகாபாத், அரித்வார், ரிஷிகேஷ், டில்லி, மதுரா, ஆக்ரா, சென்னை. நபருக்கு கட்டணம் ரூ.4575/ அட்வான்ஸ் ரூ.1500 வீதம் செலுத்தி உங்கள் பர்த்துகளை பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வருடம் எமது யாத்திரையில் பதிவு செய்துள்ள அனைவருக்கும் நாமகிரி சார்பாக ஓர் அன்பளிப்பு உண்டு. அது என்ன என்பது டிபன் சாப்பிடும் முன்பு தெரியும். இது மட்டுமா.. நம் யாத்திரை வாசிகளில் தேர்ந்தெடுக்கும் ஒருவருக்கு அவர்கள் செலுத்திய முழுத்தொகையையும் அன்பளிப்பாக பணிவுடன் சமர்ப்பிக்கப்படும். முழுமையான விபரங்கள் வேண்டின் தொலைபேசி எண்ணுடன் (போன் இருந்தால்) 2ரூபாய் தபால் ஸ்டாம்புடன் எழுதினால் கூரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**ஸ்ரீ நாமகிரி டிராவெல் சர்வீஸ்**
**34 A/2 அக்ரஹாரம்–மேலசிந்தாமணி,**
**திருச்சி, 620 002.**
K.E.நம்பிள்ளை, N.ஸ்ரீதர், N.குலசேகர்.





# நாப்கினில் DOUBLE PAD SYSTEM

பிரபலமான நாப்கின் உங்களுக்கு நிச்சயமாக பாதுகாப்பா???



கவர் கிழிந்து நாப்கின் விழுந்து விடுமோ என்று நீங்கள் பயந்ததை மறக்க முடியுமா? கனம் குறைந்த நாப்கின் நாள் முழுவதும் போதவில்லையே! . . . ஆனால், **Double Pad** - சிஸ்டத்தில் உருவான Total Care முற்றிலும் மாறுபட்டது. Total Care -ன் நடுபகுதியில் இரண்டு பேடுகள் சேர்ந்து இருப்பதால் நாள் முழுவதும் போதும். Office / School நேரத்தில் மாற்றும் தொல்லை இல்லை. முனைகளில் ஒற்றை பேடு இருப்பதால் வேலைகளுக்கு தடங்கல் இல்லை. செல்லுலோஸ் பவுடர் இருப்பதால் பிளஷில் போடலாம். Blue Shield - ம் இருக்கிறது. மிருதுவான Total Care - ல் வலிமைமிக்க வலை இருப்பதால் கிழியாது. விலையோ மிகக் குறைவு. இனி மேல் புறப்படுங்கள் **TOTAL CARE** - ன் உறுதுணையுடன்.





**VISHAL HEALTH CARE PRODUCTS**

25, MUDALIYAR SOUTH ST., KOTTAR, NAGERCOIL - 629 002.
Phone : 26861 H.O. D/76/3, T.T.C. NEW BOMBAY - 400 705

also . . . **Total Free Beltless. WANTED DISTRIBUTORS**

# அஷ்டமி, நவமி
# எந்த
# மதத்திற்கும்
# சொந்தமில்லை



அஷ்டமி என்பது பிரதமி திதியிலிருந்து எட்டாம் நாள். நவமி என்பது பிரதமியிலிருந்து ஒன்பதாம் நாள். இந்த நாட்களில் கடவுளை எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வழிபட்டால் அதிக பலன் கிடைக்கும்.

இந்த வழிபாடு முடிந்தவுடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்

திருமண வைபவங்களுக்கு:- சீர் முறுக்கு, சீர் அதிரசம், சீர் முள்ளுத் தேன்குழல், சீர் அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் செய்துத் தரப்படும்.

## தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020
போன்: 412557

வோடு, தாமோதரன் சாப்பிட உட்கார்ந்தான். அவன் வேண்டா வெறுப்பாய்ச் சாப்பிடுவது போல் தோன்றியது. என்ன ஒரு மனுஷி?

கை கழுவிக் கொண்டு, பீடா போட்டுக் கொண்டான்.

சுந்தரம் இருக்கையில் அமர்ந்திருந்தான். யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"என்னடா, கௌம்புரியா?"

"இல்ல, பையனுக்கு ஒடம்பு சரியில்லை. சாயங்காலம் கௌம்பும்போதே, லேசா சுட்டுது. அதான். நேரா டாக்டர்கிட்ட போகணும். நாளைக்குக் காலையில வந்துடறேன்."

"என்ன சார், நீங்களெல்லாமே போயிட்டீங்கன்னா, என்ன சார் அர்த்தம்? இருங்க சார்."

பிரசென்டேஷன்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த ராஜி.

"இல்லை மேடம். பையனுக்குத்தான் பிராப்ளம். நான் வந்துடறேன்."

"டேய், இவளைத் தெரியுமா உனக்கு?" ஆச்சரியமாய் சுந்தரம் கேட்டான்.

"தெரியுமே. சாரதி ஒய்ப்தானே?"

"ஆமா. அது இப்போ. இவளதான் நான் மொதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அது தெரியுமா?"

"ஓடிப் போயிட்டான்னு..."

"ஓடியெல்லாம் போகலை. நான்தான் அனுப்பிச்சேன். சாரதி அப்போ துபாய் போயிருந்தார். இவ அப்பா என் தலையில இவளைக் கட்டிட்டாரு. இவ விஷயத்தச் சொன்னா. ஒருத்தரை விரும்பி, வேற ஒருத்தனைக் கல்யாணம் செஞ்சிக்கறது மகா கொடுமை. விஷயம் தெரிஞ்சி, நான் அவங்க வீட்டுல பேசி, சண்டை போட்டு, வாலண்டியரா டைவர்ஸ் கொடுத்து சாரதிக்கே இவளைப் பண்ணி வெச்சுட்டேன்!"

ஆச்சரியமாய் இருந்தது. கௌசல்யாவும் சுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லாம் புதுச் செய்தி.

"இதெல்லாம் எனக்கு நீ சொல்லவே இல்லை?"

"எல்லாருக்கும் தெரியுமே. அதனாலதான் என் பேரண்ட்ஸோட தகராறெல்லாம் ஆச்சி. இப்ப இவங்களே, பாமாவைப் பார்த்து எனக்குக் கல்யாணம் பண்ணி வெக்கறாங்க!"

என்ன சொல்வது என்று தெரியாமல் நான் நின்றேன். ஆச்சரியம் மட்டுமே விரிந்திருந்தது. சந்தோஷத்தைச் சொல்ல முடியாமல் இறுக்கிக் கைகுலுக்கினேன். கௌசல்யா சிரித்தாள், சுந்தரத்தைப் பார்த்து. என்ன ஒரு உயர்ந்த மனுஷன்!

"நாளைக்குக் கண்டிப்பா வந்துடுங்க. முதல்ல பையனுக்கு என்னன்னு போய்ப் பாருங்க."

நான் வெளியே நடக்கத் துவங்கினேன். காம்பவுண்ட் முனையில் திரும்பிப் பார்க்க, சுந்தரம் கையசைத்து டாட்டா காட்டினான். நான் கையசைத்தேன். கௌசல்யாவும் கையசைப்பதை அப்போதுதான் பார்த்தேன்.


## கணையாழி

**ஆகஸ்டு '94**

- தென் சென்னையில் ஒரு தங்கச் சந்தை
- அறிவியலும் ஆன்மீகமும் : அறிவியல் நோக்கில் ரிக் வேதம் வேதங்கள் தோன்றியது எப்படி?

**மற்றும்**

- தி. ஜ. குறுநாவல் திட்டத்தில் தேர்வு பெற்றவை பட்டியல் : முதல் குறுநாவல்
- எஸ். பொ. - *உரத்த சிந்தனை*

## பொன்மலர்

**ஆகஸ்டு '94**

- பரமாச்சாரியார் சொன்ன கதை
- மனதை அடக்குவோம் - மாதாவை வணங்குவோம் - *ஸ்ரீ ஜெயேந்திரர்*
- 'குருவாயூர்' என்று சொல்வது ஏன்?
- உபநயனம் மட்டும் போதுமா?
- காஞ்சியில் கோலாகலம் - *ஸ்ரீ ஜெயேந்திரர் மணிவிழா*

**மற்றும்**

ஸ்ரீ ஜெயேந்திரர் கேள்வி - பதில்கள்.

# மணிக்கொடி

## ஜோதிர்லதாகிரிஜா

## 8

அஞ்சனாதேவி சரிக்குச் சரியாய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, ராமசாமியுடன் தயக்கமோ கூச்சமோ இன்றிப் பேசியதும், வாய் விட்டுச் சிரித்ததும் விசாலத்துக்குப் பிடிக்கவில்லையெனினும், 'இது மாதிரிப் பொண்களை நம்பவே கூடாது. அமைதியாப் போயிண்டிருக்கிற குடும்பங்களைக் கலைச்சுடுவா' என்று குஞ்சம்மா சொன்னது அவளுக்கு ரசிக்கவில்லை. தன் உயிருக்குயிரான தம்பியைப் பற்றியும் அவள் தரக்குறைவான கருத்தை வெளியிட்டு விட்டதாக எண்ணி, அவள் கசந்து போனாள். அதனால்தான், 'ராமசாமி அப்படிப்பட்டவன் இல்லே' என்னும் வெடுக்கான பதில் அவளிடமிருந்து சீறிப் பாய்ந்தது.

''எப்படிப்பட்ட புருஷாளும் இது மாதிரிப் பொண்கள் மேல வந்து விழுந்தா மயங்கித்தான் போயிடுவா. ஆனானப்பட்ட விஸ்வாமித்திரரே மேனகைக்கு முன்னால திருணமாத்திரம்னா, உங்க தம்பி எம்மாத்திரம்?''

"என்ன பேசறே நீ குஞ்சம்மா? மேல வந்து விழறது அது இதுன்னு வாய்க்கு வந்ததைப் பேசாதே. நீ அவனைப் பத்தி இப்படியெல்லாம் நினைக்கிறேங்கிறது தெரிஞ்சா அவன் அப்படியே ஒடிஞ்சு போயிடுவான். அந்தப் பொண்ணும் அப்படி ஒண்ணும் மேல வந்து விழற பொண்ணாத் தெரியல்லே. நன்னா இழுத்துப் போத்திண்டு அடக்கமான பொண்ணாத்தான் இருக்கா."

"நீங்களுந்தான் சொன்னேள் சித்த முந்தி - எதுக்கும் துணிஞ்ச கட்டைன்னு" என்றாள் குஞ்சம்மா விடாப்பிடியாக.

"நீ சொல்ற அர்த்தத்துல நான் சொல்லல்லே. தைரியமான பொண்ணுங்கிற அர்த்தத்துலதான் சொன்னேன். 'எதுக்கும் துணியறது'ன்னா புருஷாளை மயக்கறதுன்னு அர்த்தமில்லே. மத்தப் பொண்ணுகள் செய்ய பயப்படற காரியங்களை இந்தப் பொண்ணு தைரியமாச் செய்யும்னு எனக்குத் தோணினதை நான் சொன்னேனே ஒழிய, நீ நினைக்கிற மாதிரியான அர்த்தத்துல இல்லே. ரெண்டாவது, ராமசாமியும் அப்படிப்பட்ட ஆளில்லே."

அதன் பிறகு இருவரும் அஞ்சனாதேவியைப் பற்றி எதுவும் பேசாது தேவையானதற்கு மட்டும் பேசியவாறு சாப்பிட்டு முடித்தார்கள்.

"நீங்க போய்ப் படுத்துக்குங்கோங்கா. நான் அடைக்கு அரைச்சு வச்சுட்டு வந்து கொஞ்சம் படுத்துக்கறேன்."

"சோறு தின்னதும் திங்காததுமாக் கல்லுரலைக் கட்டி இழுக்க வேண்டாம். பேசாம வந்து படு நீயும். ஒரு அரை மணி கழிச்சு அரைச்சுண்டாப் போறது."

அதற்குப் பிறகு நாத்தனாருடன் வாக்குவாதம் செய்யாமல் குஞ்சம்மா அவளுக்கு அருகே தானும் ஒரு புடைவைக் கிழிசலை விரித்துக் கொண்டு படுத்தாள். சற்று நேரத்தில் விசாலத்தின் சன்னமான குறட்டையும் ராமசாமியின் குறட்டையும் மாற்றி மாற்றிக் கேட்கலாயின. ஆனால் குஞ்சம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. அஞ்சனாதேவியின் அழகிய முகமும், கவர்ச்சியான புன்னகையும், தயக்கமின்றி ஆண்களுடன் உரையாடும் சகஜமும் அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

கொஞ்ச நேரத்தில் எழுந்து ஓசைப் படாமல் கூடத்துக் கண்ணாடி அலமாரியின் எதிரே போய் நின்று உடம்பை இப்படியும் அப்படியும் திருகி, முறுக்கித் தன் உடற்கட்டை ஒரு நோட்டம் விட்டாள். அத்தனை பிள்ளைகளைப் பெற்ற பின்னும் தன் உடம்பு கட்டு விடாமல் இளமையுடனேயே இருப்பதைக் கண்டு பூரித்தாள்.

ஊஞ்சல் கிறீச்சிட்ட ஓசையால் எண்ணங்கள் கலைந்து, குஞ்சம்மா திரும்பிப் பார்த்தாள். ராமசாமி - படுத்திருந்தவர் - எழுந்து உட்கார்ந்திருந்தார். முகத்தில் விஷமச் சிரிப்புத் தெரிந்தது.

"என்ன, உன்னோட அழகை நீயே ரசிக்கிறயாக்கும்?'' என்றார் மெதுவான குரலில். விசாலத்தின் சன்னக்குறட்டை




இன்னமும் கேட்டுக் கொண்டிருந்த துணிச்சலில்.

"கட்டின புருஷன் ரசிக்கலைன்னா நானே ரசிச்சுக்க வேண்டியதுதானே?" என்று குஞ்சம்மா சிரித்தாள்.

விசாலம் புரண்டு படுக்க, குஞ்சம்மா உதட்டில் விரல் வைத்து எச்சரித்தாள். ராமசாமி சிரிப்புடன் ஊஞ்சலிலிருந்து இறங்கினார். கூடத்தின் ஓர் ஓரத்தில் கண்ணயர்ந்திருந்த கங்காதரனைப் பார்த்ததும், "குஞ்சம்மா, இவனை இனிமே மத்தியானத்துல தூங்க விடக்கூடாது. கெட்ட பழக்கம். உடம்புக்கு ஆகாது." என்றார்.

"பெரியவாகிட்ட இருக்கிற வழக்கந்தானே சின்னவாளுக்கும் வரும்?"

"அது சரி..."

"ஏன்னா, அந்தப் பொண்ணு அஞ்சனா ரொம்பப் பணக்காரக் குடும்பமோ?" குஞ்சம்மாவால் அஞ்சனாவின் நினைவை - அந்த நினைவு அளித்த பயத்தை - இதயத்திலிருந்து ஒதுக்க முடியவில்லை.

"அதான் அப்பவே சொன்னேனே, அவ அப்பா பிரபல வக்கீல்னு? சொந்தமா கார் வெச்சிண்டிருக்காளே, அதுலேருந்தே தெரியல்லே?"

"எங்க அப்பா, அம்மா என்னைக்

**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு (1994) வந்த கதைகளில் பரிசுக்குரியன தவிர, கீழ்க்கண்ட கதைகள் பிரசுரத்துக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.**

1. வேலி - அனுஷா
2. அவன், அவர், ஐந்தேகால் ரூபாய் - எஸ். சுகன்யா
3. பதனீர்பட்டி - ஈரோடு என். சாரதாப்பிரியன்
4. வேர்களைத் தேடி - ப்ருதிவிராஜ்
5. காந்தீயம் தோற்பதில்லை - தஞ்சை மகேஷ் ப்ரியன் (மகேஷ்வரன்)
6. வேண்டாம் அந்த ஏணிப்படி - 'சுபமுகா' (கே. கணேசமூர்த்தி)
7. அடைகாக்கும் கோழிகள் - அனந்தலஷ்மி
8. அழுக்கு - கமலா கந்தசாமி
9. எப்போதோ விழுந்த விதை - என். சிவானந்தம் - அறிமுக எழுத்தாளர்
10. பார்வை - சோம. வள்ளியப்பன்
11. கனவுகள் தள்ளுபடி - வே. எழிலரசு
12. முரண்பாடுகள் - பூ. பெருமாள்சாமி
13. சிகரெட் துண்டு - உத்தமசோழன்
14. ஒரு இந்தியக் கனவு - நாகூர் அன்வர்
15. முள் - ஜி. நாராயணன்
16. நிவாரணம் - ராஜ குரு
17. தெளிவு - வாசன்
18. மரம் வைத்தவர்கள் - சோமசேகர பாகிமான்

கடைத் தெருவுக்குக் கூட அனுப்பினது கிடையாது. படியைத் தாண்டித் தெருவுக்கு வர அனுமதிச்சது பத்து வயசு வரைக்குந் தான். காலம் மாறிண்டிருக்கு."

"நல்லதுதானே? பெண்கள்னா அடுப்படி யையே கட்டிண்டு அழணும்னு இல்லேடி, குஞ்சம்மா. நான் கூட உனக்கு இங்கிலீஷ் சொல்லித் தரலாமான்னு பார்க்கறேன்."

"போறுமே."

"என்னது போறுமே? நிஜமாத்தாண்டி சொல்றேன். இன்னும் ரெண்டே வருஷத்துல உன்னை இங்கிலீஷ்ல கொப்புளிக்க வைக்கி றேனா இல்லியான்னு பாரு. ஆனா நீ மனசு வெச்சு முனைப்பாக் கத்துக்கணும்."

குஞ்சம்மா கண்ணாடி அலமாரியை விட்டகன்று சமையற்கட்டை நோக்கி நடந்து கொண்டே, "ஆ...மா. இப்ப நான் இங்கிலீஷ் கத்துண்டு என்ன சாதிக்கப் போறேன்? வெள்ளைக்காரனைப் பார்த்து, 'கெட் அவுட்'னா சொல்லப் போறேன்? அதுக்கெல் லாந்தான் அஞ்சனாதேவி மாதிரிப் பொண் கள் இருக்காளே?" என்றாள்.

அவளுக்குப் பின்னாலேயே நடந்து, தாமும் சமையலறையை அடைந்த ராமசாமி, குடத்திலிருந்து குடிநீர் சரித்து எடுத்தபடி, "இன்னும் எத்தனையோ அஞ்சனாக்கள் வேணும்டி, குஞ்சம்மா. கங்காதரன் மட்டும் இல்லைன்னா நான் இன்னும் அதிகத் தீவிரத்தோட இந்த இயக்கத்துல ஈடுபட்டு இத்தனை நாள் ஜெயில் கியில்னு போயிருப் பேன். நீயும் அவனுமாச் சேந்துண்டுதான் என்னைக் கட்டிப் போட்டு வெச்சிருக்கேள்" என்றார்!

"கட்டிப் போட்டிருக்குற லட்சணமா இது? அழகுதான். இதுக்கே ஆத்துக்குள்ள போலீஸ்காரன் நொழைஞ்சு ரகசியக் காகிதம் இருக்கான்னு பார்க்கிறதுக்காக வந்து எல்லா இடங்களையும் குடையறான். இன்னும் அவிழ்த்து விட்டிருந்தா எப்படியோ?"

"அந்தப் பொண்ணுக்கு நல்ல ப்ரெசன்ஸ் அஃப் மைண்ட்... டக்குனு அடுக்குள்ள வந்து அந்தக் காகிதங்களை அடுப்புக்குள்ள சொருகி எரிச்சுட்டா. இல்லேன்னா இன் னிக்கு நான் நன்னா மாட்டிண்டிருந்திருப் பேன். எத்தனை வருஷம் திட்டி இருப் பானோ..."

"அந்தப் பொண்ணுக்கு என்னன்னு சொன்னேள்? ப்ரெச... என்ன அது?"

"ப்ரெசன்ஸ் அஃப் மைண்ட்னு சொன் னேன். அதாவது ஒரு நெருக்கடியான நேரத் துல திகைச்சுப் போய் நிக்காம, டக்குனு சமயோசிதமா நடந்துக்குற கெட்டிக்காரத் தனம்."

## அருள்வாக்கு



எல்லா பரோபகாரங்களையும் விட உத்தமமானது ஒரு ஜீவனைப் பரமாத்மாவிடம் சேர்க்கிறதுதான். ஆகையால் நாம் செய்கிற நாம உச்சாரணத்தால் அந்திமத்தில் ஒரு ஜீவன் பகவானை நினைக்கும்படியாகப் பண்ணி, அதனால் பகவான் அந்த ஜீவனை எடுத்துக் கொள்ளச் செய்து விட்டால் அதைப் போன்ற உபகாரம் வேறே எதுவும் இல்லை.

கடைசிகால ஈச்வர ஸ்மரணை ஜன்மாவை அப்படியே அழித்து விட்டால் கூடப் பரவாயில்லை. நிச்சயம் அது பாபத்தைப் பெரிய அளவுக்கு அலம்பி விட்டு விடும். இதைப் பற்றி ஸந்தேஹமில்லை. பகவந்நாமா மனஸ¬க்கு உள்ளே ஊறி விடுகிறபோது பாபத்தை நிச்சயம் கழுவிவிடும். ஆனதால், பகவந்நாமாவோடு கண்ணை மூடுகிறவன் ஜன்மாவே இல்லாமல் விடுபட்டு விடுகிறான் என்று வைத்துக் கொள்ளாவிட்டாலும், மறுபடியும் பாபஜன்மா எடுக்கவே மாட்டான்; நல்ல புண்ய ஜன்மாவாக எடுப்பான் என்பது நிச்சயம்.

புண்ய ஜன்மா என்றால், பணம், காசு, அழகு, உசந்த ஜாதி, இது களா? இல்லை. இந்த ஜன்மா முடிவிலே வந்த பகவத் ஸ்மரணை, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து அடுத்த ஜன்மாவிலும் எப்போது பார்த்தாலும் இருக்கும்படியான சூழ்நிலையும் மனநிலையும் கொண்டதுதான் புண்யஜன்மா. அப்படி எடுத்து அடுத்த ஜன்மத்தோடாவது சொந்த முயற்சியினாலேயே ஸம்ஸார நிவர்த்தியை ஸம்பாதித்துக் கொள்ள ஒரு ஜீவனுக்கு இந்த ஜன்மத்திலேயே அந்திம நேரத்தில் நாம் நம்மாலான ஸஹாயத்தைப் பண்ண வேண்டும்.

இந்த மஹா பெரிய தர்மத்தைத் தவறாமல் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

"அவ கெட்டிக்காரின்றேள்."

"நிச்சயமா. இல்லேன்னா நான் மாட்டிண்டிருந்திருப்பேன்."

"அப்படின்னா நான் அசடா?"

"இதேதுடா வம்பா இருக்கு? அவ கெட்டிக்காரின்னா நீ அசடுன்னு அர்த்தமா? நீ எப்படின்னு நான் சொல்லல்லையே?"

"இப்ப சொல்லுங்களேன்."

"அவளை விட நீ அதிக கெட்டிக்காரின்னு அர்த்தம்" என்று சிரித்த ராமசாமி, குஞ்சம்மாவின் விந்தையான மனப்போக்கை எண்ணித் திகைத்தவாறு தண்ணீரை மடக் மடக்கென்று குடித்து விட்டுத் தம்ளரைக் கவிழ்த்து வைத்தார்.

"கேலி கிடக்கட்டும். அதென்ன பேரு அஞ்சனாதேவின்னுட்டு? ரொம்ப ஃபாஷனாப் பேர் வெச்சிண்டிருக்காளே?"

"அவளா வெச்சிண்டா? அவ அப்பா, அம்மா வெச்சிருக்கா. உங்கப்பா ஒரு கர்நாடகம். குஞ்சம்மான்னே பேரு வெச்சுட்டார். இப்பக் கூட ஒண்ணும் குடிமுழுகிடல்லே. நீ வேணா ஒண்ணு பண்ணேன். குஞ்சம்மாங்கிற பேரை குஞ்சனா தேவின்னு மாத்திண்டுடேன். கெஜட்டுல போட்டுடலாம்...."

"கெஜட்டுன்னா...?"

"பாத்தியா, இதுக்குத்தான் இங்கிலீஷ் கத்துக்கணும்கிறது. ப்ரெசன்ஸ் அஃப் மைண்ட், கெஜட் இதுக்கெல்லாம் அர்த்தம் கேட்டுண்டிருக்க வேண்டாம் பாரு! வர்ற புதன் கிழமையிலேருந்து உனக்கு நான் இங்கிலீஷ் கத்துக் கொடுக்கப் போறேன். உன்னையும் நான் கொஞ்சங் கொஞ்சமா மாத்தப் போறேன்."

இங்கிலீஷ் கற்றுக் கொள்ளுவது என்ற யோசனை குஞ்சம்மாவுக்கு மிகவும் பிடித்திருக்க, அவள் முகத்தில் சிரிப்புத் தோன்றியது.

"நெஜமாவேதான் சொல்றேளா?"


"பின்ன பொய்யா சொல்றேன்? குஞ்சம்மா அப்பத்தானே குஞ்சனாதேவியாக முடியும்? நாளைக்கு நீயும் அஞ்சனாதேவி வீட்டுக்குப் போய் அவ அப்பா எதிர்ல நாற்காலியில உக்காந்துண்டு சரிசமானமா இங்கிலீஷ்ல பேசலாமோல்லியோ?" என்றார் ராமசாமி.

(தொடரும்)


# விழிப்புணர்வு Vs சிரிப்புணர்வு!

ஆகஸ்ட் 15 முதல் வாக்காளர்
விழிப்புணர்வு பிரசார இயக்கம்
துவக்குகிறார் சேஷன்.




செஷனுடைய கெடுபிடிக்கு ஒரு எல்லையே இல்லாம போச்சு...!
கள்ள ஓட்டு கூடாதாம்!
பூத் கேப்ச்சரிங் கூடாதாம்!
கட் அவுட்டுக்கு கூட தடையாம்!
நோட்டு கொடுக்கலாம்னா குறுக்க நிக்கறாரு!
நாம எல்லாரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய காலம் வந்துடுச்சு!
என்ன நாயகரே, தேர்தலுக்கு முன்னாடி டோக்கன் குடுத்துட்டு ஓட்டு போட்டதுக்கு பிறகுதானே குடம் கொடுக்கறோம். நமக்கில்லாத விழிப்புணர்ச்சியா? ... வேற....!
விழிப்புணர்வு கூட்டம் எல்லாம் வேண்டாம்னு, எவ்வளவு தைரியம் இருந்தா எனக்கே லட்டுக்குள்ள மூக்குத்தி வச்சுக் கொடுப்பே...!




# பூமியின் வேகமும் 'புருடா' அரசியலும்!



பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது - செய்தி.

எந்த நிகழ்வையும் தங்களுக்குச் சாதகமாக்கத் தெரிந்த நமது அரசியல் தலைவர்கள் நினைத்தால் இந்தச் செய்தியை எப்படி தங்கள் பேச்சு சுதந்திரத்தில் பயன்படுத்தலாம்?

**வாழப்பாடியார்** : பூமியின் வேகமே குறையும் போது, அந்த பூமிக்குள் இருக்கும், ஆசியா கண்டத்தில் இருக்கும், இந்தியாவில் இருக்கும் தமிழ்நாட்டில் இருக்கும் காங்கிரஸ் கட்சி மட்டும் என்ன விதிவிலக்கா?

**கருணாநிதி** : பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது. ஆகவே இந்த சாமான்யன் கருணாநிதியின் சாமர்த்திய வேகமும் குறைந்து விடும் என்று தப்புக் கணக்குப் போட்டு, தடம் புரண்டு போய் தத்தளித்துக் கொண்டிருக்கும் பழைய நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம்...


**வை. கோபால்சாமி** : தனக்கும் வயதாகிறது தள்ளாடுகிறோம் என்ற யதார்த்த உண்மையை இந்த பூமியே புரிந்து கொண்டு, தன் வேகத்தைக் குறைத்துக் கொள்ள முன்வரும் போது, அந்தப் பெரிய மனிதர் மட்டும் இன்னும் தன் முதுமையை ஒப்புக் கொள்ளாமல், தலைமைப் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதை இந்த தமிழ்ச் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது.

**நரசிம்மராவ்** : பூமியின் சுழற்சி வேகம் குறைவதால் நாம் நேரத்தை மாற்றி அமைப்பது விஞ்ஞானக் கட்டாயம். அதே போல் பாராளுமன்ற கூட்டுக் குழு அறிக்கை மீதான நடவடிக்கை அறிக்கையை ஏற்பதும் எதிர்க் கட்சிகளுக்குக் காலத்தின் கட்டாயம்.

**தென்னவன் (தமிழக அமைச்சர்)** : பூமாதேவியாம் - புரட்சித் தலைவியாம் நம் முதல்வரை கோடிக்கணக்கான தொண்டர்கள் சுற்றிச் சுற்றி சுழன்று கொண்டிருப்பதால் தான் இன்று பூமியின் சுழற்சி வேகமே குறைந்திருக்கிறது. மகத்தான இந்தப் பேருண்மையை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். எமது அடுத்தக் கட்டப் போராட்டமான 99 சதவீத ஒதுக்கீட்டுக்குச் சட்ட வடிவம் தர வேண்டும் என்று எச்சரிக்கிறேன்.

தலைவர்களுக்கு யோசனை

வழங்கியவர் : **பி.ஜி.பி. இசக்கி**



# கொடி மரத்தில் ஆகஸ்ட் 15

ஜெ.வுக்கு மிகவும் வேண்டப்பட்ட லார்சன் அண்டு டுப்ரோவின் ராட்சஸ கிரேன் கோட்டை வளாகத்தில் இருந்த கொடி மரத்தின் அடிப் பகுதியை, அலாக்காக மேலே தூக்கிக் கொண்டிருந்தது. 307 வருட கொடி மரத்தின் சரித்திரத்தின் கடைசி அத்தியாயம். முதலமைச்சரின் உத்தரவின் பேரில், பழைய கொடி மரத்துக்குப் பதிலாகப் புதுக் கொடி மரம் நிறுவப்படுகிறது.

தேக்கு மரத்தால் ஆன, வெள்ளை பெயின்ட் அடிக்கப்பட்ட பழைய கொடி மரத்தைப் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தின் வடபகுதியில் தான் கவர்னர் ஏல் முதலில் நிறுவினார். அது 1770 இல் இப்போதுள்ள இடத்துக்கு மாறியது. கடைசியாய் அதில் கொடியேற்றியவர் பிரிட்டிஷ் கவர்னர் ஆர்ச் பால்ட்டை.

1947 ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி, பிரிட்டிஷ் கொடி இறங்க, அதில் மூவண்ணக் கொடியை ஏற்றியவர் சென்னை ராஜதானியின் முதல் இந்திய கவர்னரான பவநகர் மகாராஜா. அது முதல் சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் கோட்டையில் கவர்னர் தேசியக் கொடி ஏற்றுவது மரபு.

கலைஞர் முதலமைச்சரானவுடன் பாரதப் பிரதமர், இந்திய தேசிய ஒருமைப்பாட்டு அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலத் தலைநகரில் தேசியக் கொடி ஏற்றலாம் என்ற ஆலோசனை கூறினார். மேலும், மத்திய அரசுடன் பேசி, இரு தேசிய தினங்களின் போதும் கவர்னர் கொடி ஏற்றும் மரபை மாற்றி, சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் கொடி ஏற்றுவது என்ற மரபை இந்தியா முழுவதும் அமுல் நடத்தச் செய்தார். இது நடந்தது 1971 இல்.

முந்நூறு வருட, மரத்தாலான கொடி மரம் விரிசல் கண்டு, உளுத்துப் போகிற நிலையில் இருந்ததால், முதலமைச்சர், அதை எடுத்து விட்டு, உலோகத்தாலான கொடி மரம் நிறுவ உத்தரவிட்டிருக்கிறார். புதிய கொடி மரமும், பழசைப் போலவே 150 அடி உயரமும் மூன்றடுக்கு அமைப்பிலும் இருக்கும். எடை 12 டன்.

கோட்டையில் உள்ள கொடி மரத்தில் தினமும் தேசியக் கொடி காலையில் ஏற்றப்பட்டு, மாலையில் இறக்கப்படும். இப்பணியை, கோட்டை வளாகத்தில் உள்ள ராணுவப் பிரிவு செய்து வருகிறது. பியூகிள் ஒலிக்க, கொடி ஏற்றுவார்கள். மாலை, அதே போல உரிய மரியாதையுடன் கொடி இறக்கப்படும்.

## டெய்ல் பீஸ் :

"புதிய கொடி மரம் நிறுவும் பணி, ஆகஸ்ட் 15 க்குள் முடிவடையாது. எனவே, இந்த சுதந்திர தினத்தன்று முதலமைச்சர் கொடி ஏற்றுதற்காகத் தாற்காலிகமாய் ஒரு கொடி மரம் நிறுவப்படும்" என்று தெரிவித்தார் ஒரு தலைமைச் செயலக அதிகாரி. "பேசாமல் பழைய கொடி மரத்திலேயே இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று கொடியேற்றி விட்டு, அப்புறம் புதிது நிறுவும் பணியைத் துவக்கியிருக்கலாமே! எதற்கு இரண்டும் கெட்டானாக ஒரு தாற்காலிகக் கொடி மரம்?" என்ற அவரது கேள்வியும் நியாயமானதுதானே?

- மௌஷ்மி



• கொடிமரம்

# சக்கரவர்த்தித்

## 89. ''நாராயணன்தானோ?''

அங்கதனுடைய தேற்றுதலினால் வானரர்கள் தைரியம் கொண்டு ஒன்று சேர்ந்து கும்பகர்ணனைத் தாக்கினார்கள். பெரிய மரங்களையும் பாறைகளையும் பறித்தெடுத்து அவன் மேல் வீசி எறிந்தும் அடித்தும் நொறுக்கியும் பார்த்தார்கள். அவனோ இவற்றைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் சிரித்துக் கொண்டே வானரர்களைத் துவம்சம் செய்தான். கும்பகர்ணனுடைய வீராவேசமும் குரூர யுத்தமும் வானரர்களைச் சிதறியடித்தது. கடலிலும் தாங்கள் கட்டின சேதுவிலும் ஆகாயத்திலும் காட்டிலும் ஓடி மறையப் பார்த்தார்கள். மறுபடியும் அங்கதன் வானர வீரர்களுக்கும் வானரப் படைக்கும் தைரியம் சொல்லி, ஒன்று சேர்த்து கும்பகர்ணனைத் தாக்கச் செய்தான். துவிவிதன், ஹனுமான், நீலன், விருஷபன், சரபன் முதலிய வீரர்கள் கும்பகர்ணனைப் பலமாகத் தாக்கினார்கள். அவனோ அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. வானர வீரர்களை ஒருவர் பின் ஒருவராக அடித்து நொறுக்கிக் கீழே தள்ளினான். வானரச் சேனைக்குப் பயங்கர நாசம் விளைவித்தான். அங்கதனே அடிபட்டு நினைவற்றுப் பூமியில் விழுந்தான். சுக்ரீவனும் அடிபட்டு பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தான். நினைவற்றுக் கிடந்த சுக்ரீவனை எடுத்துத் தூக்கிக் கொண்டு கும்பகர்ணன் வெகு மகிழ்ச்சியுடன் லங்கையை நோக்கி ஓடினான். ராக்ஷச சேனை பெரு மகிழ்ச்சியடைந்து ஆரவாரித்தது. அண்ணன் ராவணனிடம் வானர ராஜனைக் கொண்டு போய்த் தான் தந்த பரிசாகக் கொடுக்க கும்பகர்ணன் சென்றான்.

இவ்வண்ணம் பிரக்ஞை இழந்த வானர ராஜனைத் தூக்கிக் கொண்டு லங்கா நகர ராஜ வீதியில் வெற்றிகரமாகச் சென்ற கும்பகர்ணன் மேல், மாட மாளிகையிலிருந்து அரக்கர்களும் அரக்கிகளும் புஷ்பமும் சந்தனக் குழம்பும் ஏராளமாகப் பொழிந்தார்கள். சிறிது நேரம் கழிந்ததும் சுக்ரீவன் நினைவு அடைந்தான். "என்ன ஆச்சு? எங்கே இருக்கிறேன்?" என்று நாற்புறமும் பார்த்து விஷயம் அறிந்து கொண்டான். திடீர் என்று அரக்கனுடைய காதுகளையும் மூக்கையும் பல்லால் கடித்தும் நகங்களால் கிழித்தும் ரணமாக்கித் துன்பப்படுத்தினான். அரக்கன் அந்த வேதனையைப் பொறுக்க மாட்டாமல் சுக்ரீவனைக் கீழே போட்டுக் காலால் துவைக்கப் பார்த்தான். உடனே சுக்ரீவன் குதித்தெழுந்து ஆகாய மார்க்கமாக ராமச்சந்திரனிருந்த இடத்துக்குப் பாய்ந்து போய் விட்டான்.

இப்படி சுக்ரீவன் செய்வான் என்பதை முன்னமேயே ஹனுமான் உணர்ந்து கொண்டு, கலங்கிப் போன வானர சேனையை விழுசுட்டபடுத்தி அமைதியாகவும் தைரியமாகவும் நிற்கச் செய்து, மறுபடி யுத்தத்துக்கு ஆயத்தமாக்கினான். காதுகளும் மூக்கும் அறுபட்டு ரத்த வெள்ளமாக, கும்பகர்ணன் சாயங்கால மேகத்தைப் போல் செக்கச் சிவந்து ஏமாற்றமடைந்த பெருங் கோபத்தோடு காலாந்தகனைப் போல் யுத்தகளத்துக்கு, ஒரு பெரிய இரும்பு உலக்கையைக் கையில் தூக்கிக் கொண்டு மறுபடி திரும்பினான்.

யாராலும் கும்பகர்ணனைத் தடுக்க முடியவில்லை. கொன்றும் தின்றும் வானர சேனையை அழித்துக் கொண்டே வந்தான். அவன் மேல் வானரர்கள் ஏறி, மலை போன்ற அவன் தேகத்தைக் குத்தியும் கிழித்தும் பார்த்தார்கள். அவனோ இதை ஒன்றும் லட்சியம் செய்யவில்லை. ஈயை ஓட்டி உதறுவது போல் உதறித் தள்ளினான். வானரத் தலைவர்கள் யாராலும் அவனை அடக்க முடியவில்லை. லக்ஷ்மணனும் அம்புகள் எய்து எதிர்த்தான். ஆனால் அரக்கன் அவனை விட்டு விட்டுத் தாண்டிச் சென்று ராமனை எதிர்க்க ஓடினான்.

ராமச்சந்திரன் அரக்கனோடு நெடு நேரம் போர் செய்து, அங்கங்களைச் சிதைத்து கடைசியில் அரக்கனுடைய தலையை அறுத்துத் தள்ளினான். அறுக்கப்பட்ட தலை இராமன் செலுத்திய சரத்தின் வேகத்தால் ஆகாயத்தில் கிளம்பி லங்கா நகரத்தில் ஒரு மலை விழுவது போல் ஜ்வாலையுடன் விழுந்தது.

# திருமகன்




"காலாந்தகனைப் போன்ற உமது தம்பி கும்பகர்ணன் உத்தமலோகம் அடைந்து விட்டான். அனேக ஆயிரம் வானரர்களைக் கொன்று தின்று வெகு நேரம் ராம லக்ஷ்மணர்களுடைய வானர சேனையைத் தத்தளிக்கச் செய்தான். பிறகு ராமனுடைய சரத்துக்கு இரையானான். அவனுடைய தேகம், புஜங்களும் கால்களும் அறுபட்டு விகாரமடைந்து, காட்டுத் தீயால் எரிபட்ட ஒரு மகா விருக்ஷத்தைப் போல் கிடக்கிறது. வெட்டுண்ட அவன் தேகத்தின் துண்டுகள் பாதி கடலில் விழுந்தும் பாதி கோட்டை வாசலை ஒரு மலை போல் அடைத்துக் கொண்டுமிருக்கின்றன. தலை அறுபட்டு ஆகாய மார்க்கமாக லங்கையில் விழுந்தது. தங்களுடைய அன்புக்குரிய சகோதரன் வீர சுவர்க்கம் அடைந்து விட்டான்."

இவ்வாறு ராக்ஷசர்கள் ராவணனிடம் தெரிவித்த போது தன் உயிரே போய்விட்டதாக எண்ணினான் ராவணன். சோகத்தால் நினைவு இழந்தான்.

பிறகு பிரக்ஞை வந்த பின் "ஹா வீரனே! எல்லையற்ற பலவானே! என்னைத் தனியாக விட்டு விட்டு யமலோகம் சென்றாயே! என் வலது கை வெட்டுண்டது! எந்தச் சத்துருவும் கிட்ட நெருங்க முடியாதிருந்த நீ, ராமனால் கொல்லப்பட்டாயா? வானத்தில் தேவர்கள் சந்தோஷப்படுவதைக் காண்கிறேன். வானரர்கள் ஆனந்தக் கூத்து ஆடுகிறார்கள். இனி இந்த ராஜ்யம் எனக்கு என்னத்துக்கு? என் அருமைத் தம்பி போனபின் என் உயிரை நான் எதற்காக வைத்திருக்க வேண்டும்? தம்பியைக் கொன்ற ராமனை நான் சித்திரவதை செய்ய வேண்டும்" என்று துக்கமும் ரோஷமும் மேலிட்டுக் கதறினான். மீண்டும் "ஐயோ! விபீஷணன் வார்த்தையைக் கேளாமற் போனேனே!" என்று பிரலாபித்தான்.

திரிசிரன் முதலிய மக்கள்மார் ராவணனைத் தேற்றினார்கள். "பிரலாபிப்பதில் ஒரு பயனுமில்லை. பிரம்மாவிடம் சக்தியும் கவசமும் வில்லும் பாணங்களும் கிடைத்திருக்க, ஏன் மனத்தளர்ச்சி அடைகிறீர்?" என்று சொல்லித் தேற்றினார்கள். திரிசிரன் யுத்தத்துக்குப் புறப்பட்டான். வேறு பலரும் தொடர்ந்தார்கள்.

பெரும் யுத்தம் நடந்தது. நராந்தகன் ஒரு குதிரையின் மீது ஈட்டி எடுத்துக் கொண்டு வானர சேனையைத் தினறச் செய்தான். சுக்ரீவனையே நோக்கிச் சென்ற நராந்தகனை அங்கதன் ஆயுதமின்றி எதிர்த்து, அவன் குதிரையையும் அவனையும் கொன்று வீழ்த்தினான்.

இப்படியே தேவாந்தகனும் திரிசிரஸும் மாருதியாலும், மகோதரன்

ராஜாஜி

## அடுத்த இதழில்...

●● சர்க்கரை விலை ஏற்றம் ஏன்?

.- ஓர் அலசல்

●● இங்கே ஒரு 'ஜுராஸிக்' சாகசம்!

நீலனாலும் கொல்லப்பட்டார்கள். அதிகாயன் லக்ஷ்மணனுடைய அஸ்திரத்திற்கு இரையானான்.


அதிகாயனும் மாண்டான் என்று அறிந்ததும் ராவணன் மனம் கலங்கிப் போனான்.

"என்ன ஆச்சரியம்! மலை போன்ற தேகங்களும் கடலைப் போன்ற கலங்கா தைரியமும் கொண்ட என் வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக இந்தச் சத்துருக்களால் மாண்டார்கள். இதுவரையில் தோல்வி என்பதை அறியாத என் சூரர்கள் எல்லாரும் இப்போது தோல்வியடைந்து வீழ்த்தப்பட்டார்கள். என் மகன் ஒப்பற்ற இந்திரஜித்து கட்டிய நாகபாசத்தையுங் கூட எப்படியோ தெறித்து விட்டு நிற்கிறார்கள். இந்த ராமனுடைய பராக்கிரமம் எனக்கு விளங்காத ஒரு விந்தையாக இருக்கிறது. இவன் நாராயணனே என்று எண்ணுகிறேன்."


இவ்வாறு ஆச்சரியப்பட்டும் கவலைப்பட்டும் யோசிக்கலானான். மனமுடைந்தான் என்றே சொல்லலாம்.

கோட்டைக்குள் சத்துருப்படை புகுவதற்கில்லாமல், முக்கியமாக அசோக வனத்துக்குள் சத்துருக்கள் நுழையாமலிருப்பதற்குத் தீவிர ஏற்பாடுகள் செய்து விட்டு, அரண்மனைக்குள் தனியாகப் போய்ச் சேர்ந்தான்.

(தொடரும்)



# வீடு/வீட்டு மனைகள் எளிதில் வாங்கிட KKR அளிக்கும் அரிய வாய்ப்பு



KKR நிதி நிறுவனத்தில் ஃபிக்ஸட் டெபாசிட்டாக முதலீடு செய்பவர்களுக்குக் கூடுதலான வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படுவதோடு, வீட்டு மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை எளிதில் வாங்கும் சிறப்புச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

KKRல் முதலீடு செய்யும் டெபாசிட்தாரர்கள் சலுகை விலையில் M.M.D.A. அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை கீழ்க்கண்ட இடங்களில் வாங்கலாம்.

1. KKR கார்டன் (மாதவரம் தபால் பெட்டி) எண்: PPD/LO 80/90
2. KKR டவுன் (மாதவரம் தபால் பெட்டி) — 400 சதுர அடி முதல் 1200 சதுர அடி வரை பல சிறந்த மாடல்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் M.M.D.A. அங்கீகார எண் : B/10206/A2N/90 Dt. 18.4.90
3. பெரம்பூர் டான்பாஸ்கோ ஸ்கூல் அருகில் மாதவரம் நெடுஞ்சாலை நீண்மூர்த்தி நகரில் காலி மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள்.
4. மாதவரம் — ரெட்ஹில்ஸ் பகுதிகளில் இன்டஸ்ட்ரியல் மனைகள் (ஏக்கர்களிலும்) கலப்புத் தவணைகளில் வாங்கும் வசதியும் உண்டு.

அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகளை உருவாக்கிச் சிறந்த முறையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதில் தேர்ச்சி பெற்ற KKR ரெசிடென்சி பிரமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் இவற்றை வழங்குகிறது.

EFFICIENT/KKR/103/94

**KKR ஃபைனான்ஸ் & ஹவுசிங் டெவலெப்மென்ட் பிரைவேட் லிமிடெட்**
121 மாதவரம் ஹைரோடு (வடக்கு)
(லக்ஷ்மி அம்மன் கோயில் அருகில்)
பெரம்பூர் சென்னை 600 011
தொ.பே.: 5376796, 5377777, 5375456

**வட்டியுடன் வாழ்க்கை நலனும் தரும் KKR**

# OWN YOUR FLAT AT MADRAS

**AKSHAYA**
16, 3rd Main Road,
Nanganallur,
Madras - 600 061

**AASHIRWAD**
No.1, 1st Lane,
2nd Main Road, Trustpuram,
Kodambakkam,
Madras - 600 024

**AISHWARYA**
Plot 1 & 2, 7th Main Road,
Dhandeeswarar Nagar,
Velacheri,
Madras - 600 042

**ADITYA**
15/4, Jayammal St., Extn.,
Aminjikarai,
Madras - 600 029

CREATORS
NOT JUST BUILDERS

## ASSOCIATED BUILDERS


2nd Floor, 26, Ranganathan Street, T.Nagar, Madras - 600 017. INDIA
Ph : Off : 4340224 / 4340210. Res : 2345244. Telefax : (044) 2344333

- உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் டீலக்ஸ் ஃபிளாட்டுகளும் பங்களாக்களும் சென்னை நகரின் பல்வேறு கௌரவமான பகுதிகளில் கிடைக்கும்.
- கட்டடப் பணியின் முன்னேற்றத்தையொட்டி, வட்டியில்லாத தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம், அல்லது மொத்த கட்டணமும் செலுத்தி பத்து சதவிகிதம் தள்ளுபடி பெறலாம்.
- முன்னணி நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.
- நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் ரசனையுடன் அழகாக வடிவமைக்கப்படுகின்றன.
- தரமான கட்டமைப்பு; நிர்ணயித்த காலக் கெடுவுக்குள் முடிக்கப்படும்.

**டாக்டர் பேசுகிறார் :**

இது அவசர யுகம். நமக்கிருக்கும் 'டைம் இல்லை' பிரச்னை டாக்டர்களுக்கும் உண்டு. 'வயிற்று வலி', 'முதுகு வலி' என்று நாம் போனால், மூன்றே நிமிடங்களில் பிரிஸ்கிருப்ஷன் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள்!

உடம்பு நேராகலாம்; ஆனால், 'அது ஏன் வந்தது? மீண்டும் வராமலிருக்க என்ன செய்ய? இத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முயற்சியாகத்தான் இப் பகுதி. இதை எழுதும் டாக்டர் சுப்ரமண்யம் எம்.ஜி.ஆரின் பெர்சனல் டாக்டராக இருந்தவர்.




# உடலும் மனமும் புருஷன் மனைவி!

உடல் நலத்துக்கும் மன நிலைக்கும் புருஷன் - மனைவி மாதிரியான பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. அதை நாம் முதலில் புரிஞ்சுக்குவோம். மனத்தில் ஏதோவொரு, அரிப்பு, கவலை, உளைச்சல், அல்லது வேதனை, ஏற்படும் போது மனிதன் அதையே நினைத்து பேதலிச்சுப் போயிடக் கூடாது என்கிறதுக்காக, கடவுள் படைச்சிருக்கிற விஷயம்தான் நோய். முக்கால் வாசி நோய்கள் இந்த ரகம்தான். - 'மனசை திடப் படுத்தி நேராக்கு' அப்படின்னு உடம்பு நமக்கு விடற எச்சரிக்கை.

உதாரணமா 'எக்ஸிமா' என்கிற சரும நோயை எடுத்துக்குவோம். அதைக் குணப் படுத்த மருந்தே கிடையாதுன்னு சொல்லலாம். மன உளைச்சலோ அல்லது கிலேசமோ தீரும் வரை அதை ஒன்றுமே செய்ய முடியாது.

டென்ஷன் காரணமாக ஆஸ்துமா அதிகரிக்கிறது; அல்ஸர் வருகிறது; ரத்த அழுத்தம் உயர்கிறது; இதயம் பாதிக்கப்படுகிறது என்றெல்லாம் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் ஏப்பம் விடுவது கூட ஒரு வித மனோ ரீதியான 'ரியாக்ஷன்'தான்! சில பேர் காலை எழுந்தது முதல், இரவு படுக்கப் போகும் வரை 'ஏவ்' 'ஏவ்' என்று இடி முழக்கம் மாதிரி ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பார்கள். இது psychosomatic disorder — அதாவது மன உறுத்தலின் விளைவான உடல் பாதிப்பு!

மனச் சிக்கல்கள், உளைச்சல்களுக்கான காரணங்களை எடுத்துச் சொல்ல உங்களுக்கு ஒரு டாக்டர் தேவையில்லை. அவற்றை என்னால் நீக்கவும் முடியாது. ஆனால், ஒன்று சொல்ல முடியும். கவலைப்படுவதால் ஆவது ஒன்றுமில்லை. பிரச்னை இருக்கிறதா? அதைச் சமாளிக்க என்ன செய்ய என்று திட்டமிட்டு உறுதியுடன் செயலாற்றுங்கள். அப்படியும் பிரச்னை தீரவில்லை என்றால் அதை ஏற்றுக் கொண்டுவிடுங்கள். கீதையில் பகவான் சொன்னபடி 'நமது கடமையை நமது சக்திக்கு உட்பட்டு சரியாகச் செய்தோம். ஆண்டவன் தந்த பலன் இது' என்று சமாதானமடைவதுதான் சிறந்து வழி. தியானம் உதவும்.

இவ்வாறின்றி, மேலும் மேலும் கவலைப் பட்டுக் கொண்டேயிருந்தால் வயிறு எரிய ஆரம்பிக்கும். இரண்டு கவளம் உணவு உண்டதுமே தம்மென்று ஆகி, நெஞ்சை அடைக்கும். வயிற்றெரிச்சல் என்பதை விட நெஞ்செரிச்சல்னு அதைச் சொல்லலாம். அதுதான் அஸிடிடி. நாளடைவில் அல்ஸரில் கொண்டு போய் விடும்.

நம் வயிற்றில், ஜீரணத்துக்கு உதவும் ஹைட்ரோ குளோரிக் அமிலம் சுரக்கிறது. உணவைத் தாக்கி செரிக்க உதவும் இந்த அமிலம் வயிற்றையே ஏன் பாதிக்கிறதில்லை? அதுதான் இயற்கையின் அற்புத சிருஷ்டி! ஆனால் இந்த அமிலமே அளவுக்கதிகமாகச் சுரந்து வயிற்றிலிருந்து மேலெழும்பி உணவுக் குழாயைக் கூட வீரியமாக எட்டும் போது, பாவம், அந்த உக்கிரத்தைத் தாங்கும் சக்தியுடன் படைக்கப்படாத அந்தப் பாதை படாத பாடுபடுகிறது. நெஞ்செரிச்சல் என்பது இதுவே! மிக அதிகமான அளவில் இது தாக்கும் போது நெஞ்சு வலி கூட ஏற்படும்; தோள் வரைக்கும் வலி பரவ, 'ஹார்ட் அட்டாக்?' என்ற கலவரம் தோன்றும். ஹார்ட் அட்டாக் இல்லைங்கறதை எப்படி கண்டு பிடிக்கலாம்? கொஞ்சம் யோசியுங்க... அடுத்த வாரம் சந்திக்கறப்ப, பதிலைச் சரி பார்த்துக்குங்க!

# கங்கை வழங்கும் நாவல்கள்

| நாவல் | ஆசிரியர் | விலை |
|---|---|---|
| மூன்று முடிச்சுக்கள் | டைரக்டர் கே. பாலச்சந்தர் | 37.00 |
| ஆசையிருக்கு தாசில் பண்ண | " | 20.00 |
| சிவப்பு இதயங்கள் | வாசவன் | 26.00 |
| நாக நந்தினி | கோவி. மணிசேகரன் | 47.00 |
| பொய்ச்சேவல் | " | 14.00 |
| இளவரசி மோகனாங்கி | " | 32.00 |
| இனி | சிவசங்கரி | 45.00 |
| இன்னொருத்தி + இன்னொருத்தி | " | 40.00 |
| இவர்களும் அவர்களும் | " | 14.00 |
| ஏரிக்கடியில் சில கனவுகள் | " | 11.00 |
| 47 நாட்கள் | " | 32.00 |
| காளான் | " | 22.00 |
| மாலையில் பூக்கும் மலர்கள் | " | 28.00 |
| வேரில்லாத மரங்கள் | " | 32.00 |
| புல்தடுக்கி பயில்வான்கள் | " | 20.00 |
| அணில்கள் | " | 14.00 |
| துள்ளமுடியாத புள்ளிமான் | " | 18.00 |
| அம்மா பிள்ளை | " | 27.00 |
| அவர்கள் பேசட்டும் | " | 22.00 |
| இனியவளே | என்.சி. மோகன்தாஸ் | 25.00 |
| வானம் தொடாத நட்சத்திரம் | " | 17.00 |
| பல்லக்கு | ரா.கி. ரங்கராஜன் | 28.00 |
| புரொபசர் மித்ரா | " | 32.00 |
| சின்னக் கமலா | " | 44.00 |
| உள்ளேன் அம்மா | " | 14.00 |
| மறுபடியும் தேவகி | " | 58.00 |
| சத்தியத்துக்குக் கட்டுப்பட்டால் | க. சமுத்திரம் | 26.00 |
| யாருக்கு யார் சொந்தம் என்பது | இரா. பகவானந்ததாசன் | 13.00 |
| மௌனம் எனது தாய்மொழி | " | 22.00 |
| இளம் சருகுகள் | பி.வி. ஆர் | 28.00 |
| ஆடாத ஊஞ்சல் | " | 30.00 |
| எல்லாம் இன்பமயம் | " | 26.00 |
| முற்றத்து முல்லைகள் | " | 30.00 |
| பூப்பந்தல் | " | 30.00 |
| நான் விட்டில் அல்ல | அனுராதா ரமணன் | 16.00 |
| ஜ்வாலை | மகரிஷி | 9.00 |
| துளசிதளம் | எண்டமூரி வீரேந்திரநாத் சுசீலா கனகதுர்கா | 37.00 |
| மீண்டும் துளசி | " | 50.00 |
| வெள்ளை ரோஜா | " | 48.00 |
| எல்லைகளின் விளிம்பில் | வாஸந்தி | 22.00 |
| ப்ளம் மரங்கள் பூத்துவிட்டன | " | 16.00 |
| பறவைகள் பறக்கின்றன | " | 22.00 |
| மூங்கில் பூக்கள் | " | 15.00 |
| பெண்ணால் முடியும் | பி.சி. கணேசன் | 32.00 |
| வானத்து வேலிகள் | உஷா சுப்பிரமணியன் | 12.00 |
| என் கண்ணில் பாவையன்றோ | உமாசந்திரன் | 20.00 |
| ஊன்றுகோல் | " | 27.00 |
| வாழ்வுக்கு ஒரு தாரகை | " | 30.00 |
| சாமந்திப் பூவே சௌக்யமா | தாமரை செந்தூர் பாண்டி | 16.00 |
| பனைமரத்துப் பூக்கள் | " | 18.00 |
| கிராம தேவதை | " | 25.00 |
| வெகுளிப் பெண் | ஜோதிர் லதாகிரிஜா | 25.00 |
| வெண்ணிலாவும் வானும்போலே | அமுதா கணேசன் | 27.00 |
| காத்திரு கண்ணே | " | 22.00 |
| அவளும் ஒரு பெண் | " | 20.00 |
| தொலைதூர வெளிச்சம் | உத்தம சோழன் | 34.00 |
| நினைவாலே சிலை செய்து | முகிலன் | 20.00 |
| பெண்மனம் ஒரு பூவனம் | ராஜகுரு | 22.00 |
| இனி இது வசந்தகாலம் | வேதா கோபாலன் | 36.00 |
| முள்ளில் ஒரு மலர் | கங்காராமமூர்த்தி | 36.00 |
| மோகன நினைவுகள் | ஜனகன் | 22.00 |
| யார் அந்த நாலு பேர்? | புனிதன் | 24.00 |
| திருப்புமுனை | மைனம்பட்டி பாஸ்கர் சாலையூர் சக்திவேல் | 48.00 |
| கதவு | கமலா சடகோபன் | 57.00 |
| ஆதார ஸ்ருதி | ரஸவாதி | 48.00 |
| காற்று வேலி | இருகூரான் | 18.00 |
| மீண்டும் ஒரு துலாபாரம் | " | 22.00 |
| உதய பூமி | கௌதம நீலாம்பரன் | 32.00 |

**சிறப்பு வெளியீடு**
ஏராளமான படங்களுடன் இயக்குனர் முக்தா வி. சீனிவாசன் எழுதிய தமிழ்த்திரைப்பட வரலாறு ரூ.100/-

தேவையான புத்தகங்களை வி.பி.பி. மூலம் பெற கடிதம் எழுதுங்கள்.
வி.பி.பி. தபால் செலவு தனி.

**கங்கை புத்தக நிலையம்**, 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.



மலரும் நினைவுகள்

● பொன் குமார், சேலம்.

*? ஜெயகாந்தனின் "இலக்கணம் மீறிய கவிதை" பற்றி...?*

! 'சென்னைத் தொலைக்காட்சியா இது?' என்று வியக்கவைத்த அருமையான படப் பிடிப்பு; சக்திவாய்ந்த வசனங்கள். 'ஜெ'க்கு ஜே!

● மு. ரவிச்சந்திரன், சேலம்.

*? ஆர். வி. வீட்டு முன்னால் மண் வாரி தூற்றும் போராட்டம் நடத்தப் போவதாக சோனியா காந்தி பேரவையினர் அறிவித் துள்ளனரே?*

! அநாகரிகமான செயல். எழுத்துச் சுதந் திரத்தை, கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் அறிவீனம்.

● ரேஷ்மா பி. தாஸ், கோவை.

*? பேருந்துகளிலும் ரயில்களிலும் 69 சதம் இட ஒதுக்கிடும் 69 சதம் கட்டணச் சலுகை*

## [illegible] திரும்பவும் அம்மாவிடமே தஞ்சம் புகுந்து விட்டாரே?

*யும் கிடைக்க வழியுண்டா?*

! நிரந்தர முதல்வராக விளங்க விரும்பினால் - யார் கண்டது - நாளை இதையும் நிறை வேற்றித்தானாக வேண்டியிருக்கும்!

● எஸ். மல்லிகா, மணலிபுதுநகர்.

*? நீங்கள் அனுபவத்தில் அறிந்து கொண்ட வாழ்வியல் உண்மை?*

! யோக்கியர்களை விட அயோக்கியர்கள் அதிகமாகி விட்ட சூழலில் யோக்கியர்கள் தாம் அயோக்கியர்கள் போல் நடத்தப்படு வார்கள்!

● எஸ். வேங்கடராமன், வேலூர்.

*? 'ஆர்.வி.' ஜாதி வெறியினால்தான் தனது பிராமணர் அல்லாத அமைச்சரவையைக் கலைத்து விட்டார்' என்கிறாரே மு.க.?*

! கலைக்கப்பட்டதில் நமக்கு உடன் பாடில்லை; இந்திய சரித்திரத்தின் கரும்

புள்ளிகளில் ஒன்று என்றே கருதுகிறோம். ஆனால் இதற்கு ஆர்.வி. கூறும் காரணத்தையாவது ஓரளவு ஏற்கலாம்; மு.க. கூறும் காரணம் அபத்தம்.

● கே. ஆர். சுந்தரராஜன், கும்பகோணம்.

*? நீங்கள் காப்பி பிரியரா? டீ பிரியரா?*

! காப்பி பிரியனாக இருந்தேன்; இப்போது டீ பிரியனாக மாறி விட்டேன். அநியாய விலை உயர்வுக்கு அடிபணியக் கூடாது என்ற வீம்புதான் காரணம்.

● சிம்மவாஹினி, வியாசநகர்.

*? காளிமுத்து திரும்பவும் அம்மாவிடமே தஞ்சம் புகுந்து விட்டாரே?*

! அவர் பாஷையிலேயே சொல்வதானால் கருவாடு, மீன் ஆகி விடாது. அ.தி.மு.க.வில் இருந்தாலும், தி.மு.க. வில் இருந்தாலும் கருவாடு கருவாடுதான்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

*? பி.பி. ஸ்ரீனிவாசின் 'மலரும் நினைவுகள்' எப்படி?*

! அவர் வரையில் சுவாரஸ்யம்; பேட்டி கண்டவர் சரியானபடி "ஹோம் ஒர்க்" செய்யாமல் வந்து, தப்புக் கேள்விகள் கேட்டு அசடுவழிந்தது பரிதாபம்.

● ஆர். சங்கரநாராயணன், குணசீலம்.

*? "அடிக்கடி வெளிநாடு போகாமல் ஒழுங்காக வேலை பார்க்கவும்" என்று மந்திரிகளிடம் ராவ் கூறியுள்ளாரே?*

! "ஒழுங்காக வேலை பார்க்காமல் அடிக்கடி வெளிநாடுகள் போகவும்" என்று நமது எம்.எல்.ஏக்களுக்கு முதல்வர் கூறியிருப்பாரோ, ஏட்டிக்குப் போட்டியாக! கிளம்பிட்டாங்கனே!

● எஸ். குருசுவாமி, சென்னை.

*? இடஒதுக்கீடு பிரச்னையில் யோசனை கூறியும் ஆதரவு தந்தும் உதவிய வீரமணிக்கு முதல்வர் நன்றி கூறக் காணோம்?*

! முதல்வர் எதற்குச் சொல்வது? அதான் வீரமணி கூறிக் கொண்டிருக்கிறாரே! 'கர்நாடகாவைப் பாருங்க' என்கிறார். சமுதாய நீதி பிரசாரத்துக்காக குமரி -சென்னை நடைபயணம் மேற்கொண்டிருக்கிறார்... அப்புறமென்ன!

● எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

*? பிரச்னைகளே இல்லாவிட்டால் அரசியல்வாதிகள் என்ன செய்வார்கள்?*

! உருவாக்குவார்கள்! ஹே, அவங்களுக்கா தெரியாது!

● டி.எஸ். சீதாராமன், கும்பகோணம்.

*? லஞ்சம் தலைவிரித்தாடாத மாநிலம் மேற்கு வங்கம்தான் என்ற என் கணிப்பு சரியா?*

! தலை விரித்து ஆடாதிருக்கலாம்; ஆனால் தலை பின்னிக் கொண்டாவது ஆடத்தான் செய்கிறது! புத்ததேவ் பட்டாசாரியா சில மாதங்கள் முன் பதவி விலகக் காரணமே இதுதானே! இப்போ மறுபடி பதவியில் அமரும் முன், நாலு நாடகங்கள் எழுதி, ஆட்சியை ரொம்பத்தான் ஆட்டி வைத்து விட்டார்!

● எஸ். குமார், காரைக்குடி.

*? நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் வானொலி நிலையம் எது?*

! திருச்சி - என் கணிப்பில். அவ்வப்போது ஏதாவது புதுமை தென்படுகிறது. சில அறிவிப்பாளர்களின் குரல் இலங்கைக்காரர்களின் குரலுக்குச் சரியான போட்டி!

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.

*? மறுபடி எம்.பி.ஆக வேண்டுமானால் சு. சுவாமி எங்கே நிற்க வேண்டும்?*

! பிரதமரின் நிழலில் என்பதைப் புரிந்து கொண்டு செயல்பட்டு, காட் ஒப்பந்தம் தொடர்பான தொழிலாளர் பிரச்னை கமிஷன் தலைவராக மத்திய மந்திரிக்குரிய அந்தஸ்துடன் அமர்ந்து விட்டாரே!

● பாலசுப்பிரமணியன், சென்னை.

*? அ.இ.அ.தி.மு.க. மாணவர்கள் ஊர்வலத்தின் போது ஏற்பட்ட சேதத்துக்கு, கட்சியிலிருந்து ஆட்சிக்கு ரூ 1 லட்சம் வழங்கப்பட்டது குறித்து?*

! ஒரு லட்சம் என்பது சரியான கணிப்பு அல்ல. சேதம் அதைவிடப் பல மடங்கு இருக்கும். என்றாலும் நல்ல ஆரம்பம். நாளைக்கு உச்சநீதி மன்றத்தில் ஒருவேளை அம்மையாரின் 69 சதம் சட்டம் செல்லாது என்று தீர்ப்பானால், மக்கள் வரிப் பணத்தில் 69 தந்த வள்ளலை வாழ்த்தி செய்யப்பட்ட ஏராள முழுப்பக்க நாளிதழ் விளம்பரங்களுக்குண்டான காசையும் கட்சி, ஆட்சிக்குக் கொடுத்து விடட்டும்!

● கி. ரமேஷ்பாபு, சேலம் ❑

*? 'ராஜீவ் சிகரம்' என்று பெயரிடப்பட்டது போல், 'ஜெயா சிகரம்' என்று பெயரிடப்படுமா?*

! ஏற்கெனவே முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை 'ஜெயலலிதா வனவிலங்கு சரணாலய'மாக்கி விட்டார்கள். அடுத்து, கொடைக்கானலில் உள்ள ஸுயிஸைட் பாயிண்ட்டுக்கும் நமது முதல்வர் பெயரைச் சூட்டினாலும் வியப்பதற்கில்லை. மகாபுத்திசாலிகள்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கி. ரமேஷ்பாபு, கற்பூரக் கடை,
220 - ஏ. எம். சாலை,
சேலம் - 1.

# COCK BRAND FILE

TRADE MUTHUVEL MARK

**47** ஆண்டுகளாக உங்கள் பத்திரங்களைப் பாதுகாக்க எங்கள் சேவல் மார்க் ஃபைல்கள் பயன்பட்டு வருவதுபோல உங்கள் சேமிப்புகளை பாதுகாக்க எங்கள் டெபாசிட் திட்டம்...

**குமுலேட்டிவ் டெபாசிட்டில் முதலீடு செய்து மூன்றே ஆண்டுகளில் இருமடங்காக பெறுங்கள்.**

| கணக்கிடப்படும் வட்டி விகிதம் |
|---|
| **24%** |
| PER ANNUM |

| மாதங்கள் | ரூ.1000க்கு முதிர்வுத் தொகை | வருடாந்திர வட்டி சதவீதம் |
|---|---|---|
| 12 | ரூ. 1260 | 26% |
| 24 | ரூ. 1587 | 29.35% |
| 36 | ரூ. 2000 | 33.33% |
| 48 | ரூ. 2520 | 38% |
| 60 | ரூ. 3175 | 43.5% |

குறைந்தபட்ச டெபாசிட் ரூ.1000

## MUTHUVEL INDUSTRIES

**Mfrs. of COCK BRAND OFFICE FILES**
**Angappa Chettiar Industrial Complex,**
20-A, Round Road, P.B. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.

✆ Off: (0451) 23316, 25260 & 27637. Res: 25643 & 23726.
Grams: COCKFILE.

***உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி***

ADWAVE/MU4698/Tam BR

*We are proud to announce that our deposit crosses more than one crore with the valuable support of our shareholders*

# சலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

SBF

பதிவு அலுவலகம் : 8, கற்பகாம்பாள் நகர்,
மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003. போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8.30 முதல் மாலை 5.30 வரை
ஞாயிறு காலை 8.30 முதல் பகல் 12.30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுக்கு மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

**கடன்** நகைகள் பேரில் கிராம் 10க்கு ரூ. 3000/- வழங்கப்படும்.

## இயக்குநர்கள்

| பெயர் | விலாசம் | தொழில் |
|---|---|---|
| திரு T.V. சீனிவாசன் | 15 லஸ் அவின்யூ<br>சென்னை - 4 | நிதி ஆலோசகர்<br>Formerly SBI |
| திரு P.K. சந்திரசேகரன் | 89 போயஸ் கார்டன்<br>சென்னை- 86 | P.K. வடிவேல்மாள் குரூப்<br>இரும்பு வியாபாரம் |
| திரு ப்ரவின் கோவிந்தராவ் | 22 போயஸ் கார்டன்<br>சென்னை - 86 | Architect<br>P.S. Govind Rao, Madras. |
| திருமதி P.C. சுந்தரவதனி | 89 போயஸ் கார்டன்<br>சென்னை - 86 | சுந்தரவதனி கல்யாண<br>மண்டபம், எழும்பூர்,<br>சென்னை-7 ☎ 8281078 |
| திரு P.K.C. ரமேஷ் | 89 போயஸ் கார்டன்<br>சென்னை - 86 | பிரசாந்த் ஸ்டீல்ஸ் |
| திரு D. தனுஷ்கோடி | 21/1A பழைய<br>குயவர்பாளையம்,<br>மதுரை - 625 009 | Nippon Furniture, Madurai. |
| திரு P.C. பாஸ்கர் | 89 போயஸ் கார்டன்<br>சென்னை - 86 | Annamalai Steels |
| திரு K.R. நிரஞ்ஜன் குமார் | 1 பின்னி ரோடு<br>சென்னை - 86 | K.V.R. பஸ் சர்வீஸ்<br>சென்னை. |
| திரு P.C. சியாம் சுந்தர் | 89 போயஸ் கார்டன்<br>சென்னை -86 | Deepu Steels |
| திரு K.G. கிருஷ்ணன் | Y-210, 2வது அவின்யூ<br>சென்னை - 40. | ஜெனரல் ஃபாப்ரி கேட்டர்ஸ்<br>(பி) லிமிடெட் |

# AVAIL

**Sullivan Garden Benefit Fund Lockers**




• ஈ-ஆயிலுடன் கே.ஜே. குமார்.

"ஒரு நாள் டிராபிக் சிக்னலில் காத்திருந்தேன். பச்சை விளக்கு எரிந்ததும், முன்னால் இருந்த ஒரு லாரி புறப்பட, ஒரே கரும்புகை மண்டலம். லாரிக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஸ்கூட்டரில் இருந்த சின்னப் பையன் மூச்சுத் திணறி இருமினான். இந்தக் காட்சி என் மனத்தை மிகவும் உறுத்தியது.

"ஒரு முறை ஜப்பான் சென்றிருந்தபோது, அங்கே விற்பனை செய்யப்படும் ஈ-ஆயில் பற்றிக் கேள்விப்பட்டேன்.

# லிட்டருக்கு நாலு சொட்டு!



அந்த ஈ-ஆயில், வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையைக் கணிசமாய்க் குறைக்கும்; பெட்ரோலையும் சேமிக்கும் என்று அறிந்தவுடன் ஒரே கல்லில் இரட்டை மாங்காய் அடித்த மகிழ்ச்சி.

"ஈ-ஆயில் தயாரிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு, அதனை இந்தியாவில் தயாரித்து விற்பனை செய்யும் முயற்சியில் இறங்கினேன்" என்கிறார் ஆஸ்டன் என்ஸைம் இந்தியா நிறுவனத்தின் தலைவரான கே. ஜே. குமார்.

பரீட்சார்த்த முறையில் தயாரித்து, சென்னை நகரின் சில இரண்டு சக்கர, மற்றும் நான்கு சக்கர ஓட்டுனர்களிடம் கொடுத்து டெஸ்ட் செய்ததில் அனைவருக்கும் திருப்தியாம். பெருங்குடியில் தொழிற்சாலை தொடங்கியாகிவிட்டது.

"பெட்ரோல் சேமிப்பிலும், புகை குறைப்பிலும் ஈ-ஆயில் என்ன செய்கிறது?"

"வாகனங்களில் எரிபொருள் முழுமையாய் எரிக்கப்படாததால், கார்பன் மானாக்ஸைடு புகையாய் வெளியேறுகிறது. ஈ-ஆயிலை லிட்டருக்கு நான்கு துளிகள் வீதம் சேர்க்கும்போது, ஏறத்தாழ முழுமையாய் எரிபொருள் எரிக்கப்பட்டு, மிகமிகக் குறைவான புகை மட்டுமே வெளியேறுகிறது. வழக்கத்தைவிட அதிக அளவு எரிசக்தி கிடைப்பதால், அதிக மைலேஜ் கிடைக்கிறது."

"ஈ-ஆயிலைப் பயன்படுத்துவதால், எஞ்சினோ மற்ற பாகங்களோ எந்தவிதத்திலும் பாதிக்கப்படாதா?"

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், ஈ-ஆயிலின் சில சொட்டுகளைத் தண்ணீரில் கலந்து, கடகடவெனக் குடிக்கிறார் குமார்! "பயோ டெக்னாலஜி அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. மனித உடம்புக்கே ஒன்றும் ஆகாது என்றால் மிஷினுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்திவிடும்?"

ஈ-ஆயிலின் மற்ற பலன்களையும் அடுக்குகிறார் குமார்.

- துரித ஸ்டார்ட்
- ஸ்பார்க் பிளக், எஞ்சின், சிலிண்டர், பிஸ்டன் இவற்றில் கரி படியாது.
- பெட்ரோல், டீசல் இருவகை வாகனங்களுக்கும் பயன்படுத்தலாம்.
- நீடித்த எஞ்சின் ஆயுள்
- சீரான ஓட்டம்

"விலை ரொம்ப அதிகமாக இருக்குமோ?"

"10 மி.லி. புட்டி விலை பத்து ரூபாய். இதை ஐம்பது லிட்டர் பெட்ரோல் (அ) டீசலுக்குப் பயன்படுத்தலாம்."

"எல்லாம் சரி, ஈ-ஆயில் என்பது எவற்றின் கலவை?"

"அதை மட்டும் கேட்காதீர்கள்; அது தொழில் ரகசியம்!"

- மௌலி

# மனைமாட்சியும் மிர்ச் மசாலாவும்

சத்யா

ஆபீஸ் முடிந்து வீடு திரும்பிய போது, தன் வீட்டுக்குள்தான் நுழைகிறோமா, வீடு மாறி வந்து விட்டோமா என்ற சந்தேகம் ஏற்பட்டது ராகவனுக்கு. ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு இரு சிறுவர்கள், ஷெல்பின் மீது ஒரு கைக்குழந்தை, சோபா கைப்பிடியில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு ஓரிரு மாமிகள் என்று சுமார் இருபது இருபத்தி ஐந்து பேர் ஏக அமர்க்களமாக டீ.வி.யில் 'ஒளியும் ஒலியும்' பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் மனைவி மாலதி உட்பட யாரும் அவனைக் கவனித்ததாகக் கூடத் தெரியவில்லை.

'ஒளியும் ஒலியும்' முடிந்து எல்லோரும் வெளியேறிய பிறகுதான் மாலதியே ராகவனைக் கவனித்தாள்.

''அட, எப்ப வந்தீங்க? ரெண்டாவது பாட்டுலயா? மூணாவது பாட்டுலயா?''

''பஸ்லேதான் வந்தேன்'' என்றான் ராகவன் கோபத்துடன்.

''ஏன் இப்படிக் கோவிச்சுக்கிறீங்க? பக்கத்துத் தெருவிலே கரண்ட் இல்லையாம். அதான் எல்லாம் நம்ம வீட்டுக்கு வந்துட்டாங்க. இங்கே கரண்ட் ஆஃப் ஆனா நாங்க அங்கே போறதில்லையா? அதுமாதிரிதான்.''

''பக்கத்துத் தெருவுக்குப் போயாவது டீ.வி. பார்த்தாகணுமா? அப்படி என்ன டீ.வி. பைத்தியம்? ஒரு நாள் கூட பார்க்காம இருக்க முடியாதா? சே! ஏன்தான் டீ.வி. வாங்கினோமோன்னு இருக்கு.''

''நீங்களும்தான் நடுராத்திரியிலே கொட்டக் கொட்ட விழிச்சுக்கிட்டு ஃபுட்பால் மேட்ச் பார்த்து, எங்க தூக்கத்தைக் கெடுக்கறீங்க. நாங்க ஏதாவது சொன்னோமா?''

''ஃபுட்பால் மேட்ச் நாலு வருஷத்துக்கு ஒரு தடவை வருது.''

''ஆனாலும் நடுராத்திரியிலே வருதே. அதுமட்டுமா? கிரிக்கெட், டென்னிஸ்னு வந்துக்கிட்டுத்தானே இருக்கு?''

''சரி, நீ வேணும்னா பார்த்துத் தொலை. குழந்தைகளையாவது கட்டுப்படுத்தி வை. எப்பப் பார்த்தாலும் டீ. வி. பார்த்துக்கிட்டேயிருந்தா, எல். கே. ஜி. படிக்கும்போதே சாளேஸ்வரம் வந்து யு. கே. ஜி. படிக்கும் போது கண் ஆபரேஷன் பண்ண வேண்டியதுதான்.''

''நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேங்க. ஏதோ ஒளியும் - ஒலியும், சினிமா, டிராமா பாக்கறதோட நிறுத்திக்குங்கன்னு. சொன்னா கேட்டாத்தானே? வயலும் வாழ்வும், மனைமாட்சி கூட பார்த்தாகணும்னு அடம் பிடிக்கிறாங்க.''

''நீ கட்டுப்பாடா இருந்தாத்தான் குழந்தைகளும் கட்டுப்பாடா இருப்பாங்க. போதாக்குறைக்கு ஸ்டார் டீ.வி., சன் டீ.வி., ஜீ டீ.வி., மா. டீ.வின்னு ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு சேனல் ஆரம்பிச்சுக்கிட்டு வராங்க. இது எங்கேதான் போய் முடியுமோ தெரியலை.''

''சரி சரி, சீக்கிரம் சாப்பிட வாங்க. ஜுனூன் ஆரம்பிக்கிற நேரமாச்சு.''

இந்த டெலிவிஷன் மோகத்திலிருந்து குழந்தைகளையும் மனைவியையும் எப்படி விடுவிக்கப் போகிறோமென்று அவனுக்குத் தெரியவில்லை.

மறுநாள் ஆபீஸ் புறப்படும்போது கண்டிப்பாகச் சொல்லிவிட்டுப் போனான்.

''நான் சாயங்காலம் திரும்பி வரும்போது ரெண்டு பேரும் படிச்சுக்கிட்டு இருக்கணும். டீ. வி. பார்த்துக்கிட்டிருந்தீங்கன்னா அடிச்சுப் பிச்சிடுவேன்!''

மாலையில் வீடு திரும்பும்போது, குழந்தைகள் ரவியும் கீதாவும் தலா ஒரு புஸ்தகத்தைத் தலைகீழாக வைத்துக் கொண்டு ஓரக்கண்ணால்தான் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஒழுங்காப் படிங்க!'' என்று அதட்டியபடியே டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாள் மாலதி.

''நீங்க சொன்ன மாதிரியே பசங்களைப் படிக்கச் சொல்லிட்டேங்க. நான்தான் டீ.வி. பார்த்துக் கிட்டிருக்கேன். அதை விட்டா வேறென்ன இருக்கு எனக்கு? கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. 'மிர்ச் மசாலா' முடிஞ்சதும் சாப்பிடலாம்'' என்றாள்.

ராகவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்ன கேள்வி கேட்டாலும் டெலிவிஷனைப் பார்த்துக் கொண்டு தான் பதில் சொல்கிறார்கள். டீ.வி. பார்த்துக் கொண்டே குறுக்கும் நெடுக்குமாக நடந்து ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொள்கிறார்கள்.

இந்த டெலிவிஷன் பித்து எதில் போய் முடியுமோ என்று கவலைப் பட்டான்.



மறுநாள்காலையிலேயே வீடு அமர்க் களப்பட்டுக் கொண்டிருந்தது.

"டேய் ரவி. ஏண்டா இப்படி 'ஜுனூன்' பிடிக்கிறே? கொஞ்சம் கடைக்குப் போயிட்டு வாடா!"

"போம்மா, எப்பவும் என்னையே கடைக் குப் போகச் சொல்றே. கீதாவைப் போகச் சொல்லேன்."

"அவ கூட 'முகாபலா' போடலாமாடா? கீதா உன் தங்கைதானே? இப்படி ரெண்டு பேரும் என்னை 'இம்திஹான்' பண்ணினீங் கன்னா நான் வீட்டை விட்டுப் போயிட றேன். அப்புறம் 'காணாமல் போனவர்கள் பற்றிய அறிவிப்பு'லேதான் நீங்க என்னைப் பார்க்க முடியும்."

"எல்லா வேலையையும் நான்தான் செய் யணும்னு 'கானூனா'? போம்மா."

" 'தேக்டா பாயி தேக்'. சும்மா 'ஜமீன் ஆஸ்மான்' குதிக்காதே. காலையிலே நான் தான் வீட்டைப் பெருக்கி வாசல்லே கோலம் போட்டேன். நீயா போட்டே? ஒழுங்காப் பேசு!" - என்று கீதா, ரவியுடன் சண்டைக்குப் போக,

"நான் ஒழுங்காத்தாண்டி பேசறேன். முதல்லே நீ 'ஜபான் சம்பால்கே'-டி!" என்று ரவி பதிலுக்கு அவள் மீது பாய்ந்தான்.

"சொல்ற பேச்சைக் கேக்கற மாதிரி குழந் தைகள் பிறக்கறதுக்கு 'கிஸ்மத்' பண்ணியிருக் கணும். எனக்கு 'கிஸ்மத்' இல்லே. இப்படி சண்டை போடறீங்களே. யாராவது 'அஜ்னபி' வந்தா என்ன நினைச்சுக்கு வாங்க?"

பற்றிக் கொண்டு வந்தது ராகவனுக்கு. ''அறைஞ்சு பல்லைப் பேத்துடுவேன். ஒழுங் காப் பேசறதுக்கு என்ன கேடு?'' - என்று கத்தி, குழந்தைகள் இருவரையும் மாற்றி மாற்றி அறைந்தான்.

''ஏன் சின்ன விஷயத்துக்கெல்லாம் இப்படி 'மிர்ச் மசாலா' ஆயிடறீங்க? நம்ம 'தர்த்'துக்காகத்தானே குழந்தைங்க ஏங்க றாங்க? அவங்ககிட்டே 'டைகர்' மாதிரி நடந்துக்கறீங்களே?''

ராகவனுக்கு மகா கோபம் வந்தது. ''இப்படியே பேசிட்டிருந்தியோ நான், 'நுக்கட்'லே தனி வீடு பார்த்துக்க வேண்டியதுதான்'' என்றவன், நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"உங்களுக்கு எப்பவும் டீ.வி. ஞாபகம் தான். எங்களைச் சொல்லிட்டு நீங்க டீ.வி. பத்தியே நினைச்சுக்கிட்டிருந்தா இப்படித் தான் பேச வரும்'' என்று கிண்டல் செய்தாள் மாலதி.



# பெங்களூர் தமிழ் மேயர்!

பெங்களூர் தமிழ் மேயர் பற்றிப் பக்கம் பக்கமாகப் படித்திருப்பீர்கள். ஆனால் மேயர் குப்புசாமி முதலிலேயே சொல்லிவிட்டார், தான் பிறப்பால் மட்டும் தான் தமிழர்; மற்றபடி உடம்பில் ஓடுவது கன்னட ரத்தம் தான் என்பதாக.

பரம்பரை காங்கிரஸ்காரர். '90 இல் பெங்களூர் மாநகராட்சித் தேர்தலில் ஜெயித்தவர். ஐம்பத்தேழு வயது.

மேயர் பதவிக்காலம் இவருக்கு மொத்தமே பதினோரு மாதங்கள்தான். இந்தக் குறுகிய காலகட்டத்தில் செய்யக் கூடியவை ஏதுமில்லை என்று பகிரங்கமாகச் சொல்கிறார். "இதற்கு முன்னால் பதவியில் இருந்தவர்கள் விட்டுப் போன காரியங்களைத் தொடர்ந்து செய்து முடித்தாலே போதும்" என்கிறார்.

ஏற்கெனவே பசுமைப் புரட்சி காட்டிக் கொண்டிருக்கும் பெங்களூரில் மேலும் பல மரக்கன்றுகள் நட்டு, பூங்காக்கள், தோட்டங்கள் நிறுவி இன்னும் எழிலாக்கவிருப்பதாகச் சொல்லும் குப்புசாமி, இதற்குத் தனியார்த் துறையினரின் ஒத்துழைப்பைக் கேட்கப் போகிறாராம்.

தமிழர்கள் வாழும் பகுதிக்கு எவ்வித வளர்ச்சித் திட்டங்களும் மாநகராட்சியால் வழங்கப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டை ரொம்பக் காரமாகச் சொல்லப்படுவது இது. உடனே, உடனே மறுக்கிறார் மேயர்.



• பிரேமா

நலத்திட்டங்கள் வழங்குவதில் எப்போதும் எவ்விதப் பாகுபாடும் காட்டப்படுவது இடையாது என்கிறார்.

தனது 11 மாதப் பதவிக் காலத்தில், பெங்களூரின் எல்லாத் தொகுதிகளுக்கும் நேரடி விஸிட் செய்து குறைகளைக் கண்டு சீர் திருத்தவிருப்பதாகச் சொல்கிறார் மேயர் குப்புசாமி. நம்மூர் எம். எல். ஏக்கள் கவனிப்பார்களாக!

துணை மேயராகப் பொறுப்பேற்றிருக்கும் பிரேமா, முந்நாள் விமானப் பணிப்பெண்! விமானப் பணிப்பெண்கள் திருமணம் செய்து கொண்டால், வேலையை விட்டுவிட வேண்டும் என்ற அந்நாளைய சட்டப்படி வேலையை விட்டவர், நேரடியாகக் குதித்திருப்பது கார்ப்பரேஷன் பணியில்!


அம்மணிக்குத் தாய் மொழி கூர்கி. ஆயினும் கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி என்று சகலத்திலும் புகுந்து விளையாடுகிறார்.

பதவிக்கு வந்த புதிதில் அதைச் செய்யப் போகிறேன்; இதைச் செய்யப் போகிறேன் என்றெல்லாம் ஸ்டேட்மெண்ட் விடாமல், மேயரின் பணிகளுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருப்பதே என் முதல் பணி' என்கிறார் பிரேமா.

"நானே மேயராகியிருக்க வேண்டியவள். கொஞ்சம் மிஸ்ஸாகிவிட்டது" என்று லேசாக வருத்தப்படவும் செய்கிறார்!

— அமுதவன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

# MNEY

## *OPENING UP NEW OPPORTUNITIES*

Your family comes first with you. You want to give them all the comforts of life and a future they can look forward to. Annamallai Finance can make it happen for you.

We at **Annamallai Finance** have the ways and means to make it all better for you by putting your hard earned money to work in the best possible ways. Opening up the doorways to numerous opportunities. In utmost safety. And there is the **FA+ rating from CRISIL** to vouch for us.

To know more about how we can help you reach all your financial goals, write in today.

**Awarded FA + by CRISIL**

## ANNAMALLAI FINANCE LTD

Regd. Office: 252, Mettupalayam Road, Coimbatore - 641 043

***Your Prosperity is our Concern***

* This is in continuation to the Statutory Advertisement released in The Hindu on 17.6.94

Contact Telephone Nos: ● **Bombay**: 243602 ● **Bangalore**: 2227365 ● **Coimbatore**: 231797 ● **Delhi**: 5752417 ● **Ernakulam**: 360425 ● **Erode**: 79800 ● **Gobichettipalayam**: 2924 ● **Kallakurichi**: 396 ● **Karaikudi**: 3029 ● **Kozhikode**: 58837 ● **Madurai**: 24450 ● **Madras**: Spencer Plaza Branch: 8522538 Mount Road Branch: 8262430 Anna Nagar Branch: 6263447 T.Nagar Branch: 440248 Mylapore Branch: 4992993 ● **Pondicherry**: 38507 ● **Pollachi**: 4595 ● **Pune**: 667178 ● **Salem**: 68899 ● **Sathyamangalam**: 20420 ● **Tirunelveli**: 25144 ● **Trichy**: 43304 ● **Vellore**: 26371.

SASI / 559 / 94

**Deposit Mobilisation months upto September '94**

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

''சொட்டு நீலத்துடன்''
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன்
தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே
இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

**உபயோகிப்பவர்களுக்கு.**

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில்
நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக
உறிஞ்சப்பட்டு இன்டென்ட் ஆக்ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது
உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது.
ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST
சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்று சான்றிதழ் பெற்றது
உஜாலா. இது ஜோதி லேபரட்டரியின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.




**JYOTHY LABORATORIES**

**Marketing Office:**
**44, Shivshakthi Ind. Estate, Marol,**
**Bombay-400 059.**

**Regd. Office: Sreekrishna Nagar**
**Bombay-400 066.**

# உஜாலா